
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ மீனுட்சியம்மை,
மதுரை.

CONNEMARA PUBLI
23 JAN 196
MADRA

மாலை 10] பிலவங்க - மார்கழி - ஜனவரி, 1968 [மணி 4

சென்னை அரசாங்க அறநிலையப்



பெண்ணாகடம் ஸ்ரீ பிரளய கலேசுவரர் கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள் வருகை தருதல் (11—11—67).

## பொருளடக்கம்


1. தமிழகத்தின் திருக்கோயில்கள்
2. திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு
3. சைவசமயத் தோத்திர சாத்திர நூல்கள்
4. திருப்பாவைச் செழும் பொருள்
5. சமய இலக்கியங்களில் மரங்கள்
6. சமுதாய முன்னேற்றமும், சமயத்தின் தேவையும்
7. வைகுண்ட ஏகாதசியும், திருஅத்யயன உத்வைமும்
8. ஸ்ரீஅருணகிரிநாதர் காட்டியவழி
9. கோணைப் புகழுமின்
10. திருவாதிரை விழாச் சிறப்பு
11. திருவத்யயன உத்ஸவம்
12. திருக்குறள் விளக்கும் மெய்ப்பொருளியல்
13. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
14. தல வரலாற்றுக் குறிப்புகள்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-**

**தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

23 JAN 1968


# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 10] பிலவங்க - மார்கழி-ஜனவரி, 1968 [மணி 4


## தமிழகத்தின் திருக்கோயில்கள்

முன்னுரை :

தமிழகம் எண்ணற்ற பல திருக்கோயில்களை உடையது. தமிழகம் போல மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்த கோயில்களை உடைய நாடு வேறு பிறிதெதுவும் இல்லை எனலாம். தொல்காப்பியம் திருக்குறள் திருமுருகாற்றுப்படை மதுரைக்காஞ்சி பரிபாடல் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற பழந்தமிழ் நூல்களில், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்டே, தமிழகத்தில் கோயில்கள் பல அமைந்திருந்தமையும், அங்குப் பலதிற விழாக்கள் வழிபாடுகள் நடந்து வந்தமையும் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மூவாயிரம் ஆண்டுகட்கும் மிக முற்பட்ட தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில், "இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்" என்னும் நூற்பாவால், கோவில் என்னும் சொல்லுக்குப் புணரியல் விதி வகுக்கப் பெற்றுள்ளது.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால், [அ]ன்றைக் காலத்திலேயே கடவுளர்க்குப் படிமைகள் (Idols) என்னும் தெய்வத் திருவுருவங்களின் பிரதிமைகளைக் கோயில்களில் அமைத்து மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதும்; அக்கோயில்களில் நிகழும் அறச் செயல்கள் நன்கினிது முறையே நடைபெறுகின்றனவா என்று கண்காணித்து 'அறப்புறம் காவல்' புரிதற் பொருட்டு, அரசர்கள் தத்தம் நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதிகள் பலவற்றுக்கும் அவ்வப்போது சென்று மேற்பார்வையிட்டு வருவர் என்பதும், தெளிவுற அறியப்படுகின்றன.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

எனவரும் திருக்குறளால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் காலத்திலேயே, நாடோறும் நிகழும் நித்திய பூசையும் அவ்வப்போது நித்தியத்தில் தாழ்வுதீரச் செய்யப்படும் நைமித்திகம் ஆகிய பெருவிழாக்களும் நடைபெற்று வந்தமை, நன்கினிது தெளியப்படுகின்றது.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே.

எனவரும் திருமந்திரமும் இவ்வுண்மையை ஓராற்றான் வலியுறுத்துதல் காணலாம். இங்ஙனம் நமது பழந்தமிழ் இலக்கியங்

களில் கோயில்களைப் பற்றி வரும் செய்தி கள் மிகப்பலவாகும்.

கோயில்கள் நமது பழம்பெரும் நாகரி கத்தையும், பண்பாட்டு நலங்களையும் விளக்கிக் கொண்டு நிற்கும் அடையாளங் களாகும். தமிழகக் கோயில்கள் கட்டிடக் கலையிலும், சிற்பத் திறனிலும், ஈடும் எடுப் பும் இன்றிச் சிறந்து விளங்குபவை. ஆழ் வார்களும் நாயன்மார்களும் புகழ்ந்து பாடித் துதித்தவை! பல்லவரும் சோழரும் பாண்டியரும் போன்ற பேரரசர்கள் பலர் திருப்பணி செய்தனவும், புதிதாக எடுப்பித் தனவும், நன்கொடைகள பல வழங்கிய னவுமாக எண்ணிறந்த கோயில்கள், தமிழ கத்தில் உள்ளன. மகாபலிபுரம் காஞ்சிபுரம் திருவண்ணுமலை சிதம்பரம்திருவரங்கம் கும் பகோணம் தஞ்சை மதுரை இராமேசுவரம் முதலிய எத்தனையோ பல தலங்களிலுள்ள கோயில்கள், இன்றும் நாடோறும் பல்லா யிரக் கணக்கான மக்கள் கண்டு மகிழும் மாட்சி உடையனவாகத் திகழ்கின்றன.

### சிறப்பு :

இராசசிம்ம பல்லவன் (கி. பி. 685-705) கட்டிய காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், இரண்டாம் பரமேசுரவர்மன் (கி. பி. 705-710) கட்டிய வைகுண்டப் பெருமாள் கோயில், இராசராச சோழன் (கி.பி.985-1014)எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோயில், இராசேந்திர சோழன் (கி. பி. 1147-1044) எழுப்பிய கங்கைகொண்ட சோழபுரம் கோயில், இரண்டாம் இராச ராசன் (கி. பி. 1147-1173) அமைத்த தாரா சுரம் கோயில், மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178-1223) தோற்றுவித்த திரிபு வனம் நடுக்கந்தீர்த்த நாதர் கேரயில் முதலியன, தமிழகத்தின் சிற்பக் கலைத் திறனிலும், கட்டிடக் கலைத் துறையிலும் எல்லையற்ற பெருஞ்சிறப்பு வாய்ந்தவை.

### அயலவர் ஈடுபாடு :

நமது தமிழகக் கோயில்களை அயல் நாட்டவரும் கண்டு அகம் மிக மகிழ்ந்து போற்றுகின்றனர். ஆட்சன் (Hodgson) என்ற ஆங்கிலேயர், காஞ்சிபுரம் திருவே கம்பர் கோயில் மதிலைச் செப்பனிட்டார். லியோனர்ட் பிளேசு (Leonard Place) என்னும் அயலவர், மதுராந்தகம் பெரு மாள் கோயிலுக்குத் திருப்பணி செய்தார். வில்லியம் காரோ (Willaim Garrow) என்பவர் பவானி சங்கமேசுவரர் கோயில் வேதநாயகி அம்பிகைக்குத் தந்தத்தால் செய்த ஊஞ்சல் ஒன்றை வழங்கி மகிழ்ந் துள்ளார். மதுரைக் கோயில் மீனாட்சி அம்மைக்கு, ரூஸ்பீட்டர் (Rous Peter) என்னும் வெள்ளையர், தங்கத்தாற் செய்து மணிகள் பதிப்பித்த அங்கவடிகளை (Stirrups) அளித்திருக்கின்றார். உலகப் புகழ்பெற்ற சாமர்செட்மாம் (Somerset Maugham) என்னும் புதின நூல் ஆசிரி யர், தாம் மதுரைக் கோயிலைக் கண்டு வியந்து, விம்மித முற்றதாகக் குறிப்பிட்டுள் ளார். இத்தகைய செய்திகளால் தமிழகக் கோயில்களின் சிறப்பும் பெருமையும் புலனாகும்.

### சிற்ப, கட்டிடக் கலைகள் :

தமிழகத்துக் கோயில்கள் பண்டைக் காலத்தில் புல்வேறு அமைப்புகளைக் கொண்டு விளங்கின. அமைப்பு முறை களை ஒட்டிக் கோயில்கள் பலவகைப் பெயர்களைப் பெற்றிருந்தன. ஆரூர்ப் பூங் கோயில், கடம்பூர்க் கரக்கோயில், மீயச் சூர் இளங்கோயில், வைகல் மாடக் கோயில், கருப்பறியல் கொகுடிக்கோயில் என இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டு களுக்கும் முன்னரே இருந்து வந்த பல வகைக் கோயில்களின் பெயர்களைத் திரு நாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். தமிழகக் கோயில்களின் கட்டிடக் கலைச் சிறப்பும் பெருமையும், சுமத்திரா, ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேயா, இந்தோனே சியா, சயாம், கம்போடியா, சம்பா முதலிய கடல் கடந்த நாடுகளிலும் பரவி விளக்க முற்றன. ஜாவாவிலுள்ள போராபுதூர் (கி. பி. 750-850) புத்தர் கோயிலும், கம் போடியா அங்கோர்தாம் (கி. பி. 802-820) சிவன் கோயிலும், அங்கோர்வாட் (கி. பி. 1110-1150) பெருமாள் கோயிலும், தமிழ கக் கோயிற் கட்டிடக் கலை-சிற்பக்கலை களினுடைய வளர்ச்சியின் சிறப்பையும் பரவலையும் விளக்குவனவாகும்.

**ஓவியமும் காவியமும் :**

தமிழகக் கோயில்கள் ஓவியம் காவியம் என்னும் கலைகளின் நிலைக்களமாகத் திகழ்ந்தன. மாமண்டூர்க் குகைக்கோயில் வெளிமண்டபத் தூண்களிலும், மாமல்லபுரம் ஆதிவராக மண்டபத்தின் விதானத்திலும், தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறை வெளிச் சுற்றுப்புறச் சுவர்களிலும், நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம் கோயிலிலும், சித்தன்னவாசல் முதலிய இடங்களிலும் ஆயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட, பழமைமிக்க சிறந்த அழகிய ஓவியங்கள் கண்டு களிக்கத் தக்கவை.

ஒவ்வொரு கோயிலுக்கும், அதனைச் சார்ந்த தலத்திற்கும் எனக் கோவை உலா தூது மாலை அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களும், தலபுராணங்களும் போன்ற பன்னூற்றுக் கணக்கான இலக்கியச் செல்வங்களாகிய காவியங்கள், மிகப்பலவாகத் தோன்றி விளங்கி வருகின்றன.

**இசை :**

கோயில்களில் இசைக்கலை பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் "நாளும் இன்னிசையால்" தமிழ் பரப்பி வந்தனர். கோயில்களில் வகைவகையான தோற்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி துளைக்கருவி ஆகிய இசைக்கலைக் கருவிகள் பயிலப் பெற்றன. குடுமியான்மலைச் சிகாநாதர் கோயிலில் உள்ள மகேந்திரவர்மனின் (கி. பி. 600-630) கல்வெட்டு, இசைக்கலை உண்மைகள் பலவற்றை அறிவிக்கின்றது. மதுரைக் கோயிலில் திருச்சுற்றின் கூத்தப்பிரான் முன்னிலையில் உள்ள தூண் ஒன்றில் 35 வகையான தாளங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தேவார நாயகம், தமிழ் விரகர் என்னும் பெயர்களையுடைய அலுவலர்கள் பலர், பண்டைக் காலத்திற் கோயில்களில் அரிய பல சிறந்த பணிகள் ஆற்றி வந்தனர்.

**நடனம் :**

கோயில்களில் இசைத் தமிழே யன்றி, நாடகத் தமிழும் போற்றி வளர்க்கப்பெற்று வந்தது. கதை தழுவி வரும் நாட்டிய நாடகம், மெய்ப்பாடுகளாகிய உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் **நிருத்தியம்,** தாளத்தை அடிப்படையாகக் கொண்ட **நிருத்தம்,** இவற்றோடு தொடர்புடைய **கவுத்துவம்** முதலியன, கோயில்களில் போற்றி வளர்க்கப்பட்டன. திருவண்ணாமலை சிதம்பரம் தஞ்சாவூர் முதலிய கோயில்களில், சிவபிரான் ஆடியருளும் தாண்டவத்தின் 108 கரண வகைகள் சிற்பமாக வடித்துத் தரப்பெற்றுள்ளன. கோயில்களில் ஆடரங்கும் நாடகசாலைகளும் இருந்தன. இசையிலும் நாடகத்திலும் வல்ல நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், *கானம்பாடி,வாத்தியமாராயன் முதலியோர்* பலர் இருந்தனர்.

**கல்வெட்டு :**

நம்முடைய முன்னோர்களின் வரலாற்றுச் செய்திகள், ஆட்சிமுறைகள் முதலியவற்றை அறிந்துகொண்டு நாம் பயன் பெறுவதற்கும், கோயில்கள் பெரிதும் துணை புரிகின்றன. கோயில்களில் காணப் பெறும் பல்லவர் சோழர் பாண்டியர் ஆகிய அரசர்கள் பற்பலரும் அமைத்து வைத்த பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்கள், பண்டைக்காலத்தின் சமயம், சமுதாயம், வரலாறு, இலக்கியம், மக்களின் வாழ்க்கை நிலை, பழக்கவழக்கப்பண்பாடுகள் முதலியவற்றை அறிவித்து உதவும் பெருஞ் சான்றுகளாக நின்று நிலவுகின்றன.

உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டுகள் இரண்டு (கி பி. 919-921), இந்நாளிற்போல ஊராட்சிமுறை, வாரியங்கள், ஊராட்சித் தேர்தல்முறை, உறுப்பினர் ஆதற்குரிய தகுதிகள், உறுப்பினர் ஆக விரும்புபவர்பால் இருக்கக்கூடாத குற்றங்கள் என்பவற்றைப் பற்றிய செய்திகளை யெல்லாம் தெளிவுற விளக்குகின்றன.

**கலைவளர் கழகம் :**

கோயில்களில் புராணங்கள் முதலிய இலக்கியங்களைப் படித்து விளக்கும் படனமண்டபம் நடனமண்டபம் நாடகமண்டபம் தருக்கமண்டபம் முதலியவை இருந்தன. திருவொற்றியூர்க் கோயிலில் **வியாகரண**

**தான வியாக்கியான மண்டபம்** என ஒன்று இருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகின்றது. இவற்றிலெல்லாம் பல்வேறு கலைகளும் நூல்களும் பயிலவும் ஆராயவும் பரப்பவும் பெற்று வந்தன.

பண்டைக் காலத்தில் கோயில்கள், பல்வேறு கலை நூல்களையும் ஓலையேட்டில் எழுதிவைத்துப் பாதுகாக்கும் நூலகங்களாகவும் (Libraries), விற்றல் வாங்கல் முதலியவற்றிற்குரிய பத்திரப்பதிவுகள் செய்யும் ஆவணக் களரிகளாகவும் **(Registration offices)** பயன்பட்டு வந்தன. இவைகள் **சரசுவதி பண்டாரம், திருக்கைக் கோட்டி** என்னும் பெயர்களைப் பெற்றிருந்தன.

**நீதிமன்றம் :**

பொதுமக்களின் குறைகளைக் கேட்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்களாகவும் கோயில்கள் பணியாற்றி வந்தன. சுந்தரர்க்கும் இறைவனுக்கும் நேர்ந்த வழக்கு **திருவெண்ணெய்நல்லூர்க்** கோயிலிலும், நீலி என்பவளுக்கும், வணிகன் ஒருவனுக்கும் நேர்ந்த வழக்கு பழையனூர்த் **திருவாலங்காட்டுக்** கோயிலிலும் விசாரிக்கப் பெற்றன என்னும் இலக்கியச் செய்திகள் இங்கு நாம் நினைவுகூரத்தகும். திருமாற்பேறு, கூகூர், திருவெறும்பியூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களின் கல்வெட்டுக்களும், கோயில்கள் பண்டை நாளில் நீதிமன்றங்களாகத் திகழ்ந்து வந்த செய்தியினை உணர்த்துகின்றன.

**அறச்சாலைகள் :**

கோயில்கள் பலவகை அறச்செயல்கள் நடைபெறுதற்குரிய நிலைக்களமாக இருந்தன. கோயில்களை அடுத்துப் பல திருமடங்களும் அறச்சாலைகளும் தோன்றி நடைபெற்று வந்தன. **திரிபுவனம் எண்ணாயிரம் திருமுக்கூடல் பாகூர்** முதலிய இடங்களில் சிறந்த கல்வி நிலையங்களும், அவற்றில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உண்டி உறையுள் வசதிகளும், மிகப் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை கல்வெட்டுக்களால் புலனாகின்றது.

**மருத்துவ மனை :**

மக்களின் மலப்பிணிப்பை அகற்றி, உயிர் நோயைத் தீர்ப்பதற்கென அமைந்த கோயில்களில், அவர்களின் உடற்பிணிகளைத் தீர்த்து உதவுவதற்கும் தக்க வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. **திருமுக்கூடல், திருவாவடுதுறை, திருவாமாத்தூர்** முதலிய பல தலங்களில் மருத்துவ மனைகளும், திக்கற்றோர் இல்லங்களும் நடத்தப் பெற்றன.

**நிதி நிலையம் :**

தமிழகக் கோயில்கள், இந்நாளைய நிதி வைப்பு நிலையங்களாகிய வங்கிகள் போலவும், பண்டுபொதுமக்களுக்குப் பணிபுரிந்து வந்தன. **திருப்புத்தூர், குமாரமார்த்தாண்டபுரம்,** காஞ்சி, இராமேசுரம் முதலிய கோயில்களின் கல்வெட்டுக்களால் இவ்வுண்மையை அறியலாம். கோயிலுக்கு வரும் நன்கொடைகளைப் பெறவும், கோயிற் பண்டாரத்திலிருந்து பொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களைப் பாதுகாக்கவும், கோயில் தொடர்புடைய வேலைகள் பலவற்றைக் கவனிக்கவும் **அமிர்தகணத்தார்** என்னும் குழுவினர் இருந்தனர்.

**தொழில் நிறுவனம் :**

பொதுமக்கள் நலனுக்கு இன்றியமையாத சிறந்த பல உதவிகளைச் செய்வதில் கோயில்கள் முனைந்து நின்றன. இந்நாளைய 'தொழில் தரும் நிறுவனங்கள்' போலக் கோயில்களிற் பண்டாரகர்-கணக்கர்—பரிசாரகர்—திருவிளக்கிடுவோர்—மாலை கட்டுவோர்—திருமுறை ஓதுவோர்—வண்ணம் இடுவோர்—சுண்ணம் தீற்றுவோர்—சோதிடர்—தச்சர்—தட்டார்—கன்னார்-குயவர்-நாவிதர்-வண்ணார் முதலிய தொழிலாளர்கள், பற்பலர் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பரம்பரையாக வேலையும் மானியமும் அளிக்கப்பட்டன.

**பணி நிலையம் :**

கோயில்கள், படையெடுப்புகள் நிகழும் போதும், போர்கள் ஏற்படும் போதும், மக்களுக்குப் புகலிடம் அளிக்கும் அரண்களாகவும், வலிமை வாய்ந்த கோட்டைகளாகவும், படைவீடுகளாகவும் பயன்பட்டன. நாட்டில் பஞ்சம் முதலிய தீங்குகள் ஏற்படும்போது, தத்தம் பண்டாரத்திலிருந்து உணவளிப்பும் பொருளுதவிகளும் பிறவும் செய்யும் பணிநிலையங்களாகவும் கோயில்கள் திகழ்ந்து வந்தன.

இதுகாறும் கூறி வந்தவாற்ருல் நம் தமிழ் நாட்டிற் பழங்காலத்திற் கோயில்களே கல்விக் கூடங்களாகவும் கலை வளர்ச்சிக் கழகங்களாகவும், ஆவணக் களரிகளாகவும், அறங்கூறவையங்களாகவும், அறச் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி வந்தமை யுணரலாம்.

**தத்துவ நுட்பங்கள் .**

கோயில்கள் என்பது வெறும் கட்டிடங்கள் அல்ல. கோயில்களின் அமைப்பு முறைகள் எத்தனையோ பல தத்துவ நுட்பங்களையும், யோகஞான அனுபவச் செய்திகளையும், உட்கொண்டனவாகத் திகழ்கின்றன. பண்டைய நம் தமிழ்ச் சான்ருேர்களாகிய திருமூலர் போன்ற தவஞான யோகச் செல்வர்கள்,

> உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்
> வள்ளற் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

என்பன போன்ற பாடல்களினுல், கோயில் அமைப்பு முறைகளின் உட்கிடையாக உள்ள தத்துவ நுட்பங்கள் பலவற்றை விளக்கியுள்ளனர்.

நம் தமிழ்ச் சான்ருேர்கள், யோகஞான நுண்ணுணர்வால் தமது உடம்பையே ஒரு கோயிலாகக் கண்டுணர்ந்தனர். அதனுல் கோயில்களை ஓர் உடம்புபோல அமைத்து வைத்தனர். நம் உடம்பின்கண் முதன்மையான ஆறு இடங்கள் உள்ளன எனவும், அவை மூலம் கொப்பூழ் மேல்வயிறு நெஞ்சம் மிடறு புருவநடு என்னும் ஆறும் ஆகும் எனவும் கண்டறிந்தனர். யோக நூல்கள் இவற்றை மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாகக் கூறும். மூலாதாரம் எருவாய் கருவாய்க்கு இடையே நிலத்தின் தன்மையும், கொப்பூழ் நீரின் தன்மையும், மேல்வயிறு நெருப்பின் தன்மையும், நெஞ்சம் வளியின் தன்மையும், மிடறு விசும்பின் தன்மையும் உடையதாக விளங்கும். புருவநடு என்பது இடை பிங்கலை சுழுமுனை நாடிகள் கலக்கும் இடமாகத் திகழும். இவ்விடங்களில் இறைவனின் அருள் விளக்கத்தைக் கண்டு தொழுது வழிபட்ட நம் தமிழ்ச் சான்ருேர்கள், தாம் அகத்தே கண்டறிந்த இறையருள் நிலையினை; ஏனைய எளிய பொதுமக்களும் உணர்ந்து பயன்பெறுதற் பொருட்டு, அவ்வியல்பு பிறழாமல் புறத்தேயும் ஆறு இடங்களில் பொருத்தமுற ஆறு பெருந் திருக்கோயில்களாக அமைத்து வைத்துள்ளனர்.

நிலத்தின் தன்மையுடைய மூலாதாரத் தலமாகப் புற்றிடம் கொண்ட பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற திருவாரூரையும் (காஞ்சிபுரத்தையும்), நீரின் தன்மையுடைய கொப்பூழ் ஆக நீரூறும் தலமாகிய திருவானைக்காவையும், உணவைச் செறிப்பிக்கும் நெருப்பின் தன்மையுடைய மேல்வயிருக நெருப்பியற் பாறைகள் மிகுந்த திருவண்ணுமலையையும், மூச்சு வழி இயங்கும் நெஞ்சமாக இறைவன் திருநடம் புரியும் தில்லைச் சிற்றம்பலத்தையும், விசும்பின் தன்மை நிலை பெறும் மிடற்றின்கண் திருக்காளத்தியையும், இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் கூடும் புருவநடுவாக, யமுனை கங்கை சரசுவதி என்னும் மூன்று ஆறுகள் கூடுகின்ற காசியையும், இவற்றிற்கு மேற்பட்ட பிரமந்திரம் என்னும் தலை உச்சியாகத் திருக்கயிலையினையும், சிறந்த முறையிற் பலவகைகளில் பொருந்துமாறு உருவகம் செய்து, நம் சான்ருேர்கள் கோயில்கள் அமைத்துள்ள நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியது. தமிழகத்தின்

திருக்கோயில்கள் பற்றிய இன்னோரன்ன நுட்பச் செய்திகள் மிகப்பல.

குறிக ளும் அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும் அவர் நின் றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே?

—திருநாவுக்கரசர்.


## முடிவுரை :

இத்தகைய சிறப்பு மிக்க கோயில்களே, நம்முடைய நலங்கருதி நமக்காக நம்முன்னோர்கள் அமைத்து வைத்து அளித்துச் சென்ற அரும்பெரும் கலைச் செல்வங்களாகும்.

"சேலேறியவயல் தென்காசி ஆலயம்,
தெய்வச்செய
லாலே சமைந்தது; இங்குஎன் செயல் அல்ல;
அதனை இன்னும்
மேலே விரிவு செய்தே புரப்பார் அடிவீழ்ந்து,
அவர்தம்
பால் ஏவல் செய்து பணிவேன் பராக்ரம
பாண்டியனே"

எனத் தென்காசிக் கோயிலைக் கட்டிய **பராக்கிரம பாண்டியன்** (கி. பி. 1422-1463) பாடிய உருக்கம் மிக்க கல்வெட்டுச் செய்யுள் போன்றவை, நாம் நம் கோயில்களைத் தம் பண்டைப் பெருமையில் சிறிதும் குன்றுமல் போற்றிக் காத்து வளர்த்து வரவேண்டிய பொறுப்பையும் கடமையும் உணர்த்துவனவாகும்.

[சென்னையில் நடைபெறும் "உலகத் தமிழ் மாநாடு" குறித்து எழுதப் பெற்ற அறிமுகக் கட்டுரை. ஆசிரியர்.]



தஞ்சைப் பெருவுடையார் கோயில்

# திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு

## முன்னுரை :

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த அரும்பெரும் தெய்வத் தமிழ் நூல்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப் பெற்று வருகின்றன. திவ்வியம் என்பது தெய்வத் தன்மை. மிகவும் சிறந்த தலங்களைத் திவ்விய தேசம் என்றும், மிகவும் சிறந்தவர்களாகிய நித்திய சூரிகளைத் திவ்விய சூரிகள் என்றும் வழங்குதல் காணலாம். அம்முறையில், மிகவும் சிறந்த 'தெய்வத் தன்மை வாய்ந்த நூல்கள்' 'தெய்வத் திருவருளை விளக்கும் நூல்கள்' என்னும் கருத்தில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைத் திவ்வியப் பிரபந்தங்கள் என வழங்குகின்றோம்.

உலகத்தில், குறிப்பாகத் தமிழ் மொழியில், பிரபந்தங்கள் எனப் பொதுவாக வழங்கப் பெறும் நூல்கள் பல உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கண நூலார் 96 வகைகளாகப் பிரித்துக் கூறுவர். அவைகள், பெரும்பாலும் உலகியற் பொருள்களையே பற்றிக் கூறும் சாதாரணப் பனுவல்கள். இவைகளோ உயர்வற உயர் நலம் உடைய தெய்வத்தினைப் பற்றி விளக்குபவை. ஆதலின் பிற சாதாரண நூல்களினின்று பிரித்து, இவைகளின் சிறப்பை யுணர்த்தி விளக்கும் முறையில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பெரியோர்கள் **'திவ்வியப் பிரபந்தங்கள்'** என்னும் சிறந்த பெயரால் விசேடித்து வழங்கி வருகின்றார்கள். இவைகள் ஏறத்தாழ 4000 பாடல்களைக் கொண்டிருத்தலின், 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனவும் வழங்கும்.

## ஆழ்வார்கள் :

பகவானுடைய சொரூப ரூப குண விபூதிகளை, ஆழ்வார்கள் பரபக்தி பரஞானம் பரமபக்தி என்பனவற்றால் நன்கு ஈடுபட்டு அனுபவித்து மகிழ்ந்தார்கள். பரபக்தியாவது, இறைவனின் தொடர்பில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடையும் நிலை. பரஞானம் என்பது, இறைவனைத் தெளிவாக நேரே கண்டு அநுபவித்து அறிதல். பரமபக்தியாவது, இறைவனை நினைப்பளவிற் பிரிய நேர்ந்தாலும் தாங்க முடியாமல் உயிர் இழக்கும் எல்லையற்ற பேரன்பு. இத்தகைய பரபக்தி பரஞானம் பரமபக்திகளால், இறைவனின் இயல்பு—திருமேனியழகு—உயரிய பண்பு நலன்கள் ஆகிய மேன்மைகளில் உள்ளம் துவக்குண்டு ஆழங்காற்பட்டு ஆழ்ந்து திளைத்து அநுபவித்து மகிழ்ந்த பெருமக்களே, **ஆழ்வார்கள்** எனச் சிறப்பித்துப் புகழப் பெறுவர். தாம் பெற்றுத் திளைத்த இறையருள் இன்ப அநுபவம், தம் உள்ளத்தின் உள்ளே அடங்காமல், எல்லையின்றிப் பொங்கி வழிந்து புறப்பட்ட நிலையில், ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதங்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப் பெறுகின்றன.

வண்டுகள் மலர்களில் தேனையுண்டு பிரீதிக்குப் போக்குவிட்டு முரன்றதுவே இசையாய் விழுந்தாற் போல, ஆழ்வார்கள் ஆகிய வண்டுகள், பகவானின் திருவடிகள் ஆகிய மலர்களில், பகவத் கிருபை அநுபவம் ஆகிய தேனை உண்டு மாந்தித் திளைத்து, அம் மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனவே, திவ்வியப் பிரபந்தங்கள் என்னும் ஒப்புயர்வில்லாத நூல்கள் ஆகும்.

**திருமாலவன் கவி :**

பெரியோர்கள் நூல்களைப் பலவகைகளாகப் பாகுபாடு செய்வர். நூல்களிற் பெரும்பாலானவை சாரமில்லாதனவாக இருப்பது உண்டு. ஒருசில சிறிதளவே சாரமுடையனவாக இருக்கும். அவற்றுள்ளும் ஒருசிலவே மிகுந்த சாரம் உடையனவாகத் திகழும். அவைகளிலும் ஒரு சில மட்டுமே, மிகவும் உயர்தரமான சாரம் நிரம்பிப் பெரும் பயன் கொடுப்பனவாய் விளங்கும். இவற்றை முறையே அஸாரம் — அல்பஸாரம் — ஸாரதரம் — ஸாரதமம் எனப்பெரியோர்கள் வழங்குவர். இவற்றில், 'ஸாரதமம்' என்னும்படி, உயர்தரமான சாரம் பெரிதும் நிரம்பி, மிகுந்த பயன்களை விளைவிக்கும் நூல்களின் வகையினைச் சேர்ந்தவையே, திவ்வியப்பிரபந்தங்கள் என்பது, சான்றோர்கள் அனைவரும் ஆராய்ந்து ஒருமுகமாகக் கண்ட முடிபு.

ஒரு சில நூல்களில், எடுத்த பொருளுக்குப் புறம்பான—சாதாரணப் பொருள்களும் கலந்து வரப்பெறும். உதாரணமாக, 'இராமாயண காவியம் செய்கின்றேன்' என்று கூறித் தொடங்கும் **வான்மீகி முனிவர்**, கங்கையின் தோற்றம், காங்கேயன் ஆகிய முருகனின் அவதாரம், புஷ்பக விமான வருணனை முதலிய வேறு பல பொருள்களைப் பற்றியும் இடையிடையே இயம்பிச் செல்கின்றார். 'நாராயணனுடைய கதையினை நவிலுகின்றேன்' என்று தொடங்கும் **வியாச முனிவர்**, பீஷ்மன் முதலாகப் பலருடைய பிறப்பு வளர்ப்புகளைப் பற்றியும், குருக்ஷேத்திர பூமியில் நிகழ்ந்த பயங்கரமான கொடிய பாரத யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறிக் கொண்டு போகின்றார். இங்ஙனமெல்லாம் இல்லாமல், "திருமாலவன் கவி" என்ற வாயோலைப்படியே, முற்றிலும் நூற்றுக்கு நூறு பகவானுடைய திருவருட் செய்திகளையே கூறிச் செல்லுகின்றன திவ்வியப் பிரபந்தங்கள். இதனை,

> "இராமாயணம், நாராயணகதை என்று தொடங்கி, கங்கா காங்கேய சம்பவாதி **அசத் கீர்த்தனம் பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணாமல், திருமாலவன்கவி என்ற வாயோலைப்படியே**, மாற்றங்கள் **ஆய்ந்து** கொண்டு உரிய சொல் வாய்த்த இது, வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள போல அருளிச் செயலில் சாரம்"

எனவரும் 'ஆசார்ய ஹ்ருதயம்' முதலிய நூல்களின் சூக்திகள் கொண்டு தெளிவுற அறியலாம்.

திவ்வியப் பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமான சிறப்புடையனவாகும். நம்மாழ்வார் அருளிச் செய்த,

| | |
|---|---|
| திருவிருத்தம் | — இருக்கு வேதம் |
| திருவாசிரியம் | — எசுர் வேதம் |
| பெரிய திருவந்தாதி | — அதர்வண வேதம் |
| திருவாய்மொழி | — சாம வேதம் |

என்று பெரியோர்கள் போற்றியுள்ளனர்.

இதனை,

> "இயற்பா மூன்றும் வேதத்ரயம் போல;
> பண்ணார் பாடல் (திருவாய்மொழி)இசைகொள்
> வேதம் (சாமம்) போலே"

என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அழகுற அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

**மாறன் மறைக்கு ஆறங்கம்:**

வேதங்கள் நான்கிற்கும், சார்பாக அங்கங்கள் உண்டு. அவைகள் ஆறு எனக் கூறப்படும். நம்மாழ்வார் பாடிய தமிழ் வேதங்கள் நான்கிற்கும், சார்பாக ஆறு அங்கங்கள் உண்டு. அவைகள் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றுள்ளன.

பெரிய திருமொழி
திருக்குறுந் தாண்டகம்
திருநெடுந் தாண்டகம்
திருவெழுகூற்றிருக்கை
சிறிய திருமடல்
பெரிய திருமடல்

எனத் திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களும், வேதங்களுக்குரிய சிட்சை வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் சோதிடம் என்பன போல, நம்மாழ்வார்

தமிழில் அருளிய நான்கு வேதங்களுக்கும் உரிய ஆறு அங்கங்கள் ஆகும்.

"மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன்
ஆறங்கம் கூற அவதரித்தான்"

எனவரும் உபதேச ரத்தினமாலைச் செய் யுளும், இங்கு நாம் உணரத் தக்கது.

**எண்மர் நன்மாலைகள் :**

வேதங்களுக்கு உபவேதங்கள் என்றும், உபாங்கங்கள் என்றும் சில உண்டு. புராணம் நியாயம் மீமாம்ஸை ஸ்மிருதி என்பன உபாங்கங்கள். ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவ வேதம், அர்த்த சாஸ்திரம் என்பன உபவேதங்கள். இவை களை யெல்லாம் சேர்த்து "அஷ்டாதச (18) வித்தைகள்" என்று அறிஞர்கள் வழங்கு வர். இம்முறையில் நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதங்களுக்கும், உபவேதங்களும் உபாங்கங்களும் உண்டு.

"வேத சதுஷ்டய அங்க உபாங்கங்கள் பதிஞ லும் போல, இந்நூலுக்கும் இருந்தமிழ்நூற் புலவர் (திருமங்கை மன்னர்) பனுவல் ஆறும், மற்றை எண்மர் நன்மாலைகளும்"

என இக்கருத்தினை 'ஆசார்ய ஹ்ருதயம்' அமைவுற விளக்கி யிருத்தல் காணலாம். இதன்படி ஏனைய 8 ஆழ்வார்களும் அரு ளிச் செய்த நூல்கள், உபவேதங்களும் உபாங்கங்களும் ஆகும். அவைகள் வரு மாறு:—

1. பொய்கையார் —முதல் திருவந்தாதி.
2. பூதத்தார் —இரண்டாம் திருவந்தாதி
3. பேயார் —மூன்ரும் திருவந்தாதி
4. திருமழிசையார்—நான்முகன் திருவந்தாதி
5. குலசேகரர் —பெருமாள் திருமொழி
6. பெரியாழ்வார் —பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு
7. தொண்டரடிப் பொடி—திருமாலை, திருப்பள்ளி எழுச்சி.
8. திருப்பாணுழ்வார்—அமலனுதிபிரான்

**உப பிரும்மணங்கள் :**

வேதங்களுக்கு 'உபப்ரும்ஹணம்' எனச் சில நூல்கள் உண்டு. 'உபப்ரும்ஹணம்' என்பது வேதப் பொருளையே நன்கு விவரித் துக் கூறும் நூல். அம்முறையில், பின்வரும் அருளிச் செயல்களைக் கொள்ளலாம்.

1. மதுர கவிகள்—கண்ணிநுண் சிறுத்தாம்பு
2. ஆண்டாள்—திருப்பாவை, நாச்சியார் திருமொழி.
3. திருவரங்கத்தமுதனுர்—இராமானுச நூற் றந்தாதி

மதுர கவிகள் பாடியருளிய 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்பது நம்மாழ்வார் மேற் பாடப் பெற்றது. ஆசார்ய பக்தியின் அருமைப் பாட்டினை விளக்கியருள்வது. ஸ்ரீ ஆண்டாள் பாடியருளிய பிரபந்தங்களோ "வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" எனப் புகழ்ந்து பாராட்டப் பெற் றவை. திருவரங்கத்தமுதனுர் இயற்றியரு ளிய இராமானுச நூற்றந்தாதியோ, 'பிர பந்ந காயத்திரி' எனச் சிறந்தெடுத்து வழங்கப்பெற்று வருவது. இவ்வாற்ருல் ஆழ் வார்களின் அருளிச் செயல்கள் ஆகிய திவ்வியப் பிரபந்தங்கள், இறைவன் அருளிய வேதங்களோடு ஒத்த சிறப்பும் பெருமையும் உடையனவாதல் காணலாம்.

**வேதங்களிலும் மேம்பட்டவை :**

இனி, ஒருவகையில் இவைகளை வேதங் களைக் காட்டிலும் கூடப் பெரியோர்கள் விசேடித்துக் கூறியிருக்கின்ருர்கள். வேதங் கள் உரைகாரர்கள் பலரும் கலக்கியது; திவ்வியப் பிரபந்தங்கள் 'நன்ஞானத்துறை படிந்து' என்றபடி தெளிவும் தூய்மையும் மிக்கவை. தக்கார் ஒருசிலரே ஓதத் தக் கனவாகலின் வேதங்கள் மட்குடம் போன் றவை; உப்புத் தன்மை மிக்குக் குடிக்க இயலாத கடல்நீர் போன்றவை வேதங்கள்; திவ்வியப் பிரபந்தங்களோ, பொற்குடம் போன்றவை; யாவரும் பருகுதற்கு எளிய இனிய சிறந்த சாய்கரக நீர் போன்றவை. மேலும் வேதவேதாந்தங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியாத பொருள் நலங்களையும், நாம் திவ்வியப் பிரபந்தங் களின் மூலம் எளிதில் தெளிந்து கொண்டு பயன் பெறலாம்.

"பாஷ்யகாரர் இதுகொண்டு
சூத்ர வாக்கியங்களை ஒருங்க விடுவர்"

எனவரும் ஆசார்ய ஹ்ருதயத் திருமொழி யினுலும்,

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே

என 'அதிகார சங்கிரக' நூற்செய்யுளில் ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிச் செய்திருத்தல் கொண்டும், இவ்வுண்மை தெளியலாம்.

**பண்பாடு வளர்க்கும் பனுவல்கள் :**

திவ்வியப் பிரபந்தங்கள் மக்களுயிர்க்கு உறுதி பயக்கின்ற உயர் பொருள்களைக் கூறும் நூல்களுள் தலை சிறந்தவை. இவற்றில் வரும் சொல்லும் பொருளும் குற்றம் அற்றுச் சுவை நிரம்பி "அப்போதைக்கு அப்போது என் ஆராவமுதமே" என்றபடி, ஓதி ஓதி யுணருந்தொறும் புதிய புதிய இன்ப அநுபவங்களைப் பயக்கும் இயல்புடையவை. முமுட்சுக்கள் விரும்பும் பொருள்கள் முற்றிலும் இவற்றின்கண் நிரம்பியுள்ளன. எல்லாரினும் மேம்பட்டு விளங்கும் "திருமகள் கேள்வன்" தான், இப்பிரபந்தங்களின் தலைவன். இப்பிரபந்தங்களின் சுவையினை முமுட்சுக்களும், முக்தரும் நித்தியரும் எம் பெருமானும் இடைவிடாது நுகர்ந்து இன்புறுகின்றனர். பயில்வோர் உள்ளத்தில் இவைகள் பக்தியுணர்வைத் தோற்றுவிக்கின்றன; தோன்றிய பக்தியுணர்வினை மேலும் மேலும் வளர்த்து, நம்மைப் பண்பாடு அடையச் செய்கின்றன.

**முடிவுரை :**

இயற்பாக்களான் இயன்று, இசைத் திறம் அமைந்து, "அரையர்" என்பவர்களால் அபிநயித்துக் காட்டவும் பெற்று வருதலின், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க்கும், திவ்வியப் பிரபந்தங்கள் சிறந்த நிலைக்களமாகத் திகழ்கின்றன. மாறன் அலங்கார உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளபடி, சித்து—அசித்து—ஈசுவரன் என்னும் முப்பொருளின் இயல்புகளையும் செப்பமுற விளக்குதலாலும், இவைகளை "முத்தமிழ்" நூல்கள் என்றல் பொருந்தும். எனவே, தமிழ் மக்களாகிய நாம் நம்முடைய ஒப்புயர்வற்ற தெய்விகக்கலைச் செல்வங்கள், திவ்வியப் பிரபந்தங்கள் என்று, பெருமிதம் கொண்டு மகிழலாம். தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் இவற்றைப் போற்றிப் பயின்று பயன்கொண்டு உய்வோமாக.

—ஆசிரியர்.

## கோயில் நிகழ்ச்சிகள்

**பாவை விழா :**

1. ஸ்ரீ சரர்ங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.
2. ஸ்ரீ வதான்யேசுவர சுவாமி ஆலயம், மாயூரம்—வள்ளலார் கோயில்.
3. ஸ்ரீ சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம், திருவெண்காடு.
4. தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.
5. ஸ்ரீ சப்தரிஷீசுவரர் கோயில், திருத்தவத்துறை (லால்குடி)
6. ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோயில், வீரவநல்லூர்.
7. ஸ்ரீ சங்கர நாராயண சுவாமி தேவஸ்தானம், சங்கரநயினார் கோயில்.
8. ஸ்ரீ பிரம்மபுரீசுவர சுவாமி தேவஸ்தானம், அம்பர்.
9. ஸ்ரீ மகாகாளநாத சுவாமி தேவஸ்தானம், திருமாகாளம்.
10. ஸ்ரீ பாடலீசர் கோயில், திருப்பாதிரிப்புலியூர்.

# சைவ சமயத் தோத்திர சாத்திர நூல்கள்

"சொல்லும் பொருள்எலாம் ஆனார் தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே"

—திருநாவுக்கரசர்.

**முன்னுரை :**

தமிழ்நாடு எத்தனையோ பலவகைகளில் தனிப்பெரும் சிறப்புடையது. "செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற் கவிதை"களால் அமைந்த, அழகிய இனிய தோத்திர நூல்களையும், அரிய பெரிய சாத்திரங்களையும் ஏராளமாகப் பெற்றிருப்பதும், தமிழ்நாட்டின் பல வகைச் சிறப்புக்களில் ஒன்றாகும். "இங்கிலாந்து நாடு வேறு பிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே இத்துணைச் சிறந்த புகழ்வாய்ந்ததாக விளங்குகின்றது" (1) என மேத்யூ ஆர்னல்டு என்னும் ஆங்கில அறிஞர் குறிப்பிடுகின்றார். அம்முறையில், தமிழ் நாட்டிற்குத் தனிப்பெரும் சிறப்பை விளைவித்துப் புகழ் பரப்பிக் கொண்டிருப்பன, சாத்திரங்களும் தோத்திரங்களுமாக அமைந்த பல தண்டமிழ்க் கவிதை இலக்கியங்களே எனலாம்.

தமிழ் நாட்டில் சைவம்–வைணவம்–சமணம்-பௌத்தம் - இசுலாமியம்- கிறித்தவம் போன்ற பல சமயங்கள், நலமுற வளர்ந்து நிலவி வருகின்றன. அச்சமயங்களுள் ஒவ்வொன்றுக்கும் உரியனவாய், எத்தனையோ பல புகழ்நூல் (தோத்திர நூல்)களும், பொருள்நூல் (சாத்திர நூல்)களும் விளங்கி வருகின்றன- அவைகள் அனைத்தையும் பற்றி, இச்சிறு கட்டுரையிற் குறிப்பிடுதல் இயலுவதன்று. ஆதலின், தோத்திரம் சாத்திரம் எனத் தொன்று தொட்டு வரையறை செய்து போற்றி வழங்கி வரப்பெறும் சிறப்புடைய சைவத் தமிழ் இலக்கியங்கள், ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும், இயன்ற அளவில் சுருக்கமாக இக்கட்டுரையில் காண்போம்.

**தோத்திரங்கள் :**

தமிழ் மொழிக்கண் உள்ள அளவற்ற பல தோத்திர நூல்களுள், மிகவும் பழமையும் பெருமையும் தெய்விகமும் வாய்ந்து திகழ்வனவாய்த், தமிழகச் சான்றோர் பெருமக்களால் போற்றிப் பாராட்டப் பெறுவன, **பன்னிரு திருமுறைகள்** எனப் படுவனவாகும். கலையறிவு உணர்வால் மட்டுமே பாடப்பெறும் ஏனைய பிற உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையருள் உணர்வாற் பாடப்பெற்ற திருமுறைகள் ஆகிய நிறைமொழிப் பாடல்கள், எல்லாவகையாலும் ஏற்றம் மிக்குடையன. பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரமாயிரம் அறிஞர்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆகிய அனைவரும், திருமுறைகளைச் செவ்வி தின் ஓதியே சிறப்புற்று உயர்ந்து உய்ந்தனர் என நாம் துணிந்து கூறலாம்.

---

(1) "By nothing is England so glorious as by her poetry"

—**Matthew Arnold**

**மறுமலர்ச்சிப் புதுவகை நூல்கள் :**

சங்ககாலத்திற்குப் பின்னர் சில நூற்றுண்டுகள் (கி.பி. 300—600), தமிழ் நாட்டில் நிலவிய இருண்டகாலச் சூழ்நிலைகளால், மங்கி மழுங்கிக் கிடந்த தமிழ் மொழியும், இலக்கியமும் கவிதையும் கலைகளும், தமிழர் வாழ்வும் ஆகியவையெல்லாம், திருமுறைகளால்தான் மீண்டும் தழைத்துச் செழித்துச் சிறப்பெய்தின. தமிழகம் பல்லாற்றுனும் புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சியும் பெற்று வளர்தற்குத் திருமுறை ஆசிரியர்களே காரணர்கள் ஆவர். திருமுறைகளை "மறுமலர்ச்சி இலக்கியங்கள்" (Renaissance Literature) என நாம் குறிப்பிடுதல் பொருந்தும். சங்ககால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும் திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும், தனித்தனியே வெவ்வேருக அமைந்த மேம்பாடுடையனவாகும்.

திருமுறைப் பாடல்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மூலை முடுக்கர்களிலும் சென்று பாடப்பெற்று, மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு பரவி நின்ற மாட்சிமை வாய்ந்தவை. ஆதலின், அவற்றை **'மக்கள் இலக்கியங்கள்'** எனவும் நாம் குறிப்பிடலாம். திருமுறைகளின் சொல் புதிது; பொருள் புதிது; நடை புதிது; சுவை புதிது! இவ்வாற்ருல் அவற்றைப் 'புதுமைப் பேரிலக்கியங்கள்' எனக் கூறுதலும் பொருந்தும். திருமுறைகளின் அருமை பெருமைகளுக்கு அளவே யில்லை.

**பன்னிரு திருமுறைகள் :**


திருமுறைகள் பன்னிரண்டு என்று வரையறை செய்யப் பெற்றுள்ளன. அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடியனவாகும். இவைகள் தூய சிறந்த நடைநலனும், மிகுந்த இசை இனிமையும், உயர்ந்த கலைத்திறனும், எழில் கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக்குரிய பெருமித உணர்ச்சியும் வீறும் பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

**திருநாவுக்கரசர்** பாடல்கள், மூன்று நான்கு ஐந்தாம் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, தத்துவம் செறிந்து, உருக்கம் மிகுந்து, மக்கள் வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்பநுட்பமுறவும், சுவை பெருகவும், திருநாவுக்கரசரின் பாடல்கள் அறிவுறுத்துகின்றன.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்** அருளிச் செய்தது, ஏழாம் திருமுறை. கலையழகும், இசை இனிமையும், நகைச் சுவை நலமும் பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய்மைகளைத் திறம்பட விளக்குகின்றது, ஏழாம் திருமுறை.

**மாணிக்க வாசகர்** அருளிய திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல்கள் இரண்டும், எட்டாம் திருமுறை எனப்படும். இவற்றுள் **திருவாசகம்** அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வில் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து, எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, கல்லையும் பிசைந்து கனியாக்கவல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில்லாத பக்திப் பெருநூலாக ஒளிர்கின்றது. இறையருளைத்தேடி அலைந்து, முயன்று பெற்று உய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளக்கிக் காட்டும் திறனில், திருவாசகம் போலச் சிறந்த நூல், வேறென்றில்லை. தன்னை ஓதுபவர்களின் சிந்தை யெலாம் தெளிவித்துச் சிவமாக்கி உய்விக்கவல்ல சிறப்பினது திருவாசகம்!

**திருச்சிற்றம்பலக் கோவையார்,** சங்க கால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய அகப்பொருட் காதல் உணர்ச்சியோடு, அருட் பொருளாகிய கடவுளுணர்ச்சியையும் கலந்தியைத்துப் பிணைத்துப்பாடிக், கலைநலமெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்து திகழ்கின்ற செந்தமிழ்ப் பெருங் கருவூலம் ஆகும். இதனைக் குமரகுருபர **அடிகள்** "காமம் சான்ற ஞானப்பனுவல்" எனப் புகழ்ந்து பாராட்டிப் போற்றியுள்ளார்.



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

திருவஹீந்திரபுரம்.

அன்பளிப்பு :

திரு. என். கிருஷ்ணசாமி

சென்னை - 17.

**திருவிசைப்பா, திருப்பல்லாண்டு** என்னும் பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாக வழங்கப் பெறும். திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த் தேவர், பூந்துருத்திநம்பி காட நம்பி, கண்டராதித்த தேவர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் சான்றோர்கள் ஒன்பதின்மரும் பாடிய பாடல்களின் தொகுதியே, ஒன்பதாம் திருமுறை. இ த ன் க ண் **கண்டராதித்த சோழர்** (கி.பி. 949—957) பாடிய பாடல்களும், முதலாம் **இராஜராஜ சோழன்** (கி.பி. 985—1014) கட்டிய தஞ்சை இராசராசேச்சுரம் பற்றிய பாடல்களும், **இராசேந்திர சோழன்** (கி.பி. 1012—1044) கட்டுவித்த கங்கை கொண்ட சோழேச்சுரம் பற்றிய பாடல்களும், அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கது.

திருமூலர் அருளிய **திருமந்திரம்** என்னும் நுண்பொருள்மறைநூல், பத்தாம் திருமுறையாகும். ஆராய்ச்சி அநுபூதி என்னும் இருவகை நெறிகளுள், அநுபூதி என்னும் இறையருட் பேற்று இயல் நெறியால், நம்மனோர் இறைவனை அடைந்து உய்யுமாறு பலதிற யோகப் பயிற்சி முறைகளையும், ஐந்தெழுத்து முதலிய அரிய பல மந்திரங்களையும், அவற்றை உருவேற்றுதற்குரிய பலவகைச் 'சக்கர' அமைப்புக்களையும், சிறந்துயர்ந்த தத்துவ ஞானப் பொருள்களையும், அழகிய இனிய உலகியல் நீதிக் கருத்துக்களையும், ஓதற்கு எளியவாய் உணர்தற்கு அரியவாய்ச் சிந்தனைக்கு இனியவாய், உள்ள சிறந்த பாடல்களால் திறம்பட விளக்குகின்றது. இதனை, 'ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிருமந்திர மாலை' எனச் **சேக்கிழார் அடிகள்**, சிறப்பித்துக் கூறியருள்கின்றார்.

**பதினொன்றாம் திருமுறை**, திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார் ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரண தேவர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்தார், நம்பி யாண்டார் நம்பிகள் என்னும் பன்னிருவர் பாடியது; நாற்பது பனுவல்கள் கொண்டது. சங்ககால நூலாகக் கருதப் பெறுவதும், ஆசிரியர் நக்கீரனர் பாடியருளியதும் ஆகிய **திருமுருகாற்றுப் படை** இதன்கண் சேர்க்கப் பெற்றுள்ளது. விநாயகரைப் பற்றிய புகழ் நூல்கள் இரண்டும் (மும்மணிக் கோவை, இரட்டை மணிமாலை), இதன்கண் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் **சே க் கி ழா ர்** பெருமான் இயற்றி யருளிய **பெரிய புராணம்** என்னும் திருத்தொண்டர் புராணம், பன்னிரண்டாம் திருமுறையாகும். இது நாயன்மார்கள் எனப்படும் அறுபத்து மூன்று சிவனடியார்களின் வரலாற்றை அழகுறவிளக்கியருளும் ஒப்புயர்வற்ற அருள் நூலாகும். கி.பி. 6-ஆம் நூற்றுண்டு முதல் 12-ஆம் நூற்றுண்டு வரை உள்ள தமிழகத்தின் சமய சமுதாய வரலாற்று நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அறிந்து கொள்வதற்குப் பயன்படும் ஓர் அரும்பெரும் கலைக்களஞ்சியமாகப் பெரியபுராணம் அமைந்து திகழ்கின்றது. தமிழகத்தின் **'தேசிய காவியம்'** (National Epic) என்று பெரியபுராணத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

மேற்குறித்த இப்பன்னிரு திருமுறைகளும், தமிழ் நாட்டின் புகழ் மிக்க புனிதப் பெரும் தோத்திர நூல்களாகும். இவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் எண்ணிறந்த எத்துணையோ பல தோத்திர நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் அருணகிரி நாதர் பாடிய, **"திருப்புகழ்"** இராமலிங்கர் அருளிய **"திருவருட்பா"** முதலியன, மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

சைவ சமயத்தின் பக்திநெறிப் பாடல்களாகிய இத்திருமுறைப் பாடல்களின் சிறப்பியல்பினை ஓர்ந்துணர்ந்து, மேலை நாட்டறிஞர்கள் பலர் பாராட்டிப் போற்றியுள்ளனர்.[2]

---

(2) "No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression than Saivism." —*Dr. L. D. Barnett*, **The Heart of India, p. 82.**

**சைவசித்தாந்த சாத்திரங்கள்:**

இப்பன்னிரு சைவத் திருமுறைகளின் சிறந்த பெரும் பிழிவாகத் தோன்றியனவே, சைவசித்தாந்த சாத்திரங்கள் எனப்படும். இவற்றை "மெய்கண்ட நூல்கள்" எனவும் குறிப்பிடுவதுண்டு.

> **உந்தி களிறு உயர்போதம் சித்தியார்**
> **பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்த**
> **அருட்**
> **பண்புவினு போற்றிகொடி பாசமிலா**
> **நெஞ்சுவிடு**
> **உண்மை நெறி சங்கற்பம் உற்று.**

(1) **திருவுந்தியார்:**—திருவியலூர் உய்யவந்த தேவர் இயற்றியது (கி.பி.1147). இது தாழிசைகள் 45 கொண்டது. சமய அனுபவ உண்மைகளை விடுகதைகள் போல விளக்குவது. 'உந்தீபற' என்னும் தொடர், ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வருவதனால், இஃது இப்பெயர் பெற்றது.

(2) **திருக்களிற்றுப் படியார்:** இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்ததேவர் (கி.பி. 1178). திருவுந்தியாரைப் பின் பற்றி, அதன் விளக்கமாக 100 வெண்பாக் களால் இயற்றப் பெற்றது. இதன் ஆசிரியர் தில்லைக்குச் சென்று கூத்தப் பிரானை வணங்கி, இந்நூலை அங்குள்ள திருக் களிற்றுப்படி என்னுமிடத்தில் வைக்க, சிற்ப வடிவில் இருந்த களிறு தன் துதிக் கையால் இந்நூலை எடுத்துக் கூத்தப் பிரானின் திருவடிகளில் வைத்தது. அதனால் இந்நூற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. திருவாசகம், திருக்குறள் ஆகியவற்றின் பாடல்களை இந் நூலாசிரியர் விதந் தெடுத்து மேற்கோளாகக் காட்டிப் பாடி யுள்ளார். நாயன்மார்களின் வரலாறுகள் பலவும் இதன்கண் எடுத்துப் போற்றப்பட் டுள்ளன.

(3) **சிவஞான போதம்:** சைவசாத்திரங் களுள் மிகவும் தலைமைவாய்ந்தது. மெய் கண்டார் என்னும் சான்றோர் (கி.பி. 1232) இயற்றியது. தன்னை ஓதுபவர்க்குச் சிவ ஞானத்தைப் போதிப்பதாகலின் இப்பெயர் பெற்றது. பதி பசு பாசம் என்னும் முப் பொருள் உண்மைகளைத் தருக்க நெறி பிறழாமல் விளக்குவது. பன்னிரண்டு சூத்திரங்கள் உடையது. திருக்குறள் ஆகிய தமிழ்வேதம் பசு; திருமூலர் திருமந் திரம் ஆகிய ஆகமம் அப்பசுவின் பால்; அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாச கர் என்னும் நால்வரின் பாடல்களாகிய திருமுறைகள் அப்பாலின் நறுநெய்; மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் அந் நெய்யின் இனிய சுவையாகும்" என்று, பலவகைகளில் இதனைப் பெரி யோர்கள் பாராட்டியுள்ளனர்.

> **வேதம் பசு; அதன்பால் மெய்யா கமம்;**
> **நால்வர்**
> **ஓதும் தமிழ்; அதனின் உள்ளுறும் நெய்;**
> **—போதமிகு**
> **நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணே**
> **மெய்கண்டான்**
> **செய்ததமிழ் நூலின் திறம்.**

(4) **சிவஞான சித்தியார்:** இது சிவ ஞான போதத்தின் வழிநூல். அவர்தம் மாணவராகிய அருள்நந்தி சிவாசாரியர் இயற்றியது. ஓதுபவர்க்குச் சிவஞானம் சித்திக்குமாறு செய்வது. பரபக்கம் (301 செய்யுள்), சுபக்கம் (323 செய்யுள்) என்னும் இருபிரிவுகளைக் கொண்டது. "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதிபோதும்" எனக் குருஞான சம்பந்தர், தாயுமானவர் முதலிய சான்றோர்கள் இதனைப் போற்றி யுள்ளனர். "சிவத்துக்கு மேல் இல்லை தெய்வம்; சிவஞான சித்திக்கு மேல் இல்லை நூல்" என்பது பழமொழி.

(5) **இருபா இருபஃது:** இந்நூல் அருள்நந்தி சிவாசாரியர் தமது ஞானாசிரி யராகிய மெய்கண்டார்பால் வினவிய

---

Regarding the literature of the Saiva Siddhanta, **Sir Charles Eliot** writes: "In no literature with which I am acquainted has the individual religious life—its struggles and dejections, its hopes and fears, its confidence and its triumph—received a delineation more frank and more profound" (Hinduism and Buddhism, Vol. ii p. 217).

—Quoted by **Dr. S. Radhakrishnan, Indian Philosophy, Vol. II.**, p. 729.

ஐயங்களையும், அவற்றிற்கு அவர் கூறிய விடைகளையும் சுருக்கித் தொகுத்துத் தரும் முறையில், 20 பாடல்களால் இயன்றுள்ளது.

(6) **உண்மை விளக்கம்:** மெய்கண்டாரின் மாணவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் இயற்றியது. ஆன்ம தத்துவம்-வித்தியா தத்துவம்-சுத்ததத்துவம், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்கள், உயிரியல்பு - பதியியல்பு, ஐந்தெழுத்து - நடராச தத்துவம் - அத்துவித முத்தி - குரு லிங்க சங்கம வழிபாடு என்பனவற்றை, 53 வெண்பாக்களால் விளக்குகின்றது.

(7) **சிவப்பிரகாசம்:** சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்கள் நால்வருள் ஒருவர் மறைஞான சம்பந்தர்! இஃது அவர்தம் மாணவர் தில்லைக் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர் இயற்றியது. ஓதுபவர்பால் சிவத்தின் பிரகாசம் ஏற்படுமாறு செய்யும் இயல்பு பற்றி இப்பெயர் பெற்றது. சிவஞான போதத்தின் சார்பு நூல். பதி பசு பாச இலக்கணம், சகல கேவல நிலைகள், தத்துவத் தோற்றங்கள், முத்தி பேதங்கள், அவத்தை நிலைகள், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் முதலிய பல பொருள்களை விளக்குவது. 100 பாடல்கள் கொண்டது.

(8) **திருவருட் பயன்:** திருக்குறளைப் பின்பற்றி அதன் நடையில், 100 குறள் வெண்பாக்களால், 10 அதிகாரங்களில், தத்துவப் பொருள்களை விளக்குவது. உமாபதிசிவம் இயற்றியது. இறைவனின் திருவருளாகிய பயனை அடையச் செய்விக்க வல்லது.

(9) **வினா வெண்பா:** உமாபதி சிவம் இயற்றியது. 13 வெண்பாக்கள் கொண்டது. தம்முடைய ஐயங்களைத் தமது குருவாகிய மறைஞானசம்பந்தரிடம் வினவியறியும் முறையில், இதனை உமாபதி சிவம் இயற்றியருளினார். 13 வெண்பாக்கள் கொண்டது.

(10) **போற்றிப் பஃறொடை:** தமது ஞானாசிரியரைப் போற்றும் முறையில், உமாபதிசிவம் இயற்றியது. இறைவன் உயிர்க்குச் செய்யும் பலவகை உதவிகளையும் விளக்கிப் போற்றுவது.

(11) **கொடிக்கவி:** தில்லைத் திருவிழாவில் கொடியேற்றத்தின் பொருட்டு உமாபதி சிவம் பாடியது. 4 வெண்பாக்கள் கொண்டது. ஐந்தெழுத்தின் உண்மையை அறிவுறுத்துவது.

(12) **நெஞ்சு விடுதூது:** உமாபதி சிவம் தமது நெஞ்சைத் தம்முடைய குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சென்று, அவர்தம் கொன்றை மாலையை வாங்கி வருமாறு, தூது விடுக்கும் முறையில் கலிவெண்பாவாற் பாடியது.

(13) **உண்மை நெறி விளக்கம்:** சைவ சித்தாந்த நூல்களில் 'தசகாரியம்' எனப்படும் பத்துவகை அருளியல் அனுபவங்களைச் சுருக்கமாகத் தொகுத்துத் தருவது (6 பாடல்கள்). இதனை இயற்றியவர் சீகாழித் தத்துவநாதர் எனவும், உமாபதி சிவம் எனவும் கூறுவர்.

(14) **சங்கற்ப நிராகரணம்:** சிவஞான சித்தியாரின் பரபக்கம் போல, மாயாவாதம் ஐக்கியவாதம் பாடாணவாதம் பேதவாதம் முதலிய பல் வேறு சமயங்களின் கொள்கைகளையும், அவை பொருந்தாமைக்குரிய காரணங்களையும் திட்பநுட்பம் அமைய விளக்கிச் செல்வது. இதனை உமாபதி சிவம், சகம் 1235—(கி.பி. 1313) ஆம் ஆண்டில் இயற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆராய்ச்சிக்கு இக்குறிப்பு மிகவும் பயன்படுவதாகும்.

**முடிவுரை:**

இச் சாத்திரங்கள் பதினான்கும், தமிழகத்துச் சமயவாழ்வில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இவற்றை அடிப்படை

யும் உயிர்ப்புமாகக் கொண்டே, திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் குன்றக்குடி முதலிய புகழ்மிக்க சைவ ஆதீனங்கள் பலவும் தோன்றிப் பல நூற்றுண்டுகளாக நிலைபெற்று வருகின்றன.

"சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிகவிரிந்ததும், பெரும் செல்வாக்கு வாய்ந்ததும், ஐயத்துக்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்புக்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுள் எல்லாம் தலை சிறந்ததுமாக விளங்குகின்றது. இது தனிச் சிறப்பாகத் தென்னிந்தியாவிற்கே உரிய தமிழ் மதம் (கொள்கை) ஆகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தம்" என்று, பேரறிஞர் ஜி. யூ. போப் [3] அவர்கள் கூறியிருப்பது, நாம் இங்குச் சிந்தித்தற்குரியது. —ஆசிரியர்.

3. "The *S*aiva Siddhantha **system** is the most elaborate, influential **and** undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the **South-Indian**, and **Tamil religion**. Saiva Siddhantha philosophy is the choicest product of the Dravidian intellect."

—**The Rev. Dr. G. U. Pope.**

## திருமுறைகளின் சிறப்பு

திருமுறை நூல்களின் தெய்வநலஞ் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து);—அருமைமிகும்
நல்ல **மறுமலர்ச்சி நூல்கள்**என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து. 1

இயற்கைஎழிற் கின்றுபுறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யுணர்வு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை **திருமுறை**போல் இன்பு! 2

மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
தெய்வத் **திருமுறை**நற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தனஇல் மற்று! 3

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்ருய்,—விலைவரம்பின்(று)
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு **திருமுறை**நூற் சீர். 4

—**ஆசிரியர்.**

# திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

ஓங்கி யுலகளந்த
　　உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச்
　　சாற்றி நீராடினுல்
தீங்கின்றி நாடெல்லாம்
　　திங்கள் மும்மாரிபெய்து
பூங்குவளைப் போதில்
　　பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து
　　சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும்
　　வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்
　　நிறைந்தேலோர் எம்பாவாய். (3)

**ஓங்கி உலகு அளந்த :** பனிபட்டுச் சாய்ந்த மூங்கில் போலே யாய், அது ஆதித்ய கிரணம் பட்டுக் கிளம்புமா போலே, மகாபலி யாலே நோவுபட்ட தேவர்கள் ஆர்த்தத்வநி கேட்ட பின்பு போந்து வளர்ந்தபடி; பிறர் காரியம் செய்யப் பெறுகையாலே வளர்ந்தபடி என்னவுமாம்: இரப்புப் பெறுதற்கு முன்னே வாமநன் ஆனவன் இரப்பு வாய்த்த ப்ரீதியாலே வளர்ந்தபடி யாகவுமாம்.

வரையாமையும், அதிமாநுஷ்ய சேஷ்டிதங்களும், வடிவழகும் கிருஷ்ணவதாரத்தோடு ஒத்திருக்கையாலே, ஸ்ரீவாமநாவதாரத்தை அநுபவிக்கிருர்கள்.

**உத்தமன் :** பிறரை இம்சித்துத் தன் வயிற்றை வளர்க்கவேண்டும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்க வேண்டும் நாமும் ஜீவிக்க வேண்டும் என்றிருக்குமவன் மத்யமன்; தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேண்டும் என்னுமவன் உத்தமன். இவர்களுக்கு ஓர் உபகாரம் பண்ணிஞக அன்றிக்கே தன்பேருக நினைத்திருக்கிறபடி.

**பேர்பாடி :** இக்குணங்களுக்கு வாசகமான திருநாமங்களைப் ப்ரீதி பூர்வகமாகப் பாடி.

**நாங்கள் :** திருநாமத்தை வாயாலே சொல்லா விடில் தரிக்க மாட்டாத நாங்கள்.

**நம் பாவைக்கு :** ப்ராபகதயா அன்றிக்கே ப்ராப்யருசி இருந்த இடத்தில் இருக்க ஒட்டாமல் செய்கிற நோன்புக்கு.

**சாற்றி நீராடினுல் :** நாட்டார்க்கு நோன்பு என்று ஒரு வியாஜத்தை இட்டு நம்முடைய விரகதாபம் போக நாம் குளித்தால்; கிருஷ்ண சம்ஸ்லேஷத்தைப் பண்ணிஞல்.

**தீங்கின்றி நாடெல்லாம் :** நாட்டில் வியாதி துர்ப்பிக்ஷாத் யமங்களங்களெல்லாம் போய் ஸம்ருத்தமாய் இவ்வூரே யன்றி இதனேடு ஸம்பந்தித்த நாடெல்லாம் மங்களமாகை.

**திங்கள் மும்மாரி பெய்து :** வெள்ளக் கேடும் வறட்கேடும் இன்றிக்கே ஊறெண்ணெய் விட்டாற் போலே விரும்பிய சமயங்களில் ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய்ப் பெய்து.

**ஓங்கு பெருஞ் செந்நெல் :** திருவுலகளந்த சர்வவேசுவரனேடு ஒத்திருக்கை. விடிவோறே நட்டு, ஞாயிறு பட்டபோது வந்து பார்த்தால் கைகவித்துப் பார்க்க வேண்டும்படி யிருக்கை; ஆகாச அவகாசம் உள்ள அளவும் வளர்ந்திருக்கை.

**ஊடு கயல் உகள :** செருக்காலே யானைக்கன்று போல வளர்ந்த கயல்மீன் களானவை, செந்நெல்களின் உள்ளே புக்குப்போக இடம் பெருமையாலே துள்ளா நிற்கும். திருவுலகளந்தருளின சர்வேசுவரனைக கண்ட அநுகூலர் பட்டது படா நிற்கும் ஆய்த்து இவை.

**பூங்குவளைப் போதில் :** பூத்த குவளையிலே என்னுதல; காலத்திலே என்னுதல்; தர்சநீயமான குவளைப் பூவிலே என்னுதல்.

**பொறிவண்டு கண்படுப்ப :** குவளைப் பூவிலே வண்டு மதுபானம் பண்ண என்று படிந்த தசையிலே கயல் ஊடேயுகளச் செந்நெல்லும் குவளையும் ஒக்க அசைந்து, தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்ரர்களைப் போலே வாயில் மதுவோடே வண்டுகள் கண்ணுறங்க. இது வயலில் ஸம்ருத்தி.

**தேங்காதே புக்கு :** திருவடி ஸமுத்ரம் கடக்க ஒருப்பட்டாற்போலே ஒருப்பட்டுக் கொண்டு இழிய வேண்டும்படி யாய்த்து இருப்பது, பசுவிற் பால் கறக்கப் புகுதல்.

**இருந்து :** பால் மாறிலிறே எழுந்திருக் கலாவது; ஆகையாலே ஸ்தாவரப் பிரதிஷ்டை போலே இருந்து.

**சீர்த்த மூலே பற்றி :** இரண்டு கையாலும் அணைத்துக் கறக்க வேண்டும்படி கனத்திருக்கை.

**வாங்கக் குடம் நிறைக்கும் :** மடியைப் பற்றிக் கைவாங்கத் தானே நின்று பால் சொரியும்; இட்ட குடங்கள் வாங்க வாங்க நிறைக்கும். குடம் இடாதார் இழக்கின்றது பசுவின் குற்றம் அன்றே. இச்சையுடையார் ஈசுவரனைப் பற்றிக் கிருதக்ருத்யர் ஆமாறு போலே யாய்த்து இவையும்.

**வள்ளற் பெரும்பசுக்கள் :** கிருஷ்ணன் படி இவற்றுக்கும் உண்டாயிருக்கை. சிறு குழந்தைகளுக்கும் கூடக் கட்டவும் அடிக் கவும் ஆகும்படி தன்னைக் கொடுத்துக் கொண்டு நிற்கை. புல்லும் தண்ணீரும் தாரகமாக வளர்ந்தவை யன்றிக் கிருஷ்ண ஸ்பரிஸமே தாரகமாக வளர்ந்தவை.

**நீங்காத செல்வம் :** தன்னைத் துன் புறுத்திய ராக்ஷசிகள் மாட்டும் பரமகருணை யுடையவளாய் விளங்கிய பிராட்டியருளால் வந்த செல்வமாகையாலே, ஊற்றுடைத் தாய் நீங்காமல் இருக்கும்.

ஆழிமழைக் கண்ணா !
 ஒன்றும்நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு
 முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்
 போல்மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப்
 பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி
 வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம்
 உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில்
 பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட
 மகிழ்ந்தேலோர் எம்பாவாய். (4)

**ஆழி மழைக்கண்ணா :** பர்ஜந்யனே என்னுமல் தொழிலை யிட்டுச் சொல்வதன் காரணம்: தேவதை அப்ரஸித்தமாகை யாலும், தொழிலை யிட்டுச் சொல்வது ராஜ குலத்திலும் உலக வழக்கில் இருத்தலாலும், இவர்கள் பாலையாகையாலும் என்ற படி.

இவர்கள்தான் ஆரேனையும் அழைக்கை யினும் "கண்ணா" என்றெழிய அழையார் கள, கிருஷ்ணனோடுள்ள வாசனையாலே.

**ஒன்றும் நீ கைகரவேல் :** பாபமே பச்சை யாக ரக்ஷிக்கும் எங்கள் படியைப் பார்த்து எங்கும் ஒக்க வர்ஷிக்க வேணும். தோஷ போக்யம அல்லது பாபத்தையே உபகார மாகக் கொள்வது எம்பெருமானுக்கும் பாக வதர்களுக்கும் உள்ள சிறந்த குணம்.

**ஆர்த்து :** இராமடம் ஊட்டுவாரைப் போல்வும், முகந்தோற்றுமல் நின்று ரட்சிக் கும் ஈசுவரனைப் போலவும் ஆக ஒண்ணாது: அநசநத்திலே தீக்ஷித்த முதலிகள் அடை யத் திருவடி வரவாலே ஸத்தை பெற்று ஸம்ப்ரமித்தாற்போலே, நாடடைய உங் களுடைய த்வநி கேட்டு வாழும்படி மின்னி முழங்கி வில்லிட்டுக் கொண்டு பெரிய ஸம்ப்ரமத்தோடே வந்து தோற்ற வேணும்,

**பாழியந்தோளுடைப் பற்ப நாபன்:** பிள்ளைகளைத் தொட்டிலே வளர்த்திப் புற்பாய் இட்டுப் பூரித்து ஆயுதம் கொண்டு நோக்கியிருப்பாரைப் போலே, திருநாபீ கமலத்திலே வ்யஷ்டி சிருஷ்டிக்குக் காரண பூதனை பிரம்மாவைப் பெற்று வைத்துத் திருத்தோள்களாலே காத்துக் கொண்டிருக்கிறவன்.

**ஆழிபோல் மின்னி :** பிரம்மா உண்டான பின்பு ஸர்வேசுவரனுக்குப் பிறந்த ஹர்ஷத்துக்குப் போக்கு விட்டுக் கொண்டாடினன் திருவாழியாழ்வான்; ஆகையாலே அவனை ஒப்பாகச் சொல்லுகிறது.

**வலம்புரிபோல் நின்றதிர்ந்து :** பாரத ஸமரத்தில் ஸ்ரீபாஞ்சசன்யத் தொனி போலே, அநுகூலர் வாழவும் பிரதிகூலர் முடியவும் முழங்கவேணும்.

**சார்ங்கம் உதைத்த சரமழைபோல்:** அகம்படியர் கிளர்ந்தால் அரசனுலும் அடக்கப் போகாதிறே. இரை பெருத பாம்புபோலே முன்பு விஷயம் இல்லாமையாலே அடங்கியிருந்த ஸ்ரீ சார்ங்கம், பெருமாள் கடைக்கணித்த பின்பு பெருமாளாலும் விலக்கவொண்ணுதபடி நூறு நூருயிரம் சர வ்ருஷ்டியைத் தானே பண்ணவல்லதாய் இருக்கை.

**வாழ உலகினிற் பெய்திடாய் :** அநுகூலப் பிரதிகூல வியாபகம் அன்றிக்கே லோகம் செய்ய முழுதும் வாழப் பெய்யவேணும்.

மாயனை மன்னு
வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர்
யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில்
தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம்
செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம்
தூமலர் தூவித்தொழுது
வாயினல் பாடி
மனத்தினுல் சிந்திக்கப்
போய பிழையும்
புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்
செப்பேலோர் எம்பாவாய். (5)

**மாயனை :** கிருஷ்ணுவதாரத்திலே அநுபவித்து "எத்திறம்!" என்ற நம்மாழ்வாரைப் போலே, அங்குத்தை குணத்தை அநுசந்தித்து "எத்திறம்!" என்கிருள். ஒப்புயர் வில்லாத சர்வேசுவரன் கிருஷ்ணனுய் வந்து அவதரித்து இடையர்களுக்கும் பசுக்களுக்கும் தன்னை அணையலாம்படி நியமித்து நவநீத சௌர்ய நகர க்ஷோபாதிகளால் உண்டான ஆச்சர்யத்தை "எத்திறம்" என்கிறதாகவுமாம்.

**மன்னு வடமதுரை :** பகவத் ஸம்பந்தம் மாருத தேசம்; பரமபதம்போலே போக்கியதையால் பிரசித்தமான ஊர்.

**மைந்தனை :** பிறந்தபோதே ஸ்ரீ வசுதேவர் காலில் விலங்கு தானே விடும்படியான மிடுக்கு; பருவம் நிரம்புவதற்கு முன்னே கம்ஸனைக் கொன்ற மிடுக்கு ஆகியவற்றைச் சொல்லிற்று.

**தூய பெருநீர் :** கிருஷ்ணன் உதடுகளுக்குப் பவித்ரதையை உண்டாக்கும் இடைப் பெண்களுடைய அதர ஸ்பர்சத்தாலும், கிருஷ்ணனும் பெண்களும் மாறி மாறிக் கொப்பளிக்கையாலும் வந்த தூய்மை.

**யமுனைத் துறைவனை :** "முத்துப்படும் துறை" என்னுமாபபோலே கிருஷ்ணனுக்குப் பெண்கள் படும் துறை; குரவைக் கூத்தாடுதற்குப் பெண்கள் விரும்பிய துறை.

**ஆயர் குலத்தில் தோன்றும் அணி விளக்கை :** பரமபதத்தைவிட இடைச்சேரியில் குணங்கள் பேரொளி வீசித் திகழ்கை; அந்தகாரத்தில் தீபம் போலே தயை கிருபை நீர்மை முதலியன இடைசசேரியில் ஒளி விட்டுச் சிறக்கை.

**தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை :** "என்ன நோன்பு நோற்ருள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்று நாட்டார் புகழ்ச்சியாலே, பெற்ற வயிற்றுக்குப் பட்டம் கட்டினவனை; வயிற்றில் கட்டின தழும்பாலே ஒருத்திக்கு ஒரு பிள்ளை கட்டலாமபடி பவ்யனுவதே என்று யசோதைப் பிராட்டியை விளங்கப் பண்ணினவனை,

**தூயோமாய் வந்து நாம் :** அங்குத் தைக்கு நாம் யோக்யரோ அயோக்யரோ என்று பாராதே இருந்தபடியே சுக்ரீவன் விபீஷணன் முதலியோர்போல வந்து; இருந்தபடியே வருகைக்கு மேற்படச் சுத்தி தேட வேண்டா. உபாயத்தில் துணிவு புறப்பட ஒட்டாதாப் போலே உபேயத்தில் த்வரை முறை பார்த்திருக்க ஒட்டாதிறே.

**தூமலர் :** மலருக்குத் தூய்மை, அநந் யப் பிரயோஜனமாய் எம்பெருமானுக்கே அர்ப்பணம் செய்யப் பெறுகை: பிரயோ ஜனத்தைக் கணிசியாது இட்ட மலர்.

**தூவி :** அடைவுகெடப் பரிமாறி; பிரே மம் அடைவு பார்க்க ஒட்டாதிறே.

**வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்க :** தனித்தனியே கரணங்கள் மேல் விழுந்த படி சொல்லுகிறது.

**போய பிழையும் :** அநாதி காலம் புத்தி பூர்வகமாகப் பண்ணிப் போந்த வினைகளும்.

**புகுதருவான் நின்றனவும் :** பகவத் ஞானம் பிறந்தால் பிரகிருதி வாசனையாலே பிராமாதிகமாகப் பிறந்த வினைகளும்.

**தீயினில் தூசு ஆகும் :** பாலும் கண்ட சர்க்கரையும் குடிக்கப் பித்தம் தன்ன டையே போமாறு போலே, பகவதநுபவம் பண்ண நெருப்பில் இட்ட பஞ்சுக்குவை போல உருமாய்ந்து போம்.

புள்ளும் சிலம்பினகாண்
    புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின்
    பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய்
    பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம்
    கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்து அரவில்
    துயில்அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு
    முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து
    அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து
    குளிர்ந்தேலோர் எம்பாவாய். (6)

**புள்ளும் சிலம்பின காண் :** காலம் உணர்த்த உணருமவை யன்றோ புட்கள். நாழிகை வட்டில் நீர் நிரம்பினவாறே கீழே விழுமாபோலே, இரையறுதியிலே யுணரும் திர்யக்குகளும்கூட உணர்ந்தன.

**புள்ளரையன் :** இளைய பெருமாளை யிட்டுப் பெருமாளை நிரூபிக்குமா போலே, திருவடியை நிரூபகமாக உடையவன்: தாங்கள் இருந்த இடத்தே கொண்டுவரும் அவன் ஆகையாலே புள்ளரையன் என்ற தாகவுமாம்.

**கோயில் :** திருவாய்ப் பாடியிலே கிருஷ் ணனைக் கொண்டாடுகைக்கு ஒரு திருமுற் றம் உண்டோ என்னில்; பெருமாள் பிராட் டியோடுகூடப் பெரிய பெருமாளை உபாஸிப் பார் என்றதிறே. அப்படியிலே திருவாய்ப் பாடியிலும் ஒரு திருமுற்றம் உண்டு போலே.

**வெள்ளை விளி சங்கின் பேரரவம் :** சங் கினுடைய வெளுப்பு போது விடிவுக்கு உடல் அல்லாமையாலே வெள்ளைச் சங்கு என்றது வியர்த்த விசேஷணம்; சாமங் களிலே பணிக்குக் கடவாரை அழைக் கைக்கு உறுப்பு ஆகையாலே 'விளிசங்கு' என்றது அநைகாந்திகம்; எனக்கும் ஒக் கக் கேளாமையாலே 'பேரரவம்' என்றது அப்ரசித்தம்.

**கேட்டிலையோ :** இது கேட்கப் பாக்கிய மின்றிக்கே ஒழிவதே. **பிள்ளாய்:** பகவத் விஷயத்திலே புதியையிறே.

**பேய்முலை நஞ்சுண்டு :** இவள் பயப்பட் டுக் கடுக எழுந்திருக்கைக்காக இது சொல்லுகிறது. சர்வேசுவரனைத் துக்க நிவர்த்தகன் என்றிருப்பார் அல்லாதார் இறே: பெரியாழ்வார் ஸம்பந்திகள் "அங் குத்தைக்கு என் புகுருகிறதோ" என்று வயிறு பிடிக்குமவர்களிறே.

**துயில் :** ஜகத் ரக்ஷண சிந்தை: ஓர் ஆச்ரிதனுடைய இருதயத்தைக் கணிசித் துக் கிடக்குமவன் என்னவுமாம்.

**வித்தினை :** திரு வவதாரத்துக்கு நாற் றங்கால் போல்வது.

**முனிவர்களும் யோகிகளும் :**

திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் யோகிகளும் உண்டோ என்னில்; கிருஷ்ணன் வந்து அவதரித்த பின்பு இடையருடைய பசுக் கொட்டில்களிலே வந்து அவர்கள் படுகாடு கிடப்பார்கள்.

**மெள்ள எழுந்து :** கர்ப்பிணிகள் பிரஜைகளுக்கு நோவு வராமே எழுந்திருக்குமா போலே எழுந்து.

**அரி என்ற பேரரவம் :**

'அரி' என்கையாவது பகதவநுபவ விரோதிகளைப் போக்கியருள வேணும் என்கை; கிருஷ்ணனுக்கு அசுரர்களாலே வருந்தீங்கைப் போக்கித் தந்தருளவேணும் என்று மங்களாசாஸநம் பண்ணுகை. அவனாலே பயங்கெட்டால், அத்தலைக்குப் பயப்பட்டுத் திருப்பல்லாண்டு பாடும் இத்தனையிறே.

பகவத் ஸம்பந்த ஞானம் பிறப்பதற்கு முன்பு இழவுபேறுகள் தன்னளவிலே யாயிருக்கும்; ஸம்பந்த ஞானம் பிறந்த பின்பு இழவு பேறுகள் அவனளவிலேயாய் இருக்கக் கடவதிறே.

**உள்ளம் புகுந்து குளிர்ந்து:** படுக்கைக்குக் கீழே வெள்ளங் கோத்தாற் போலே, திருநாமம் செவிவழியே புகுந்து உள்ளத்தை வவ்வலிட்டது.

**கீசுகீசு** என்றுஎங்கும்
  **ஆனைச்சாத்தான் கலந்து**
பேசின பேச்சரவம்
  **கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!**
காசும் பிறப்பும்
  **கலகலப்பக் கைபேர்த்து**
**வாசநறுங் குழல்**
  **ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த**
  **தயிரரவம் கேட்டிலையோ?**
**நாயகப் பெண்பிள்ளாய்!**
  **நாராயணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும்நீ**
  **கேட்டே கிடத்தியோ?**
**தேச முடையாய்!**
  **திறவேலோர் எம்பாவாய்.** (7)

**கீசுகீசு என்ல் :** அநக்ஷர ரசமாய் இருக்கை. **ஆனைச் சாத்தான் :** வலியன் என்னும் பாரத்வாஜ பக்ஷிகள்.

**கலந்து பேசின பேச்சரவம் :** பிரிந்து போனால் பகல் எல்லாம் தரிக்கும்படி கலந்து, பிரியப் புகா நின்றோம் என்னும் தளர்ச்சி தோற்றப் பேசுகிற மிடற்றோசை.

**பேய்ப் பெண்ணே :** பகவத் விஷயத்திலும் ததீய விஷயம் நன்றென்று அறிந்து வைத்தும் காற்கடைக் கொள்ளும் மதிகேடி என்கிறார்கள்.

**காசும் பிறப்பும் :** அச்சுத் தாலியும், ஆமைத்தாலியும் முளைத் தாலியும்.

**நாயகப் பெண்பிள்ளாய் :** இப்பெண்களுக் கெல்லாம் நிர்வாககையானபடி இதுவோ என்கிறார்கள்: சொல்லிற்றுக் கெல்லாம் மறுமாற்றம் சொல்லிக் கிடக்கிறது உன்னுடைய ஐச்வர்யச் செருக்காலே என்னவுமாம்: "பேய்ப் பெண்ணே" என்றதோடு "நாயகப் பெண்பிள்ளாய்" என்றதோடு வாசியில்லையிறே, அகவாயில் பாவம் ஒன்றாகை யாலே.

**நாராயணன் :** முகம் தோற்றாமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக் கடவ ஸர்வேச்வரன்.

**மூர்த்தி :** தன்னுடைய ஸௌசீல்யத்தாலே பிறந்தது.

**கேசவன் :** கண்ணுக்குத் தோற்ற நின்று நம் விரோதிகளைப் போக்குமவன். கேசிவதத்தைக் குறிப்பிடுவது, பெரியாழ்வார் பெண் பிள்ளை யாகையாலே துணுக்கென்று உணரும் என்று.

**பாடவும் :** இப்படி வாத்ஸல்யத்தையும் ஸௌசீல்யத்தையும் ஆச்ரித விரோதி நிரஸநத்தையும் பேசின இடத்திலும்........

**தேச முடையாய் திற :** இவருக்குக் கிருஷ்ண விஜயாநுஸந்தானப் பிரீதியாலே வடிவிற் பிறந்த புகரைக்கண்டு கின்னகத்தை அணை செய்யாதே வெட்டிவிடாய் என்கிறார்கள் ஆகவுமாம்.

கீழ்வானம் வெள்ளென்று
எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்
மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப்
போகாமல் காத்துஉன்னைக்
கூவுவான் வந்துநின்றோம்
கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய்
பாடிப்பறை கொண்டு
மாவாய் பிளந்தானை
மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச்
சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந்து
அருளேலோர் எம்பாவாய். (8)

**கீழ்வானம் வெள்ளென்று :** கிழக்கு வெளுத்தது காண் என்றார்கள். திங்கள் திருமுகத்துச் சேயிழையாரான உங்களுடைய முகஜ்யோதிஸ் கீழைத் திக்கிலே சென்று தட்டி உங்கள் முகத்திலே வந்து பிரதிபிம்பிக்கையாலே, கிழக்கு வெளுத்தது போலே தோற்றுகிற தித்தனை.

**எருமை சிறுமை வீடு மேய்வான் பரந்தன காண் :** உங்கள் முகத்தில் ஒளியைக் கண்டு இருள் திரண்டு போகிற தித்தனை.

**கோதுகலம் உடைய பாவாய் :** உன்னை முன்னிட்டுக் கொண்டு செல்ல, கிருஷ்ண விஷயீகாரம் உண்டென்னும்படி அவனாலே கொண்டாடப்படு மவளிறே.

**பாவாய் :** நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தை யுடையவளுக்குளங்கள் ஆற்றாமை இல்லையிறே. பெண்ணின் வருத்தம் அறியாதபடி யாகவோ நீயும். "முலையெழுந் தார்படி மோவாய் எழுந்தார்க்குத் தெரியாதிறே" என்று பட்டர்.

**பாடி :** அசுரப் பிரகிருதிகளான இரணியாதிகள் படைவீடுகள் போலே திருநாமம் சொல்லப் பொருத ஊரிலே வாயாரத் திருநாமத்தைப் பாடி.

**பறை கொண்டு :** நாட்டார்க்கு நோன்பு; தங்களுக்கு ஸேவிக்கையே பலம்.

**ஆவா என்று ஆராய்ந்தருள் :** "நம் மாலே பேறு" என்று நாம் வரப் பார்த்திருக்குமவர்கள், "நாம் இருந்த இடத்தே வந்தது இவர்கள் செல்லாமை யிறே" என்று நமக்கு முகந் தருங்காண். பிரணயித்வம் போனாலும் ஆர்த்த ரக்ஷணம் தவிருமோ? "இரக்கம் மேலான தருமம்' என்று சொல்லி வைத்து அநுஷ்டியா தொழியுமோ?

தூமணி மாடத்துச்
சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத்
துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே!
மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை
எழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச்
செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில்
மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன்
வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும்
நவின்றேலோர் எம்பாவாய். (9)

**தூமணி மாடத்து :** குற்றம் எடுத்துக் கழிக்க வேண்டாத நன்மையையுடைய மணியாலே செய்த மாடம், ஸம்ஸார கந்த முண்டாய்க் கழிந்த முக்தர்க்கும் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான நித்யருக்கும் உள்ள வாசி போந்திருக்கை.

**சுற்றும் விளக்கெரிய :** மாணிக்கத்தின் ஒளியாலே பகல் விளக்குப் பட்டிருக்கச் செய்தேயும், மங்களார்த்தமாக விளக்கெரிகிறது.

**மாமான் மகளே :** ஸ்வாமிநி யாயும் தோழியாயும், அநுபவித்த தொழிய, ப்ரகிருதி ஸம்பந்தத்தாலும் ஆண்டாள் அநுபவிக்கிறாள்; "மாமன் மகள்" என்று, இட்டுக் கொள்கைக்கு விட ஒண்ணாத உறவு சொல்லுகின்றாள். திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ராக்ருத ஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவநம் என்றிருக்கிறாள்.

**மணிக்கதவந் தாள் திறவாய் :** மாணிக்கங்களில் ஒளியாலே தாள் தெரிகிறதில்லை; நீயே திறவாய் என்கிறார்கள்.

**அனந்தலோ :** நெடும்போது கிருஷ்ணாநுபவம் பண்ணிப் படுக்கையிற் சாய்ந்தது இப்போதோ?

ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ? எழுந்திராமைக்குக் காவலிட்டாருண்டோ? நெடும்போது உறங்கும்படி மந்திரவாதம் பண்ணினருண்டோ? 'மையலேற்றி மயக்க உன்முகம் மாய மந்திரந்தான் கொலோ" என்று அம்மான் பொடி தூவினர் உண்டோ? என்கை.

**மாமாயன் :** ஆச்சர்ய குண சேஷ்டிதங்களாலே அபலைகளான பெண்களை எழுதிக் கொண்டு, அவர்களுக்கு இஷ்ட விநியோகார்ஹகமாம்படி பவ்யனாய் இருக்குமவன்.

**மாதவன் :** அதுக்கடியான ஸ்ரீய: பதி. அந்த ஸௌலப்யத்துக்குக் குருகுலவாசம் பண்ணின இடம்.

**வைகுந்தன் :** ஸ்ரீய: பதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான தேச விசேஷத்தை யுடையவன்.

நோற்றுச் சுவர்க்கம்
புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ?
வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி
நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும்
புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்
வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல்
உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து
திறவேலோர் எம்பாவாய். (10)

வைகின பின்பும் எழுந்திராமையாலே அம்மே! அழகிதாக நோற்றுச் சுகம் பெறக் கோலினாய்! என்று ஸ்தோபிக்கிறார்கள் என்றுமாம்; நோற்க வேண்டாதபடி நோன்பின் பலம் கைபுகுந்தவளிறே என்றுமாம்.

**நோற்று :** ஸித்த ஸாதனையாகையாலே உபாயாம்சத்தில் நிர்ப்பரையாய் இருந்தாள். அவனுடைய ரக்ஷகத்வத்தை யுணர்ந்தால் தனக்கு யத்நம் பண்ணப் ப்ராப்தியில்லை: தன் சேஷத்வத்தை யுணர்ந்தாலும் ப்ராப்தி யில்லையிறே.

யாவர் கிருஷ்ணனை உள்ளவாறே அறிகிறார்களோ அவர்களுக்கு எல்லா யக்ஞங்களும் சமாப்தம் ஆகின்றன என்றிறே இருப்பது.

எழுப்புகிறவர்களுக்கும் இதுவன்றோ ஸ்வரூபம் என்னில்; ஸித்தோபாய நிஷ்டர்க்கு விளம்பஹேது இல்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையாலே பதறுகிறார்கள்; ஸித்தோபாய நிஷ்டர்க்கும் கர்மஜ்ஞாந பக்திகளுண்டு; இவர்களுடைய க்ரியா கலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாய் இருக்கும்; ஞானம் ஸ்வரூபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்ய ருசியிலே அந்விதம்.

**சுவர்க்கம் புகுகின்ற :** சுகத்தை இடைவிடாதே அநுபவிக்கிற. இவர்களுக்குக் கிருஷ்ணாநுபவமிறே சுகம்.

**அம்மனாய் :** ரக்ஷகையானவளே, நீ ரக்ஷகையாக, நாங்கள் உனக்குக் குழைச் சரக்கானபடி அழகிதாயிருந்தது.

**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்:** வாசல் செம்மினால் வாயும் செம்ம வேணுமோ? ஐச்வர்யம் மிக்கால் பந்துக்களை ஏன் என்னலாகாதோ? உடம்பைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பேச்சாகிலும் தரலாகாதோ? கண்ணும் செவியும் ஒக்கப் பட்டினிவிட வேணுமோ?

**நாற்றத் துழாய் முடி :** அவன் ஒருகால் அணைத்து விட்டால் அவை அஞ்சாறு குளிக்குப் பரிமளம் நிற்குமே. **நாராயணன்:** உகவாதாரையும் விடாதவன் உகந்த உன்னை விடுமோ?

**நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன் :** வெறுமையே பச்சையான இடைச்சிகளுக்கும் சென்று ஆச்ரயிக்கலாம் படியிருக்கிற தார்மிகன். இவர்களுடைய ஆச்ரயணம் உபாயம் அன்று, ருசியாலே, "கிருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று இவர்களுக்கு உபாயம் அவன்தானிறே.

**பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த :** தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே அமிழ்ந்திச் சாவாரைப் போலே,

ஸத்ருக்கள் பக்கலிலும் வாத்ஸல்யம் உடைய பெருமாள் பக்கலிலே தப்புச் செய்த.

கும்பகரணனும் தோற்றும் : உறக்கத்தில் தலையானவனும் உன் பக்கலிலே தோல்வி யடைந்தும்கூட.

உனக்கே பெருந்துயில்தான் தந்தானே : தன் உறக்கத்தையும் தானே உனக்குத் தந்து போனானே? அவனது துயில். உன்னது பெருந்துயில். அவன் ஒருத்தியை யிறே பிரித்தது; நீ ஊராகப் பிரித்து நின்றாயே.

தேற்றமாய் வந்து திற : இரண்டாம் நிலத்திலே கிடக்கிறவளாகையாலே தடுமாறாதே தெளிந்து வந்து திற என்கிறார்கள்; ஊராகத் திரண்டு கிடக்கிறது, படுக்கையிற் கிடந்தபடியே வாராதே ஸதஸ்யையாய் வந்து திற. இலக்ஷ்மணன் ஸந்நிதியை வந்தடைந்த தாரைபோல வாராதே கொள் என்கிறார்கள்.

—ஆசிரியர்.

(தொடரும்.)

## கோயில் நிகழ்ச்சிகள்

**திரு அத்யயன உத்ஸவம் :**

1. ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீ வில்லிபுத்தூர்.
2. ஸ்ரீ நீலமேகப் பெருமாள் தேவஸ்தானம், குளித்தலை.
3. ஸ்ரீ நவநீதகிருஷ்ண சுவாமி கோயில், தென்கரை, நிலக்கோட்டை வட்டம்.
4. ஸ்ரீ தேவராஜப் பெருமாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம்.
5. ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் தேவஸ்தானம், ஸ்ரீரங்கம்.
6. ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.
7. ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தேவஸ்தானம், திருவல்லிக்கேணி, சென்னை.
8. ஸ்ரீ தேவநாத சுவாமி தேவஸ்தானம், திருவகீந்திரபுரம்.
9. ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில், ஸ்ரீரங்கம்.
10. ஆழ்வார் திருநகரி ஆதிநாதசுவாமி தேவஸ்தானம்.

# சமய இலக்கியங்களில் மரங்கள்

(திரு. ஜி. எம். முத்துசாமி பிள்ளை, சென்னை.)

**முன்னுரை :**

நமது சமுதாய உலகியல் வாழ்வில், மரஞ் செடி கொடிகள் மிகவும் இன்றி யமையாதனவாகச் சிறந்த பல நலங்களை அளித்து வருகின்றன. அதுபோலவே, சமயத் துறையிலும் மரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சமய நூல்களிலும் தமிழ் இலக்கியங்களிலும், மரஞ் செடி கொடிகள் ஆங்காங்கு அழகுறப் புனைந்துரைக்கப் பெற்றுள்ளன.

சங்ககாலப் பெரும் புலவர்களில் ஒருவர் ஆகிய கபிலர், தாம் பாடிய 'குறிஞ்சிப் பாட்டு' என்னும் சிறந்த நூலில் மட்டும், சற்று ஏறத்தாழ 90-க்கு மேற்பட்ட மரஞ் செடி கொடிகளைப் பற்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்து பாடியிருக்கின்றார். திருநாவுக் கரசர் செய்த அறச் செயல்கள் பல வற்றைப் பற்றிக் குறிப்பிடும் சேக்கிழார் பெருமான், மரஞ் செடி கொடிகளை வைத் துக் 'கா வளர்த்தல்' (பூஞ்சோலைகள் அமைத்தல்) ஆகிய அறச் செயலையும் செய்ததாகக் கூறியிருத்தல் நாம் இங்குக் கருதுதற்குரியது. தொண்டரடிப் பொடி யாழ்வார், திருவரங்கத்தில் திருநந்தன வனம் அமைத்துத் திருமாலை கட்டிப் பெரு மாளுக்குச் சமர்ப்பித்து வந்தார் என்னும் வரலாறும், இங்கு நாம் சிந்தித்து இன்புறு தற்குரியது.

**தலங்களில் மரங்கள் :**

இலக்கியத் துறையிற் போல, சமயத் துறையிலும் மரங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. பிரமதேவன் புத்திரர்களா கிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் சிவபெருமான் தட்சிணாமூர்த்தி வடிவில், ஞானோபதேசம் செய்தது, கல்லால மரத் தின் கீழ் ஆகும். இதையே "ஆலத்தார் நிழலில் அறம் நால்வருக்கும் கோலத்தா லுரை செய்தவன்" எனத் திருநாவுக்கரசு நாயனாரும், "அருந்தவருக்கு ஆலின் கீழ் அறமுதலாம் நான்கனையும் இருந்தவருக்கு அருளுமாறு" என மாணிக்கவாசகரும் குறிப்பிடுகிறார்கள். ஆன்மாக்களைத் தம் வயமாக்க, கண்ணபிரான் புல்லாங்குழல் ஊதியருளியது ஒரு புன்னை மரத்தின் கீழ் என்பர். திருமால், திருப்பாற் கடலில் பள்ளி கொள்வது ஓர் ஆலிலையின் மீதன்றோ? முருகக் கடவுள் வள்ளியம்மை யாரை மணக்குமுன் ஒரு வேங்கை மரமே யாயினர் எனக் கூறுகிறது கந்தபுராணம். சீதைப் பிராட்டியார், இராவணனதுகாவ லில் இருந்த காலத்தில், அப்பிராட்டியாருக் குக் குளிர்ச்சி தருவதாக ஆதரவு தந்து ஓர் அசோகமரம். ஓர் அசோக மரத்தின் கீழ் அருகக் கடவுள் காட்சியளிப்பதைப் "பூமலி அசோகின் புனை நிழல் அமர்ந்த நான்முகன்" எனக் குறிப்பிடுகிறார் பவணந்தி முனிவர்.

திருக்கோயில்களில் தனித்தனி வகை மரங்கள் உள்ளன. **"தல விருட்சங்கள்"** எனப்படும் அம்மரங்கள் வழிபடுதற்குரி யன. ஒற்றியூரில் மகிழமரம்; மயிலையில் புன்னைமரம்; காஞ்சியில் மாமரம்; கழுக் குன்றில் வாழைமரம்; சிதம்பரத்தில் தில்லை மரம்; திருவானைக்காவில் வெண்ணாவல் மரம்; மதுரையிற் கடம்பமரம்; என ஒவ்

வொரு கோயிலுக்கும் தலமரங்கள் இருத்தல் கருதற்பாலது.

இம்மட்டோ! தவங்கள் புரிவதற்கும், ஞானம் பெறுவதற்கும், சாத்திரங்கள் எழுதுவதற்கும், தோத்திரங்கள் செப்புவதற்கும், முனிவர்களும் தத்துவ ஞானிகளும் மரநிழலை நன்கு பயன்படுத்தியுள்ளார்கள். தத்துவ சாத்திரங்களும் உபநிடதங்களும் தோன்றியது மரங்கள் அடர்ந்த காடுகளிலேயாம். அதனாலேயே "ஆரண்யகங்கள்" என்னும் பெயர் வழங்குவதாயிற்று. உலகினரை உய்விக்க எழுந்த உத்தம உபதேசங்களும் மரத்தின் நிழலில் வெளி வந்தன. புத்தர் பிரானுக்கு ஞானம் தோன்றியது போதி மரத்தின் கீழ்; மணிவாசகப் பெருமான் உபதேசம் பெற்றது ஒரு குருந்த மரத்தின் கீழ்; சடகோபர் அமர்ந்திருந்தது ஒரு புளிய மரத்தின் பொந்தில். "சீர்பெருகு குருகூர் வாழும் சிந்துரத்து அமர்ந்ததேவே" என அன்னாரைப் பாராட்டுகிறார் ஒரு புலவர். சிந்துரம் என்பது புளிய மரம்.

**காளிதாசர் :**

இனி இலக்கியங்களில் மரத்திற்கு எவ்வாறு மதிப்பு அளிக்கப்பட்டது என்பதைச் சற்று நோக்குவோம். இவ்வகையில் காளிதாசர் தமது சாகுந்தலத்தில் நுண்ணிய கருத்துக்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். கண்ணுவர், தம் மகள் சகுந்தலையிடம் கொண்ட அன்பைவிட, நமது ஆசிரமத்தில் இருந்த செடிகளிடம் அதிக அன்பு கொண்டிருந்தாரெனவும், சகுந்தலை தம் தந்தையார் கட்டளைக்கிணங்க, ஆசிரமத்திலுள்ள மல்லிகைச் செடிக்குச் சுற்றிலுமிருந்த அகன்ற வாய்க்கால்களில் நீர் நிரப்பி, அச் செடிகளைப் பாதுகாத்து வந்தாளெனவும், மரங்களுக்குத் தண்ணீர் விட்ட பின்னரே தான் உணவு அருந்துவாளெனவும் காளிதாசர் காட்டுகின்றார். பூக்களை அணிவதற்குத் தனக்கு ஆர்வம் இருந்தாலும், அன்பினால் மரங்கள் துன்பப்படக்கூடும் எனக கருதிச் சகுந்தலை இளந்தளிர்களைக் கிள்ளவில்லை எனவும் காளிதாசர் சுட்டுகிறார். மரங்கள் முதல் முதலில் பூக்கத் தொடங்கிய காலத்து அவற்றிற்குச் சகுந்தலை திருவிழாக் கொண்டாடியதாகவும், சாகுந்தலம் எடுத்துக் காட்டுகிறது. தற்காலத்தில் பூக்காட்சி (Flower show) என்னும் திருவிழா நடத்தப்படுகிறது. இத்தகைய விழாவை முதல் முதல் கொண்டாடிய பெருமை; ஒருவகையில் சகுந்தலைக்கே உரியது எனலாம். இறுதி நிலையில், அவள் ஆசிரமத்தை விட்டுத் தன் கணவனின் அரண்மனைக்குச் செல்லும்போது, ஆசிரமத்தில் அவட்குத் துணையாயிருந்த காட்டு மரங்கள் அவளுக்குப் பிரியா விடை அளித்து அனுப்பின எனக் காளிதாசர் கூறுகின்றார்.

**தமிழ்நூலின் ஒரு குறிப்பு :**

இனி, தனித் தமிழ் மகள் எவ்வாறு மரத்திற்கு மதிப்பளித்தாள் என்பதைக் காண்போம். தமிழ் மகள் ஒருத்திஇளம்பருவத்தில் தான் விளையாடி வந்த இடத்தில் மணலில் தான் ஒரு நாள் விட்டுச் சென்ற ஒரு புன்னை விதை, முளைத்து வந்ததைக் கண்ணுற்றாள். அதற்குப் பாலும் நெய்யும் வார்த்துக் காப்பாற்றினாள். இவ்வகையில் அது மரமாகிச் செழிப்புற்று ஓங்கி நின்றிருந்தது. அவளுக்குப் பின்னர்த் திருமணமாயிற்று. பின்னர் அவள் சில குழந்தைகளுக்குத் தாயானாள். அக் குழந்தைகளின் மூத்த மகள் அம் மரத்தைத் தன்னுடன் பிறந்த தமக்கையாகக் கருதி வந்தாள். ஒருநாள் அவள் தன் கணவனுடன் சேர்ந்து மகிழ வேண்டிய காலம் வந்தது. அப்போது, அவள் தன் கணவனுடன் புன்னகை தவழ அம்மரத்தின் அருகிற் செல்ல நாணங்கொண்டாள். அதன் காரணத்தைத் தன் காதலனிடம் விளக்குகிறாள்.

"என் தாயார் வளர்த்த மரம் இது. நான் அதை என் தமக்கையாகப் பாராட்டி வந்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் ஆரவாரத்துடன் பூசலிடுவார்கள். அப்போது என் தாயார், 'குழந்தைகாள்! பாருங்கள் இப்புன்னை மரமாகிய என் குழந்தையை! அது எவ்வளவு சாந்தமாக இருக்கிறது' என்பாள். ஆதலால் என் தமக்கையாகிய அம்மரத்தின் அருகில் உம்முடன்

விளையாட நான் நாணம் கொள்கிறேன்'' என்கிருள். இக்கருத்துடைய,

"விளையாடு ஆய மொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய் பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே''

என்னும் நற்றிணைப் பாடல் நம் கருத்தில் இருக்கத் தக்கது.

## ஐந்திணை நிலங்களும் மரங்களும் :

ஐந்திணை நிலங்களுக்கு முரிய கருப் பொருளாகத் தொல்காப்பியம் மரங்களை யும் குறிப்பிட்டுக் கூறுகிறது. முல்லை நிலத் திற்குரிய மரம், கொன்றை குருந்து புதல்; குறிஞ்சிக்குரியவை வேங்கை, கோங்கு; பாலைக்குரியவை பாலை இருப்பை, கள்ளி, சூரை; மருதத்திற்கென ஏற்பட்டவை, மருதும் காஞ்சியும்; நெய்தலுக்குரியவை புன்னையும் கைதையும் ஆகும்.

தமிழ் மொழிக்குரிய சிறப்பியல்புகளுள் யாப்பிலக்கணம் தனியிடம் வகிக்கிறது. அதில் கையாளப்படும் வாய்பாடுகள் மர வினங்களையும் அவற்றின் தளிர், பூ, காய், கனி நிழல் ஆகியவற்றை யெல்லாம் கொண்டிருக்கின்றன. தேமா புளிமா கருவிளம் என்பன மரவினங்கள். தேமாங் காய் புளிமாங்கனி தேமந்தண்பூ புளிமா நறும்பூ எனச் செய்யுள் இல்க்கணத்திலும் மரங்களின் பூ காய் கனிகள் ஆகியவற்றின் பெயர்களை நம் முன்னோர்கள் எடுத் தாண்டிருத்தல் காணலாம். இங்ஙனமே போர் புரியும் காலத்தும், இடத்திற்குத் தக்கவாறு பூச்சூடிக் கொள்வது மரபாக இருந்தது. பகைவர் பசுக்களைக் கவரும் போது வெட்சிப் பூச்சூடுவர்; பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்கும்போது கரந் தைப் பூவைச் சூட்டிக் கொள்வர். போர் செய்யும்போது வஞ்சிப்பூ சூட்டிக் கொள் வர்; பகைவர்முன் போர் செய்வதற்குச் சற்று முன்பாகக் காஞ்சிப் பூவைச் சூட்டிக் கொள்வர். மதில்களைக் காக்கும்போது நொச்சிப் பூவைச் சூட்டிக் கொள்வது வழக்கம். பகைவர் மதிலை வளைத்துக் கொள்ளும்போது உழிஞைப்பூவையும், பகைவரை வெல்லும்போது வாகைப் பூவையும் சூட்டிக் கொள்வார்கள். இவ் வகையில் போர்க் காலத்தில் மரங்களுக்கு உரிய மதிப்பு உயர்நிலை அடைந் திருந்தது.

## பொது மறை :

உணவுப் பொருளாக நேர்முகமாகப் பயன்படும் தினையையும் வேறுபல வகை களில் பயன்படும் பனை மரத்தையும்,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்''

என எடுத்துக் கூறினுர் திருவள்ளுவர். பழங்களைக் கொடுத்துதவும் பழமரங்களை யும் அவர் குறிப்பிடுகிருர். அனிச்சம் குவளை நெருஞ்சி முதலியன பற்றியும் திருக்குறள் கூறுகின்றது. நன்றியறிதலைத் தெரிவிக் கும் வகையில், நிலத்திலிருந்து தான் உண்ட நீரை மக்கள் பருகுவதற்கு இனிய இளநீராகத் தென்னை உதவுகிறது என் பதைத் "தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருகிறது'' என்கிருர், மற்ருெரு புலவர். இளநீர் முற்றித் தேங்காயாகிறது. இறைவழிபாட்டிற்குத் தேங்காய் மிகப் பெரிதும் பயன்படுகிறது. இதை வியந்து கூறுகிருர். காவிரிப் பகுதியில் உள்ள திருவரங்கத்தில் தென்னை மரம் ஆகா யத்தை அளாவி நிற்கிறது. திருவரங்கப் பெருமான் வழிபாட்டிற்குத் தேவையான தேங்காயைக் கொடுத்துதவுகிறது அத் தென்னை. அதே சமயத்தில் அது உயர்ந்து நிமிர்ந்து வைகுந்தம் வரையில் செல்கிறது. அஃது அங்கு வைகுந்தத்தில் பள்ளி கொள்ளும் எம்பெருமானுக்கு நிழ லாக உதவுகிறது. எனவே திருவரங்கத் துத் தென்னை மரம் இப் பூவுலகத்தையும் வைகுந்தத்தையும் இணைக்கிறது என்று அருமையாகப் பாடுகிருர், சிறந்த பெருங் கவிஞர் ஆகிய பிள்ளைப் பெருமாள் ஐயங் கார்.

"பண்டங் கொண்டு பரந்திழி காவிரி
வண்டல் நின்று வளர்ந்திடு தெங்குபோய்
அண்டர் கோவுக்கமர் நிழலாக வை
குண்ட மென்று குழாவும் அரங்கமே''

இந்நுண்ணிய கருத்துக்களை யெல்லாம் கருதியோ என்னவோ, திருமூல நாயனுர்

"மரஞ்செடி கொடிகளை வளர்க்க வேண்டும். அவற்றை வளர்க்கவில்லை என்றால் நரகத்திற்குச் சென்று துன்பப்பட வேண்டி வரும்" என நமக்கு எச்சரிக்கை விடுக்கிறார். தம் கையினால் மரஞ்செடிகளுக்கு நீருட்டி வளர்க்காதவர் நரகத்தில் நின்றுழல்வார் என்பதை,

"பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீராட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரேர நாள் எஞ்சினீரே"

என்னும் திருமந்திரத்துப் பாடல் நமக்கு நினைவூட்டுகிறது.

இக் கருத்துக்களை யெல்லாம் நாம் மனத்தில் கொள்வோம் எனில், மரம் நமக்குப் பலவகையிலும் பயன்படுவதை உணர்ந்து கொள்ளலாம். மனிதன் இறந்த பின்னரும் அவன் மண்ணுடன் மறைந்த இடத்திலும், அன்புடைய நண்பன் போல் வணக்கம் செலுத்தும் வகையில் மரம் தன் கிளைகளைத் சாய்த்து நிற்கும் வண்ணம் காட்சி யளிக்கிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஹென்றிவான் டைக் (Henryvon Dyke) என்னும் ஆங்கிலப் புலவர்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டு இக் கட்டுரையை முடித்தல் சாலும். சங்ககால நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை என்னும் சிறந்த இலக்கியத்தில், மரவ மரம்—செருந்தி மரம்—காஞ்சி மரம்—ஞாழல் மரம்—இலவ மரம் என்பவை, இளவேனிற் காலத்தில் எழிலுற இனிது மலர்ந்திருக்கும் காட்சியைப் புகழ்ந்து வருணனை செய்யும் இடத்தில், 'பாலை பாடிய பெருங் கடுங்கோ' என்னும் சங்ககாலப் புலவர் அருளிச் செய்திருக்கும் கருத்து மிகவும் இனியதாக வுள்ளது.

"பூங்கொத்துக்கள் பொருந்திய வெண்கடம்ப மரங்கள் ஒரு பூங்குழையை உடைய நம்பி மூத்த பிரான் (பலராமர்) போன்றன; அரும்புகள் அலர்ந்த செருந்தி மரங்கள் பருதியஞ் செல்வன் (சூரியன்) போல விளங்கின; வண்டுகள் மிழற்றுகின்ற காஞ்சி மரங்கள், மகரக் கொடியினை உடைய மன்மதன் போல வயங்கின; கண் கவர்நிறம் வாய்ந்து கவின்மிக்க பூக்கள் நெருங்கிய ஞாழல் மரங்கள், காமனின் தம்பியாகிய சாமன் போன்று இலங்கின; சிவந்த நிறமுடைய மலர்கள் அலரும் பருவத்தை உடைய இலவ மரங்கள், எருதுக் கொடியை உடைய சிவபிரான் போலத் திகழ்ந்தன" எனக் கலித்தொகைப் பாடலில் வரும் கருத்து, சிறந்த தொன்றாக இருக்கின்றது.

"ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ்செல்வன்போ னனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போன் மிஞிறார்க்குங் காஞ்சியும்
ஏமனேன்போ னிறங்கிளர்பு கலுலிய ஞாழலும்
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமு மாங்கத்
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்
போதவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக."
—கலித்தொகை, பாலைக்கலி-26.

## கோயில் நிகழ்ச்சிகள்

### கும்பாபிஷேக விழா

விழுப்புரம் ஸ்ரீ கைலாசபுரத்தர் தேவஸ்தானம் ரூ. 25,000 செலவில் திரு. வை. சிவராம செட்டியார் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டு, 1008 சகஸ்ர கலச அபிஷேகத்துடன், 11—12—67 அன்று கும்பாபிஷேக விழா சிறப்புற நடைபெற்றது.

# சமுதாய முன்னேற்றமும், சமயத்தின் தேவையும்

(திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சென்னை.)

"இசைபயில் சடாக்ஷர மதாலே
இகபர சௌபாக்கியம் அருள்வாயே
...... ...... ...... ......
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர் சிறைமீட்ட பெருமாளே!"

—அருணகிரிநாதர்

## முன்னுரை :

'சமுதாயம்' என்னும் சொல், மக்களின் திரள் என்னும் பொருளில் இங்கு எடுத்தாளப்படுகின்றது. இக்காலத்தில் பல நாடுகள் தங்கள் தங்கள் சமுதாயம் முன்னேற்றம் அடையவேண்டும் என்று, பெரும்பாடு படுகின்றன. மக்கட் குலம் முழுவதுமே முன்னேற வேண்டும் என்னும் விழுமிய உலகப் பொது நோக்கமும், ஆங்காங்கே சான்றோர் சிலர் உள்ளங்களில் தோன்றி வளர்ந்து வருகின்றது. சமுதாயம் என்பது பல தனி மனிதர்களைக் கொண்டுதான் ஏற்படுவது. ஆயினும் அத் தனிமனிதர் எல்லோரும் அறிவு, ஆற்றல், அன்பு, பண்பாடு என்னும் நலங்களில் ஒரே அளவு முதிர்ச்சி பெற்றவர்களா யிருப்பதில்லை. ஓரளவாவது ஏற்றத் தாழ்வுகள் இயல்பாகவே என்றும் காணப்பட்டு வந்துள்ளன.

'முன்னேற்றம்' என்பது, இன்னும் அடைந்திராத ஓர் உயர்ந்த குறிக்கோளை அடையக் கருதி, மக்கள் தமது வாழ்க்கையினை நடத்தி வருவதாகும். முன்னேற்றத்தின் மதிப்பு, குறிக்கோளின் உயர்வு தாழ்வுகளைப் பொறுத்து நிற்கும். விலங்குகட்குரிய குறிக்கோள் பசி, தாகம், காமம், நோய் என்னும் உபாதைகளினின்றும் நீங்கியிருப்பதாம். சாதாரண மனிதருள்ளும் விலங்கியல்புகள் பல, மறைந்து உடனுறைந்து வருவது தேற்றம். மனிதனுக்கும் இவ்வுபாதை நீக்கம் அவசியமானதே. ஆயினும் மனித வாழ்க்கை ஏணியில் ஓரளவு மேலேறிய மக்கள் இவ்வுபாதை நீக்கத்தோடு சிந்தை நிறைவுறுவதில்லை.

(1) "குலம் பொல்லேன்; குணம் பொல்லேன்; குறியும் பொல்லேன்; குற்றமே பெரிதுடையேன்; கோலமாய நலம் பொல்லேன்; நான் பொல்லேன்; ஞானியல்லேன்; நல்லாரோ டிசைந்திலேன்; நடுவேநின்ற விலங்கல்லேன், விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்; வெறுப்பனவே மிகப்பெரிதும் பேசவல்லேன்; இலம் பொல்லேன்; இரப்பதே ஈயமாட்டேன்; என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே!" (2) "குறிக்கோளிலாது கெட்டேன்" என்றெல்லாம் நம்பொருட்டாக ஆன்றோர் திருவாக்கில் எழுப்பப்பெற்ற இந்த அலறல்கள் மேற்குறித்த வுண்மைக்குச் சான்று பகரும்.

## மக்களும் மாக்களும் ;

மக்கள் அறிவிற்கும் உள்ளத்துயர்விற்கும் ஏற்ற அளவில் அவர்தம் குறிக்கோள்கள் அமையும். ஆதலால், தனக்கு மேலானதாக ஒன்றில்லாத குறிக்கோள் யாது என்னும் கேள்வி எழும். அதனை ஆன்றோர்கள் மிகப் பழைய காலத்திலேயே ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளார்

கள். மனிதரிற் பலர் விலங்குளினும் சிறந்தவர்களாய் விளங்குதற்குக் காரணம் அவர்கட்கு ஐம்புல உணர்வுமட்டுமின்றி, ஆருவது அறிவு ஒன்றும் உளதாதலும், அது நிலேத்து வளர்தற்கு ஏதுவாகிய மொழி வளர்ச்சியும் நூற்பெருக்கமும் என்னலாம். இச்சாதனங்களைப் போதிய அளவு பயன்படுத்திக் கொள்ளாதவர்கள் மக்களுடம்பில் வசிப்பினும், உண்மையாக மக்கள் என மதிக்கப்பட மாட்டார்கள். "மக்கள் தாமே ஆறறிவுயிரே" "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்ற தொல் காப்பியச் சூத்திரங்கள் இவ்வுண்மையைக் கட்டுரைப்பவை.

மக்களாக இன்று புலப்படுபவர்கள், நெடுங்காலத்துக்கு முன்பு உலோக உடம் பிலும், தாவர உடம்பிலும், புழு பூச்சி பறவை விலங்குகளின் உடம்பிலும், பேய் கள் அசுரர் உடம்பிலுமெல்லாம் புகுந்து அறிவநுபவம் பெற்று, இப்போது நன் மனிதப் பிறப்பு எய்தியதாக முழு உண்மை யையும் ஞானக் கண்ணிஞல் உணர்ந்த ஆன்ருேர்கள் நவில்கின்றனர். அம் மட்டோ! அம்மனித உடம்பெடுத்த பின் னும் எத்தனேயோ குறைகள் சோதனே களுடன் போராடித் "தெய்வமென்பதோர் சித்தம் உண்டாகப்" பெற்றவர்களாகின் றனர்.

> "நான் உலோகத்தில் இருந்து இறந்தேன்;
> ஒரு செடி ஆயினேன்.
> நான் செடியில் இருந்து இறந்தேன்;
> ஒரு விலங்கு ஆயினேன்.
> நான் ஒரு விலங்கில் இருந்து இறந்தேன்;
> ஒரு மனிதன் ஆயினேன்.
> இறப்பதன் மூலம் எப்பொழுது, நான்
> வளர்ச்சியிற் குறைவுற்றேன்?[1]

என்று பாடிய **ஜலால் உடீன் ரூமி ஸெஹஸு பிரெனியின்** வாக்கும் கருதத்தக்கது.

(1) "I died out of the mineral and became a plant
I died out of the plant and became an animal
I died out of the animal and became a man
When did I ever grow less by dying?"

**மனிதவாழ்வின் குறிக்கோள் :**

மனிதனுக்கு இப்பூரண நிலேதான், ஈடும் எடுப்பும் அற்ற மாபெருங் குறிக்கோள். ஆணவமாதி மும்மலங்களின் வலிமை கெட்டு ஒடுங்கிப்போக, திருவருளால் மெய் யறிவு தலேப்பட்டு, பதி பசு பாசம் என்னும் முப் பொருள்களின் இயல்புகளேயும் தொடர்புகளேயும் கண்டு, சீவன் இறைவ ஞேடு இரண்டறக் கலந்து, அவனது எண் குணங்களும் தன்னிடம் பதியப்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வை எய்துவதே, இவ்விழுமிய குறிக்கோளே அடைவதன் பயனுகும். பிறப்பு இறப்பு முதலிய எல் லாக் குறைபாடுகளினின்றும் விடுபட்டு அடையும் இப்பெரு நிலேயையே வீடுபேறு என்பர். ஆன்ம யாத்திரையின் இடைப் பகுதியில் தோன்றி வளர்ந்து வந்த அறிவு, ஆற்றல், அன்பு, அவாவின்மை, அருள், ஆனந்தம் முதலிய நன்மைகள் இந்த இறுதி நிலேயில் பூரணமடைந்து பொலி வுறும். "ஒன்ருகக் காண்பதே காட்சி; புலனேந்தும் வென்ருன்றன் வீரமே வீரம்" என்ற ஔவைப் பிராட்டியார் பாடலின்படி, தெய்வக் காட்சியும் ஞானவீரமும் விளங் கும். மணிவாசகர் அருளிச் செய்தபடி, "பேரா, ஒழியாப், பிரிவில்லா, மறவா, நினேயா, அளவிலா, மாளா, இன்பமா கட"லாய் இறைவன் இலங்குவான்;

இதுவரையிற் கூறியதிலிருந்து, மக்கள் அடைய வேண்டிய தலேயாய குறிக்கோள் வீடுபேறே என்பது பெற்ரும். அவர்கள் பெறவேண்டிய உறுதிப்பயன்களுள் நான் காவதாக—முதிர்ந்ததாக—இது அமைந் துள்ளது. இதற்குச் சாதனமாகவே அறம், பொருள், இன்பம் என்னும் முந்திய மூன்று புருஷார்த்தங்களும் பொருந்தியுள்ளன. "பரனே நினேந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு" என்னும் ஞானவாக்கில் இச் சாதன சாத்தியத் தொடர்பு புலனுகின்றது. தருமம் என்னும் தேவதையின் நான்கு பாதங்கள் போல் அமைந்துள்ளன இந்த நான்கு பயன்களும். மனித சமுதாயத்தில் இவை ஒன்றற்கொன்று பிணங்காது இணங்கி நின்று, நான்காம் படியில் பூர்த்தி யடையும் வகையில் இறைவன் திருவருள் உயிர்கள் உய்யுநெறியை வகுத்து நம்மை

வளர்த்து வருகின்றது. "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்னும் பவணந்தி முனிவர் சூத்திரமும், "அறம்பொருளின்பம் வீடும் பயக்கும்" எனத் தொடங்கும் குமரகுருபர சுவாமிகள் பாடலும், இங்கு நினைவு கூர்தற்கு உரியன வாகும்.

**விஞ்ஞானத்தின் விபரீதம் :**

விஞ்ஞான வளர்ச்சி மிகுந்த சிற்சில நாடுகளில் சமய வாழ்வின் அவசியம் போதிய அளவு போற்றப்படவில்லை. மேன் மேல் தேவைகளைப் பெருக்கிக் கொள் வதும், அதற்காகப் பரபரப்புடன் மேன் மேற் பொருளைத் தேடுவதும், இம் முயற்சி யில் வெற்றியடைதற்கு அவசியமென்று தோன்றும்போது, மெலிந்த நாடுகளிடம் அறநெறி திறம்பி நடத்தலும் அங்கே காணப்படுகின்றன. வேகம் (Speed), வெறி (Craze), நாசம் (Crash) என்பன, நவநாகரிகத்தின் பண்புகளாயுள்ளன என்று மேனாட்டாசிரியர் ஒருவர் எழுதியுள் ளார். விஞ்ஞானம் விபரீதமாக வளர்ச்சி யுற்று மக்களினத்தையே விரைவில் அழித்துவிடக்கூடிய அழிவுக் கருவிகளைப் பெருக்கி வருவது, யாவரும் கண்டு கலங் கும் பயங்கரமானதோர் உண்மை.

விஞ்ஞானம் இவ்வாறு அஞ்ஞான நெறி புக்கு அநர்த்தம் செய்யும் கருவியாய் இழி வடைந்தது ஒருபுறமிருக்க, செல்வவளங் கொழிக்கும் நாடுகளில் தானும், மக்களிற் பெரும்பாலோர் சாந்தமும் மகிழ்ச்சியும் உடையவர்களாய் வாழ இயலவில்லை. மூளைக் கோளாற்றுக்காகச் சிகிச்சை பெறச் செல்லும் செல்வர் எண்ணிக்கை பெருகி வருகிறதாம். "ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பங்கள்" என்ற திருமந்திரப் பகுதியும்; "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்ற குமரகுருபரர் திருவாக் கும்; "உடைமைகள் நம்முடைய குறை பாடுகள்" (Possesions are our limitations) எனவரும் இரவீந்திரநாத தாகூரின் "சாதனம்" என்ற நூல் கூறும் வாசகமும்; "சாந்தமுலேகா சௌக்யமு லேது" என்ற ஸ்ரீ தியாகைய்யர் திருவாக்கும் இந்நாளில் யாவரும் கூர்ந்து சிந்திக்கத் தக்கன.

**வில் டியூரண்ட் :**

''மக்கள் இன்று 'உயரிய வாழ்க்கைத் தரம்' என்னும் குறிக்கோளின் ஆட்சிக்கு வயப்பட்டுள்ளார்கள். வாரத்திற்கு ஐந்தரை நாட்கள், எட்டு மணி நேர அளவு, தமது முன்னோர்கள் அறிந்திராத முறையில், கடினமான தொழிலியல் கட்டுப் பாடுகட்கு உட்பட்டு அயராது உழைக் கின்றார்கள். ஆயினும் அந்த, உயரிய வாழ்க்கைத்தரத்தை அடைவது கடினமாக இருப்பதறிந்து கலங்குகின்றார்கள். மனி தர்கள் மிகமிகப் பேராசை உடையவர் களாக உள்ளனர். தமது பேராசையை, 'உயர்தரத்தில் வாழ்தல்' என்னும் பொது முறையான தலைப்பில் அவர்கள் பெருமைப் படுத்துகின்றனர். இந்தப் பேராசை யானது, இக்காலத்திய எல்லாப் பெரிய உள்நாட்டு, வெளிநாட்டு அரசியற் சிக்கல் களுக்கும் பெரும்பாலும் அடிப்படையாக இருக்கின்றது"[2] என்கின்றார் தற்கால அரசாங்கமுறை யாராய்ச்சி வல்லுநராகிய **ஹெர்மன் பைனர்** என்னும் பேராசிரியர்.

---

(2) "Men are today ruled by the ideal of the High Standard of Living, and perturbed by the knowledge that even with about eight hours of steady work for five-and-a half days per week, under conditions of severe industrial discipline unknown to their ancestors, the standard is difficult to attain. They are enormously greedy...They dignify it by the name of an impersonal title like the 'High Standard of Living'. This greed is at the root of most of the major political problems, domestic and international, of the present day".

—*Herman Finer*

நம்முடைய பண்பாடு இன்று வெறும் மேலீடாக உள்ளது; நம் அறிவு இடர்ப் பாடு பயப்பதாக இருக்கின்றது. ஏனெனில் நாம் இயந்திர நுட்பங்களில் செல்வர்களாகவும், செயல்களில் வறியவர்களாகவும் இருக்கின்றோம். இதற்கு முன்பு என்றும் இருந்திராத பெரு விரைவில், நாம் இவ்வுலகத்தே திரிந்தலைந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்? அல்லது அங்கே நமது துயர்உறும் உள்ளங்களுக்கு இன்பத்தைக்காண இயலுமா?'' என்பன நமக்குத் தெரியவில்லை''[3] என்கின்றார், **வில் டியூரண்ட்** என்னும் மேனாட்டுத் தத்துவப் பேராசியர்.

**கடவுள் உணர்வு :**

மனிதன் ஐந்து கோசங்களை (உறைகளை)க் கொண்ட உடம்பில் வசிப்பவன். அவனுக்குள்ளே ஆண்டவனும் உளன். மனிதனிடம் இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்று சக்திகள் ஓரளவு வளர்ச்சி பெற்றுள்ளன. ஆனால், அவை ஒத்த அளவு வளர்ந்து, ஒத்து இயங்குவதைப் பலரிடம் காண்பது அரிது. நல்ல கல்வியாலும், வாழ்க்கை முறையாலும், இம்முச் சக்திகள் ஒத்து இயங்கி உயர்வடைய வேண்டும். முருகப்பெருமான் திருக் கோலத்தில், இருபுறமுள்ள தேவிமார்கள் இச்சை, கிரியை என்னும் சக்திகளையும், என்றும் மார்பிற் சாத்திப் பிடித்திருக்கும் வெற்றிவேல் ஞான சக்தியையும் குறிக்கும் என்பர் ஆன்றோர்.

இத்திருக்கோலம் நமக்கு உபதேசிக் கின்றபடி, மனிதன் தன் முச்சக்திகளையும் முறைப்படி வளர்த்து, இறைவனின் நியதியோடு ஒத்துச்சென்று, அவன் திருவருள் கூடிடும் உபாயமதறிந்து வாழவேண்டும். இப்பயனை விளைவிக்கும் வகையில், கல்வியும் வாழ்க்கைத் தரமும் உயரவேண்டும். தனிமனிதன் இவ்வாறு உயர்ந்தால்தான், சமுதாயமும் உண்மையாக உயரும். ஆனம வளர்ச்சியின் அவசியத்தை மறந்து, கூட்டிலடைத்துக் கொழுக்க வைத்துவரும் கோழிகள் போலவும், தொழுவத்தில் கட்டி வளர்த்துப் பெருக்கும் மாடுகள் போலவும், மனிதர்களின் உடம்பை மட்டும் பருக்க வைத்து, அவர்கட்கு அறிவு அன்பு வளர்ச்சிக்குரிய சுதந்தரம் தராத கல்வி முறையோ, வாழ்க்கை முறையோ கொள்ளத் தக்கதன்று.

எனவே, கடவுளை மறந்த கல்வியோ, வாழ்க்கையோ மனித சமுதாயத்திற்கு உண்மையான முன்னேற்றத்தை ஒரு நாளும் உண்டாக்காது. கடவுளைப்பற்றி அறிய வேண்டுவனவற்றை அறிந்து, அவன் திருவுளப்படி நடந்து, வானுறையும் தேவர்களிலும் சிறந்தவர்களாய் மண்ணுலகோர் வாழ்தற்குரியர்.

**கடவுள் இயல்பு :**

கடவுட் பொருள் ஐம்புலன்கட்கும், மனத்திற்கும் சீவபோத அறிவிற்கும் எட்டாதது என்று, அதனை அதனருளால் தரிசித்த அநுபூதிமான்கள் கட்டுரைக்கின்றனர். ஏன் அப்பொருள் நம்மறிவிற்கு எட்டாததாய்—பிறர் கண்ணுக்குக் காட்ட முடியாததாய்-இருக்கின்றது? என்பதைச் சிறிது காண்போம் : நாம் நாள்தொறும் கண்ணுற்காணும் பொருள்கள் யாவும்—இயற்கைப் பொருள்கள் செயற்கைப் பொருள்கள், உடம்புகள் முதலியன எல்லாம்—ஒருகாலத்தில் தோன்றி, ஓர் கால அளவு நின்று, பின்பு அழிவனவாகும். மேலும் அப்படி நமது கண்ணுக்குப் புலப்படுவன எல்லாம் அறிவற்ற சடப்பொருளே யாகும். கடவுட் பொருளோ, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் பொருள். அறிவு வடிவான ஆனந்தப் பொருள். 'அறிவுக்கறிவே இறைசற் சொரூபம். ஆனந்தப் பொருள்தான் அந்தப் பொருள்'' என்றறிவித்தருளுகின்றார், பாம்பன் குமர குருதாச சுவாமிகள் என்னும் அநுபவ

(3) "Our culture is superficial today, and our knowlege dangerous, because we are rich in mechanisms and poor in purposes...we move about the earth with unprecedented speed; but we dont know, and have not thought, where we are going; or whether we shall find our happiness there for our harassed souls".

—*Will Durant*

ஞானி. நிலை மாறுகையும் சடத்தன்மையும் ஒரு பொருளுக்கு இருந்தாலன்றி, ஒரு பொருளைப் புறக்கண்ணால் காண முடியாது. கடவுட் பொருளுக்கு இவ்விரு குறையுமில்லை. ஆதலால் அது கண்ணுக்கெட்டாததோர் மெய்ப்பொருள் என்பது உண்மை.

மேலடுக்குகளிலுள்ள விஞ்ஞானிகள், கணித நூல் வல்லார், வான நூல் வல்லார், எல்லாம், தாமுணர்ந்து தெளிவுற்றுக் கூறும் பல உண்மைகளை அத்துறைகளில் புலமை பெருத நம்மனோர் மனத்தில் வாங்கிக்கொள்ள முடியாது திணறுவது உண்மை. கடவுட் பொருளைப்பற்றி, "வாக்கு மனங்கழிய நின்ற மறையோன்"; "சொற்பதங் கடதத் தொல்லோன்"; "மனவாசகங் கடந்தான்"; "நால்வேதத்து அப்பால் நின்ற சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற சூழலாய் இதுவுன் தன்மை"; "இன்னஉரு இன்ன நிறம் என்றறிவதேல் அரிது" என்பன போன்ற எண்ணிறந்த பொன்மொழிகளால், ஆன்ரோர் மெய்ப்பொருளின் இயல்புரைத்துள்ளார்கள்.

இவர்கள் எல்லாம், இறைவனருளையே தமக்கு ஞானக் கண்ணாகப் பெற்று அது கொண்டு அவனைத் தரிசித்தவர்கள். நம் போல்வாரும் இந்த அநுபூதிமான்கள் கடந்து காட்டிய செந்நெறியைப் பின்பற்றிப் போதியவளவு சாதனங்களை அனுட்டித்தால், நாமும் இறைவனை உள்ளவாறு தரிசித்தல் இயலும் என்று உறுதியாகக் கொள்ளலாம்.

**சமயம் தேவை :**

அங்கிங்கெனுதபடி எங்குமுள்ள இறைவனை நம் அகத்தும் புறத்தும் கண்டு, மேற்குறித்த பெருங் குறிக்கோளாகிய வீடு பேற்றை எய்துவதற்குச் சமயம் இன்றியமையாததாகும். சுருங்கக் கூறுமிடத்து, சமயம் என்பது, இறைவனை உயிர்கள் அடைந்து அவனோடு ஒன்றுபடுத்தற்கென்று அவனால் நன்ருக வகுக்கப்பட்டதோர் பெருவழி என்னலாம். இவ்வழியில் செல்வோரைச் சிவபுர யாத்திரிகர்கள் என்று கூறலாம். இவர்கள் ஆணவ மலத்தால் முற்றும் கட்டுண்டு கிடந்த நிலையாகிய அவபுரத்தினின்றும், ஆண்டவனருளால் சிறிது உந்தப்பட்டு, உலோக உலகம், தாவர உலகம், அஃறிணையுயிர் வாழ் உலகம், மக்கள் உலகம் என்னும் பகுதிகளில் பலபிறவி எடுத்துப் படிப்படியே உயர்ந்து, ஆருவதறிவு துலங்கும் நன் மக்கட் பிறப்பை அடைகின்றனர்.

பின்பு தெய்வமென்பதோர் சித்தமுண்டாகின்றது. அதைக் குலைக்கப் பல மயக்க சக்திகள் முற்படுகின்றன. மருவி எப்பொருளும் வளர்ப்போனுகிய இறைவனருளால் இம்மயக்கப் போராட்டத்தில் வெற்றி கிடைக்கின்றது. வீடு பேற்றில் விருப்பம் வளர்கின்றது. அவரவர் ஆன்ம பரிபாகத் திற்கேற்ற முறையில் குரு கிடைக்கின்ருர். தீக்ஷை நிகழ்கின்றது. நம்பிக்கை, புறவொழுக்கம், சடங்குகள், அநுட்டானம், அகத்தூய்மை, ஞான விசாரணை, ஞான அப்பியாசம் இவையெல்லாம் படிமுறையே வளருகின்றன. நாற்பெரும் படிகளில் ஏறி, ஞானத்தில் ஞானம் என்னும் உன்னதப் படியில் ஏறுகின்றனர். இறைவனோடு ஒன்றி நிற்கின்றனர்.

இவர்கள் சீவன் முத்த நிலையில் உடம்பொடு கூடியிருக்கும் வரையில், சிவனிடத் தன்போடு சீவ கருணையும் உடையவர்களாய்த் திகழ்கின்றனர். "கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை வெள்ளத்து அலைவர் மிக" என்ற உமாபதி சிவனர் திருவாக்கும், "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்ற சைவ சமய நெறியாசிரியர் ஆணையும் இங்குக் குறிக்கத் தக்கவை. "வந்தித்து நின்னை மறவாக் கடனுகச் சிந்தை செய நின்னதருள் செய்யாய் பராபரமே" என்று வேண்டிய சிவ ஞானியாகிய தாயுமானர், அதை அடுத்த கண்ணியிலேயே, "எவ்வுயிரும் என்னுயிர் போல எண்ணி யிரங்கவும் நின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே" என்று வேண்டியிருப்பதும், நல்லோர் யாவரும் உள்ளத்திற் பதிக்கத் தக்க புனித சக்தித் திருவாக்குகளாம்.

இம்முறையில் அமைந்துள்ள சமயம் என்னும் சக்தி தொழிற்படாதபோது, மனிதன் முழுவளர்ச்சியடையான். இவனை உருவில் மட்டும் மனிதன்; உணர்வின்றி, கல்மனிதன் மரமனிதன் என்றே அறிஞர் மதிப்பிடுவர். இவன் மானிட மனிதனாகவும் தேவ மனிதனாகவும் உயர்ந்து கடவுளொடு கலந்து நிற்கும் ஞானியாகத் திகழ்தல் வேண்டும். இதற்குச் சமயவாழ்க்கை இன்றி யமையாதது. சமய சக்தியின் துணை யின்றி மனிதன் மேல்நிலை யடையான். உலகமாயையிற் சிக்கி, புலனின்ப நாட்டத் தோடு வாழ்பவன், தன் துன்பத்திற்குத் தானே வழி வகுத்துக் கொள்கின்றான். 'செத்துப்போய் அருநரகிடை வீழ்வதற்கு ஒருப்படுகின்றான்'

ஆனால் "தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர்" ஆகிய ஆண்டவ னுக்குஇவனையும் மற்றும் பல அடுக்குகளி லுள்ள எல்லா ஆன்மாக்களையும் சிவபுர யாத்திரையில் செலுத்தி, முடிவில் தனது சிவமாநகரிற் சேர்த்துக் கொள்வதே திரு வுள்ளக்கிடக்கை. இதை உணர்ந்து அவன் தன் அடியவர் வாயிலாகக் காட்டி யருளும் சமயச் செந்நெறியைப் பின்பற்றுதவன், துன்பத்தால் துடித்த பின்னர்த் திருந்து வான். சிவனடியவர் உபதேச மொழி களைக் கேட்பான். இயம நியமப் பழக்கங் களை மேற்கொள்வான். நாற்பாதங்களில் தீவிரப் பயிற்சி பெறுவான். மேல்நிலை அடைந்து உய்வான். இகபர சௌபாக் கியம் பெறுவான்.

### சமயம் என்னும் புனித சக்தி :

இவ்வாறு சமயம் என்பது மனிதனுக்குள் ளிருந்து அவனை மேல் நெறிக்கு உந்தும் ஓர் புனித சக்தியாய் உள்ளது. அதன் உதவியின்றித் தனிமனிதனோ சமுதாயமோ உண்மையான முன்னேற்றம் அடைய இயலாது. ஆகையினால், ஆண்டவனும் அவன் மெய்யடியவர்களும் அன்புரிமை யுடன் காட்டும் சமய வாழ்க்கையை இளமைதொட்டே மேற்கொள்ளல் மக்கள் கடன். பெற்றோர்கள், தாம் முதலில் அந் நெறியில் நடந்து காட்டி, தம் மக்களையும் அதில் செல்லுமாறு ஊக்குதல் வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரி யர்கள், "ஒன்றென்றிரு தெய்வம் உண் டென்றிரு" என்னும் உறுதி உபதேசத்தை மாணவர்களின் பக்குவத்திற் கேற்றவாறு நன்கு விளக்கி, நாடோறும் அவர்கள் இறைவனைச் சிந்திக்குமாறு செய்யத் தலைப் பட வேண்டும். அவ்வச்சமய மாணவர் கட்கு அவரவர் சமய முறையில் சிறந்த வகையில் சமய போதனை செய்யப்பட வேண்டும். இதற்குப் பெருஞ் சமயங் களின் உட்பிரிவுகளை விவரித்துரைத்தல் வேண்டுவதில்லை. இவற்றிற் கெல்லாம் அடிப்படையாயுள்ள பெருங் கருத்துக் களையும், அறவாழ்க்கையின் இயல்பையும் போதித்தல் சாலும்.

### சமரச சமயம் :

மேலும் உலகமெல்லாம் நெருங்கி ஒன்று பட்டு வரும் இந்த யுகத்தில், ஒவ்வொரு மாணவனும், தன் சமயத்தை நன்கறிவ தோடுகூட, பிற பெருஞ்சமயங்களின் போதனைகளையும், அநுபூதிமான்களின் வரலாறுகளையும் போதனைகளையும் மதிப் புடன் அறிந்து கொண்டு, ஒற்றுமைகளைப் பாராட்டி உலக சகோதர உணர்ச்சியை வளர்த்தலும் மிகவும் அவசியம். அன்பும் உண்மையும் நன்மையும் செறிந்த ஆக்க வேலைகளைக் காலத்தின் தேவையறிந்து கட்டுப்பட்டாக இருந்து செய்து, உலக ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் உறு துணையாய் நிற்க வேண்டும். நாம் நம் சமரச சமயத்தைப் பாதுகாத்து உலகிற் பரப்ப வேண்டும்.

சமயத்தின் துணையின்றி மனிதவாழ்வு தெய்வீக வாழ்வாக உயராது; நல்லொழுக் கமும் கருணையும் வேர்கொள்ளா என்று மேலே கண்டோம். அது பயிர்க்கு வேலி போல் இன்றியமையாதது. அதனாலாகிய முழுப் பயனைப் பெறும்போது அதுவே பக்தனைச் சமயங்கடந்த மோன சமரச நிலையிற் சேர்த்து விடும்.

### ஆன்றோர் அருளுரைகள் :

"உலகத்தில் சமயம்தான் உண்மை யான செயலூக்க ஆற்றல்; ஆனால் பயல் களாகிய நீங்களோ, ஒரு மனிதனை அவ

னது சமயத்தின் மூலமாக வயப்படுத்த வேண்டுமே யன்றி உங்களுடைய சமயத்தின் மூலமாக வயப்படுத்துதல் கூடாது என்பதனை உணர்ந்து கொள்ளவில்லை"[4] என்று அறிவுறுத்தியுள்ளார் மூதறிஞர் பெர்னார்ட்ஷா. மனிதனின் உள்ளிருந்து, அவனை மேல் நெறிச்செல்ல உந்தும் இச் சமய சக்தியானது, தனி வாழ்க்கை, குடும்பம், வாணிபம், உத்தியோகம், பிறதொழில்கள், பொருளாதாரம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் புகுந்து அவற்றைப் புனிதப்படுத்துதல் அத்தியாவசியமாகும். மகாத்மா காந்தியின் வாழ்க்கையும் போதனையும் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குகின்றன.

இந்தச் சமய சக்தி என்பது அழுத்தமான தெய்வக் கொள்கையிலிருந்து எழுவது. அஃது இல்லாவிடில், மற்ற நலன்கள் வேர் கொள்ளா. "மனிதன் கடவுளைப் புறக்கணிக்கும்போது ஒழுக்கத் தகுதிகள் மறைந்து விடுகின்றன. நன்மையின் இடத்தை வன்மை கவர்ந்து கொள்ளுகின்றது. அதன் விளைவாக ஏற்படும் குழப்பத்திற்கும் செயலறவுக்கும் உரிய ஒரே மாற்றாக முழு ஆணவ வல்லாட்சியே அமைவதாகின்றது"[5] என்கிறார் ஸேயர்.

அளவுக்கு மீறி இயந்திர சாதனவளர்ச்சியில் ஈடுபட்டால், சமுதாயம் பண்பாட்டை இழந்து பலவழிகளில் சீர்கேடு அடையும். "நம்மை நாமே குருட்டுத் தொழிற்றுறைச் சிக்கல்களினின்று விடுவித்துக் கொள்ள வேண்டும்; நம்முடைய இயற்கை ஒருமையின் கடுஞ் சிக்கல்களையும் சிறந்த வளத்தினையும் தெளிவுறப் புரிந்து கொள்ள வேண்டும்"[6] என்று, உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானியாகிய அலெக்ஸிஸ் கேரல் கூறியிருக்கின்றார். இது, "தன்னையறியத் தனக்கொரு கேடில்லை" என்றும், "தன்னில் தன்னை அறியும் தலைமகன் தன்னில்தன்னை அறியில் தலைப்படும்" என்றும் நமது முன்னோர்கள் அருளிச் செய்துள்ள உண்மைகளை நினைப்பூட்டும்.

"மனிதனை உட்பகுதியிலிருந்து மாற்றியமைப்பதன் மூலமே, அமைதி நிலை நாட்டப் பெறுதல் வேண்டும்"[7] என்று 'மனிதனின் ஊழ்' (Human Destiny) என்னும் சிறந்த நூலின் ஆசிரியர் கூறியிருப்பது, சமுதாய முன்னேற்றம் கருதிப் பாடுபடும் தலைவர்களை உள்ளிட்ட யாவர்களும் ஊன்றி உணரத்தக்க உண்மை வாசகமாகும்.

இவர்களைப் போன்ற சிந்தனையாளர்கள், இன்னும் பலர் மேனாடுகளில் தோன்றியுள்ளனர். இவர்கள் ஆழ்ந்தகன்ற அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு கண்டு கூறுமவற்றுட் பல, நம் நாட்டுப் பண்டை ஞானிகள் பகர்ந்துள்ளனவும் இன்றும் நம்மிடை உலவும் சிறந்த ஆன்றோர்கள் உபதேசித்து வருவனவுமாகிய அறவுரைகட்கு அரண் செய்வனவாயுள்ளன.

முடிவுரை :

சமுதாய வளர்ச்சிக்கும் நலத்திற்கும் சமயம் மிக மிக அவசியமானது. உடம்பிற்கு மூச்சுப் போன்றுள்ளது, சமுதாய முன்னேற்றத்திற்குச் சமய சக்தி. இச் சக்தியை அதன் புனித நிலையில் வைத்துக் கொண்டு வாழ்தல் நன்மக்கள் கடன். சமய வுணர்வின் துணைகொண்டு மேல் நெறிச் சென்று, மக்கள் இகபர சௌபாக்கியங்களைப்பெற இறைவன் அறக்கருணை புரிவானாக!

(4) "Religion is the only real motive force in the world; but what you fellows don't understand is that you must get a man through his own religion and not through yours".

(5) "When man rejects God, moral standards disappear. Might replaces right. Absolute dictatorship becomes the only alternative to helpless confusion and in action."

(6) "We must liberate ourselves from blind technology, and grasp the complevity and wealth of our one nature."

(7) "Peace must be established by transforming man from the interior, and not by creating external structures."

[இக்கட்டுரையின் உள் தலைப்புக்களும், ஆங்கில மேற்கோள்களின் தமிழாக்கமும், ஆசிரியரால் செய்யப் பெற்றன.
—ஆசிரியர்.]

# வைகுண்ட ஏகாதசியும், திருஅத்யயன உத்ஸவமும்

(திரு. திருமலை நல்லான் இராமகிருஷ்ணய்யங்கார், சென்னை.)

திருமகள் கேள்வனே நாராயணன். அவனுக்கும் உயிரினங்களுக்கும் விடலரிய தொடர்பு உண்டு. "நார" "அயந" என்னும் இரு சொற்கள் கூடி "நாராயண" என்னும் ஒரு சொல்லாயிற்று. இது ஆறாம் வேற்றுமைத் தொகை. நாரங்களின் இடமானவன் என்று விரிக்க. அயநம்—இடம். 'நாரம்' என்பதற்கு உயிர்த் தொகுதி என்பது பொருள். உயிரினங்களுக்கு இடமானவன், நாராயணன் என்றதாயிற்று. நாரம் இன்றேல் நாராயணன் இல்லை. அயநம் (ஆதாரம்) இன்றேல் நாரம் இருத்தல் இயலாது. இதனையே திருமழிசைப் பிரான்,

> " நானுன்னை யன்றியி லேன்கண்டாய் நாரணனே
> நீயென்னை யன்றி யிலை"

என்று நான்முகன் திருவந்தாதியிலருளிச் செய்கிறார். ஆக, நாரம் எனப்படும் உயிரினங்களுக்கும், அயநம் எனப்படும் திருமகள் கேள்வனுக்கும் உள்ள தொடர்பு, தொன்று தொட்டு என்றுமுள்ளது என்றதாயிற்று.

பெற்ற தாய் போன்றவன், நாராயணன். பெற்றெடுத்த சேய் போன்றவை உயிரினங்கள். சேயாம் உயிரினங்களை மாயை யெனும் பேய், தாயினிடமிருந்து பிரித்து விட்டது. பிரிந்து வருந்தும் குழந்தைகளைத் தேடிக் கண்டெடுத்து அணைப்பதற்குத் தாய்தான் முயல்கின்றாள். பிரிந்த குழந்தைகள் என்ன செய்யும்? கிடைக்கும் தின்பண்டங்களைத் தின்று நோய்வாய்ப்படுகின்றன. தாயிருப்பதே தெரியாதே! தாய்ப்பாலின் சுவையை அவை எங்ஙனம் காண இயலும்? இறைவன் இருப்பதையே உயிரினங்கள் அறிகிலவே; இறையருளின் சுவையை எங்ஙனம் காண்பது?

உயிர்க்கெல்லாம் தாயாய் அளிக்கின்றவன் தண்டாமரைக் கண்ணன். உயிரினங்களைக் கண்டு தனது அருள் நோக்காம் பால் ஊட்ட விழைகின்றான் கண்ணன். அழகிய சில தலங்களில் வந்து காத்துக் கிடக்கிறான். விளையாட்டுப் போக்கில் குழந்தைகள் இங்கு வரக் கூடும்; கண்டுபிடித்து விடலாமென்று அவனது நசை. அங்ஙனம் அவன் வந்து தங்கிய தலங்களையே "திருப்பதிகள்" அல்லது உகந்தருளின நிலங்களென்கிறோம். இத்தகைய தலங்களில் தலையானது திருவரங்கம். உயிரினங்கள்பல தன்பால் சிக்குதல் பற்றி எம்பெருமான் மிகவும் உவப்புடன் அத்திருப்பதியிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீரங்கம் என்னும் சொல்லுக்கே, உவந்து எழுந்தருளியிருக்கும் இடம் என்பது பொருளாகும்.

உயிரினங்களைக் காப்பதற்கு இறைவன் சில தலங்களைத் தேர்ந்தெடுப்பது போலச் சில காலங்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறான். அவைகளே புண்ய காலங்கள் எனப்படுகின்றன. தலங்களில் திருவரங்கம் போலப் புண்ய காலங்களில் ஏகாதசி தலை சிறந்ததாகும். எம்பெருமான் உகந்த தலமாதல் பற்றித் திருப்பதி திருவரங்கமென்று பேர் பெற்றிருப்பதுபோல அவனுக்குப் பிடித்த காலமாய் இருத்தல் பற்றி ஏகாதசி "ஹரிதிநம்" (நாராயணனுடைய நாள்) எனப்பேர் பெற்றுள்ளது. அறிவற்ற தேச காலங்களில் எம்பெருமான் ப்ரீதி செலுத்துவது, அறிவுபடைத்த உயிரினங்களையாட்கொள்வதற்கே யென்க.

வைணவர்கள் திருவரங்கத்தில் இருப்பதையே தம்பேறாகக் கருதுகின்றனர். "திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்" என்கிறார் மணவாள மாமுனிகள். "நல்லார்கள் வாழும் நளிரரங்கம்" என்கிறாள் ஆண்டாள். அரங்கத்திலிருப்பதே வாழ்ச்சி என்பது அதன் குறிப்பு. ஸம்ஸாரம் அடிக்

கொத்துச் சரணுகதி பண்ணின எம்பெருமாளுரை நோக்கி "த்வய மந்திரத்தைப் பொருளுடன் நவின்று கொண்டு இந்த ஸ்ரீரங்கத்திலேயே இனிது இருக்க" என்று அருளிச் செய்தான் திருவரங்கன். வைணவனுய் அருள் பெற்று விளங்குவதற்குத் திருவரங்கத்திற் குடியேறினல் போதும். ஸ்ரீரங்கமே கோயில். கோயில் வாஸமே வைஷ்ணவம். "கோயிலில் வாழும் வைட்டணவன் என்னும் வன்மை" என்ருர் பெரியாழ்வார்.

இவ்விதமே ஏகாதசி நோன்பினைக் கைக்கொண்டு ஒழுகுவதே வைஷ்ணவமாகும். ஹரி தினத்தைக் கொண்டாடாதவன் எப்படி ஹரியைச் சேர்ந்தவனுக, அதாவது வைஷ்ணவனுக ஆக முடியும்? பேராபத்து நேர்ந்த போதும் களிப்பு மிகுந்த போதும் எவன் ஏகாதசி நோன்பை விடுவதில்லையோ, அவன் வைணவதீக்ஷை கொண்டவனுவான் என்கிறது ஸ்காந்தம்.

"ப்ரமாபதமாங்நர் ஹர்ஷேவா ஸமுபஸ்த்திதே
நைகாதசீம் த்யஜேத்யஸ்து தஸ்ய தீக்ஷாது
வைஷ்ணவீ"

என்பது ஸ்காந்த சுலோகம். வைணவன் தான் ஏகாதசி விரதம் கைக்கொள்ள வேண்டும் என்பதன்று அதன் கருத்து. எவனுயினும் ஏகாதசீ விரதமிருப்பவன் வைணவனுவான் என்பதே இதன் கருத்து.

மானிடவன் எவனுயினும் திருவரங்கத்தில் இருப்பதையே பயனுகக் கருதி யங்கே குடியிருப்பின் வைணவனுகிருன். அவ்வண்ணமே ஏகாதசி விரதம் ஏற்பவன் எவனுயினும் வைணவன் ஆகிருன். எட்டு வயதுக்கு மேற்பட்டு எண்பது வயதுக்கு உட்பட்ட மானிடர் யாவராயினும் இருபட்சங்களிலும் ஏகாதசியன்று உபவாஸம் இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. நிர்ணயஸிந்து என்னும் நூலில் வைணவர், அல்லாதார் என்கிற பிரிவின்றி யாவரும் இந்த ஏகாதசீ விரதத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்று முடிவு கட்டப்பட்டுள்ளது. உலகிற்குத் தீமை புரியும் அசுர சக்தி அழிந்தொழிந்த நன்னுளே ஏகாதசி எனப்படுகிறது. ஆகையால் உலகத்தவர் அனைவரும் கொண்டாட வேண்டியது அவசியமே யன்ருே?

முரன் என்று பேர்பெற்ற அசுரன் ஒருவன் இருந்தான். அவனுல் துன்புறுத்தப்பட்ட இந்திராதியர் பரமசிவனை யணுகி வழி கேட்டனர். நாரணனைச் சரணடையுமாறு வழி காட்டினுர் பரமசிவன். சரணடைந்த தேவர்களுக்காக முன்னின்று ரணம் புரிந்தான் நாரணன். அசுரர்கள் அழிந்தனர். முரன் கிளர்ந்தெழுந்தான். அமரர் சிதறினர். இறைவனும் ஆற்றலிற் குறைவுடையவன் போற் பயந்தோடி வதரி மலையிலுள்ள "ஸிம் ஹவதி" என்னும் குகையிற் போய்க் களைப்புத்திரக் கண்ணுறங்கினுன். முரன் பின்தொடர்ந்து வாள்கொண்டு வதம் செய்ய முற்பட்டான். அவ்வமயம் இறைவன் திருமேனியினின்றும் கன்னி யொருத்தி வெளிப்பட்டுப் போரிட முரனுக்கு முன்னின்ருள். முரன் முடிந்தான். கன்னி வடிவத்தில் தன்னிடமிருந்து வெளிப்பட்ட சக்தி அவ் இறைவனுக்கே வியப்பளிக்கின்றது! "என்பகைவனை முடித்தது யார்?" என்று பரமன் வினவினுன். அக்கன்னி உலகை அச்சுறுத்தும் அசுரனைத் தானே கொன்றதாக நவின்ருள். பேருதவி புரிந்ததாக அக்கன்னியிடம் நன்றி கூறி வரம் வேண்டுமாறு தூண்டினுன் மாயன். ஏகாதசியென்று பேர் இடப்பெற்ற அவ்வனிதை, "நின் அன்புக்கு உரியாளாக நான் ஆகல் வேண்டும்; திதிகளுள் முக்கியமானவளாக நான் விளங்க வேண்டும். யான் பிறந்த இந் நாளில் உபவாஸம் இருப்போருக்கு ஸித்திகளனைத்தும் கைப்புக வேண்டும்" என்னும் வரங்களை வேண்டிக் கொண்டாள். இவ்விஷயம் பிரம்மோத்தர காண்டத்திற் கண்டது. ப்ரும்ம புராணத்திலுமுள்ளது. தீயோரை முடித்து மாயோனை வசப்படுத்தும் இந் நன்னுளை மாந்தரனைவரும் கொண்டாடுவது தகுமன்ருே?

இங்ஙனம் ஏகாதசி தோன்றியது மார்கழி மாதம் கிருஷ்ண பட்சத்தில். ஆகையால் மார்கழி மாதத்துக்ருஷ்ண பக்ஷ ஏகாதசி "உத்பத்தி ஏகாதசி" என்று வழங்கப் பெறுகிறது.

மார்கழி மாதத்துச் சுக்ல பக்ஷ ஏகாதசி "மோக்ஷ ஏகாதசி" என்று வழங்கப் பெறும். இதுவே விமோசநம் தரவல்லது. இந்த ஏகாதசி விரதத்தைக் கைக்கொண்ட வளவிலேயே ஒருவன் வைணவனுகிவிடுகிருன். அதனுல் அவன் இன்னல்களிலிருந்து விடுதலை பெறுதலோடமையாது தன்தொடர்புடையாரையும் இன்னல்களிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் பெறுகிருன். உண்மை வைணவன் ஒருவன்

ஒரு குலத்திலே பிறந்தால் அவனுடைய பிதிருக்கள் கரையேறி விடுவதாக சாஸ்திரம் கூறுகிறது. இங்கு,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா; பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்"

என்னும் குறளும் அதன் உரையும் நினைக்கத் தக்கன.

"ஆஸ் ப்போடயந்தி பிதரம் ப்ரண்ருத்யந்தி பிதாமஹா:
வைஷ்ணவோ ந:குலேஜாத: ஸகஸ்ஸந்தா ரயிஷ்யதி"

(நமது குடியில் வைணவன் பிறந்து விட்டான்; அவன் நம்மைக் கரையேற்றுவான் என்று பிதிருக்கள் குதித்துக் கும்மாளம் போடுகிருர்கள்.) என்ற சுலோகம் இங்குக் கருதத்தக்கது.

வைகாநஸன் என்னும் அரசனெருவன் இந்த மோக்ஷகாதசி விரதத்தின் மகிமையினுல் நரகத்திலழுந்தும் தன் பிதிருக்களைக் கரையேற்றினதாகப் புராணம் கூறுகிறது.

திவ்யப்பந்தங்கள் செந்தமிழ் மறையெனப் போற்றப்படுகின்றன. அவற்றுள் திருவாய் மொழி ஸாம வேதமாகக் கருதப்படுகின்றது. அதனை யறியக்கற்று வல்லவர்கள் வைஷ்ணவர்களாகிருர்கள். அதனைக் கோயிலில் இந்த மோக்ஷகாதசியன்றே தொடங்குகிருர்கள். அன்றிலிருந்து திருவாய் மொழித் திருநாள் பத்து நாட்கள் நடைபெறுகின்றது. ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பத்தாக அநுஸந்திக்கப்படுகிறது. முடிவில் "அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்றபடி ஆழ்வார் மோக்ஷமடைகிருர். ஏகாதசியன்று மோக்ஷ வாயில் திறக்கப்பட்டு விடுகிறது. பிறகு எல்லோருக்கும் அதிற் புகுவது எளிதாகி விடுகிறது! மோக்ஷகாதசியை நாம் முறைப்படி கைக்கொண்டால்நமக்கு மோக்ஷ வாயில் திறந்தே யிருக்கிறதென்பதைக் கோயிலில் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். மோக்ஷ ஏகாததியே, வைகுண்ட ஏகாததி என்றும் வழங்கப்படுகின்றது.

மோக்ஷகாதசிக்கு முன்னும் பின்னுமாகக் கோயிலில் திவ்யப்ரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் அத்யயனம் செய்யப்படுகின்றன. இது பெரிய உத்ஸவமாகக் கொண்டாடப்படுகிறது. திரு அத்யயன உத்ஸவமென்றே இதற்குப் பெயர். மோக்ஷகாதசிக்கு முந்திய பத்து நாட்களும் பிந்திய பத்து நாட்களுமாக இருபது நாட்கள் இவ்வத்யயந உத்சவம் கொண்டாடப்படுகிறது. முந்தியது பகற்பத்து என்றும், பிந்தியது இராப்பத்து என்றும் சொல்லப்படும். அந்தந்த வேளைகளில் அத்யயனம் செய்வதற்கேற்ப அவ்வாறு பெயர் வழங்கப்படுகிறது.

சாஸ்திரங்களில் திவ்யப்ரபந்தம் வேதமென்றும், வேதத்திற்குப் போல அதற்கும் நியமங்கள் உண்டென்றும் சொல்லப்படுகிறது. வடமொழி மறை, தைப் பௌர்ணமி யன்று முதல் ஓதாது நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஆவணிப் பௌர்ணமியிலிருந்து மீண்டும் தொடங்கப்பட வேண்டு மென்றும் நியமமுள்ளது. அவ்வாறே தென்மொழி மறையாகிய திவ்யப்ரபந்தமும், கார்த்திகை மாசத்தில் பௌர்ணமி யன்று முதல் ஓதாது நிறுத்தப்பட வேண்டுமென்றும், மார்கழியில் அமாவாஸை கழிந்து மீண்டும் தொடங்குவதென்றும் நியமம் கையாளப்பட்டு, இவ்வுத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. வடமொழி மறையை ஓதாது நிறுத்தி மீண்டும் தொடங்கும் நியமம் தற்காலம் கைவிடப்பட்டுள்ளது. அதற்காக ப்ராயச் சித்தம் அநுஷ்டிக்கப்படுகிறது.

இவ்வுத்ஸவம் திருவரங்கம் பெரிய கோயிலில் தொன்று தொட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருமங்கை மன்னன் ஆழ்வார் திருநகரியிலிருந்து ஸ்வாமி நம்மாழ்வாரை ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளப் பண்ணி மார்கழி மாசத்தில் இந்தத் திருவாய்மொழித் திருநாளை நடத்தி வந்ததாகத் தெரிகிறது. மாசி மாதந்தான் ஆழ்வார் திருநகரிக்கு மீண்டு எழுந்தருள முடிந்திருக்கிறது. "திருத்தொலைவில்லி மங்கலம்" வழியாகத் திரும்ப எழுந்தருளுவது வழக்கம். அது, மாசி மாசத்தில் நம்மாழ்வார் தொலைவில்லி மங்கலம் எழுந்தருளி மீண்டு திருநகரிக்கு எழுந்தருளும் உத்ஸவமாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருக் கார்த்திகை முதல் திவ்யப்ரபந்தம் ஓதாது, கோயிலில் அத்யயந உத்சவம் ஆன பிறகுதான் திவ்யப்ரபந்தத்தை யாங்காங்கே அநுஸந்திப்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம்.

மார்கழி மாதம் பிறந்ததிலிருந்து தொண்டரடிப்பொடி யாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளி யெழுச்சியும், ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும் விடிவோரையில் விண்ணப்பம் செய்து திருவாராதனம் நடைபெறுகிறது.

திரு அத்யயந உத்ஸவத் தொடக்கத்தின் முதல் நாள் இரவு அரையர் எனப்படும் விண்ணப்பம் செய்வார் திருநெடுந்தாண்டக மென்னும் திவ்யப்ரபந்தத்தை அபிநயத்துடனும் வியாக்கியானத்துடனும் விண்ணப்பம் செய்வதைப் பெருமாள் திருச்செவி சாத்தியருளுவார். மறுநாள் முதல் பகற்பத்து உத்ஸவம் நடைபெறுகிறது. '' திருப்பல்லாண்டு '' தொடங்கி முதலாயிரம், பெரிய திருமொழி இவற்றை அரையர் அபிநயத்துடனும் வியாக்கியானத்துடனும் விண்ணப்பிப்பதைப் பெருமாள் அர்ச்சுன மண்டபத்தில் எழுந்தருளியிருந்து கேட்டருளுகிறார். ஏகாதசி முதல் நாள் மோகினித் திருக்கோலத்தில் நம்பெருமாள் சேவை தருகிறார். புருஷோத்தமன் பெண்ணுருவாகிக் காட்சி யளிக்கிறார். புருஷோத்தமனது பெண் உருவைக் கண்டு கண்ணுதலான் காமபரவசனாகிப் பின் தொடர்ந்ததாகப் பாகவதம் கூறுகிறது. நம் பெருமாளது நாச்சியார் திருக்கோலத்தைக் கண்டு ஸ்ரீபட்டர், பெண்கோலம் அழகாகப் பூண்டாலும் நாச்சியார் விழிவிழிக்கப்போகாது என்று அருளிச் செய்தாராம். ஸ்ரீவைகுண்ட ஏகாதசி யன்று ரத்நஅங்கி, ரத்நகிரீடம் தரித்து பரமபத வாசல் வழியாக ஆயிரக்கால் மண்டபத்திற்குப் பெருமாள் எழுந்தருளுகிறார். பரமபத வாசல் பக்கத்திலொரு கிணறு உள்ளது. அதனை ''விரஜாநதி'' என்று வழங்குகிறார்கள். பரமபதம் போவார்கள் விரஜை யாற்றில் மூழ்கித்தானே போக வேண்டும். அந்த முறையில் இங்கும் ''விரஜாநதி'' இருப்பது பொருத்தம் தானே.

இராப்பத்து நடைபெறும் ஆயிரக்கால் மண்டபம் திருமாமணி மண்டபம் என்று வழங்கப்படுகிறது. பரமபதமாம் வைகுண்டத்திலுள்ள மண்டபத்தின் திருப்பெயரே அது. ''ஸஹஸ்ரஸ்தூணே'' என்று வேதத்திலும் பரமபதத்தில் ஆயிரக்கால் மண்டபம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இராப்பத்து உத்ஸவத்தில் நம்பெருமாள், பந்தலில் பத்தி உலாவும் பத்து நாட்களும், நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியை நம் பெருமாள் கேட்டருளுகிறார். இராப்பத்து உத்ஸவத்தில் நம்பெருமாள், ஏகாந்தமாக வீணை கேட்டுக் கொண்டு உள்ளே எழுந்தருளுவதை நினைந்து நினைந்து மனச்சாந்தி பெறலாம்.

நம் பெருமாள் தாளிணைக்கீழ் வாழ்ச்சி பெறுதலாகிய ''ஆழ்வார் மோக்ஷம்'' ஸேவிப்பது நம் நெஞ்சில் மேவிப் பதிவதொரு பேரின்பக் காட்சியாகும். இயற்பா ஆயிரமும் இராப்பத்துக் கழிந்த மறுநாள் நம்பெருமாளால் திருச்செவி சாத்தப்படுகின்றன. தென்மொழி மறையினைப் பெருமாள் ஆழ்வாராசார்யர்களுடன் பேரோலக்கமா யிருந்து கேட்டருளி அதன் பெருமையினை நாடறியச் செய்கிறார்.

மார்கழி மாதம் வைஷ்ணவமானது. ''மாதங்களில் நான் மார்கழி மாதமாகின்றேன்'' என்றான் கண்ணன் கீதையில். மார்கழி மாதம் ஸத்துவகுணம் தலைதூக்கும் காலம். இறை வழிபாட்டிற்குரியது அம்மாதமே. உலகியலில் ஈடுபட்டு முயல்வது ரஜோகுணத்தின் செயலாகும். ஸத்துவ மாதத்தில் உலகியலி லீடுபடலாகாது. இது கருதியே அதனைச் சூந்ய மாத மென்றனர். ஒரு நாளில் விடிவோரை ஸத்துவ வேளை எனப்படுகிறது. அதனைப் பிராம்ம முகூர்த்த மென்பர். அந்த வேளையில் ஆன்மாவிற்கு இதமான விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செலுத்த வேண்டுமென்கிறது சாஸ்திரம். நாளுக்கு விடிவோரை போன்றது, வருஷத்துக்கு மார்கழி மாதம். நமது ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகக் கருதப்படுகிறது. ஆடி முதல் மார்கழி முடிய இரவு. தை முதல் ஆனி முடியப் பகல். தை மாதம் தேவர்களுக்கு விடிகின்றது. விடிவுக்கு முந்திய மார்கழி மாதம் ப்ராம்ம முகூர்த்தமாகிறது. அந்த வேளையில் ஆன்மாவுக்கு இதத்தை நாம் நாடவேண்டும்.

வைஷ்ணவமாய் ஸத்துவ குணம் வாய்ந்த தாய், ப்ராம்ம முகூர்த்தமா யமைந்த மார்கழியில் வரும் ஏகாதசி, மிகவும் சிறப்புடைய நாளாகும். அதிலும் வளர்பிறையில் வரும் ஏகாதசி மிகவும் சிறப்புடைய நாளாகும். அதிலும் வளர்பிறையில் வரும் மோக்ஷ ஏகாதசியோ மிகமிகச் சிறப்பமைந்த நாளாகும். அந்நன்னாளில் புக்கவருக்கு வைணவத்தை வழங்கும் திருவரங்கத்திற்குப் போய் இறை வழிபாட்டில் ஈடுபட்டால், அதிலும் அறியக் கற்று வல்லாரை வைஷ்ணவர் ஆக்கும் திருவாய்மொழியாம் திவ்யாமிருதத்தை மாந்தினால் அதனினும் யாம் பெறும்பேறு பிறிதொன்று இருக்க முடியாதன்றோ?

# ஸ்ரீ அருணகிரிநாதர் காட்டிய வழி

(திரு. நல். முருகேச முதலியார், சென்னை)

**முன்னுரை :**

சைவ சமயாசாரியர்கள் போல், நாடெங்கும் சென்று அறுமுகச் சிவனார் திருக்கோயில் கொண்டுள்ள தலங்களைத் தரிசித்துப் பாடல்கள் பல்லாயிரம் பாடிய அனுபூதிமான் ஸ்ரீ அருணகிரிநாதர். நால்வர்கட்கும், அருணகிரியாருக்கும் இடையே ஒப்புமை நலன்கள் பலவுள. இறைவனே நேரில் உபதேசம் செய்து அருள்பாலித்தல், அற்புதங்கள் நிகழ்வித்தல், பரசமயத்தாரை நிராகரித்தல், அடியார்கள் பொருட்டோ மன்னர் பொருட்டோ இறைவனையும் குற்றேவல் கொள்ளுதல், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நாற்பாதங்களின் உண்மையையும் உலகுக்குக் காட்டி உய்வடையச் செய்தல் முதலியன. அவை யனைத்திலும், சைவசமயம் விளங்க, திருக்கோயில்கள் மன்னி மாண்பு பெற, மண்ணுலகை விண்ணுலகாக வாழவைக்கச்செய்த அன்புப்பணி"உலகெங்கும்மேவிய தேவாலயந் தொறும்" (திருப்புகழ் 532) சென்று பணிந்து, பரவி இசைத் தமிழால் திருப்புகழ் பல பாடி, செந்தமிழால் அந்தாதி, அலங்காரம், அனுபூதி, வகுப்பு முதலியன வகைவகையாய்ப் பாடி நம்மைப்பத்தராய்ப் பணியவைத்த கருணையே யாகும்.

ஆறும் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரையில், நால்வர் பெருமக்கள் காட்டிய வழியைப், பின்வந்த திருவிசைப்பாக்காரர்களும் பத்து முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரையில் பின்பற்றினார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் நிலவிய ஸ்ரீ அருணகிரிநாதரே (சுமார் 1450 கி. பி.) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரைப்போல் கணக்கற்ற திருக்கோயில்களைத் தரிசித்துப்பாடினார். சுந்தரமூர்த்தி நாயனார்போல் தனக்கும் தன் முதல்வனுக்கும் இடையே நண்ணிய பல அந்தரங்க நிகழ்ச்சிகளை உலகமறியக் கூறினார். மணிவாசகப் பெருந்தகையைப் போல் மெய்யுணர்வு நிலைகளை யெல்லாம் நாம் ஈடேற எடுத்து இயம்பி யுள்ளார். திருப்புகழில் உண்மை வரலாறுகளின் அகச்சான்றுகள் பலப்பல இடங்களில் நிறைந்து கிடக்கின்றன. ஞானசம்பந்தரின் குழந்தை உள்ளம்இயற்கை அழகுகளையும், திருத்தலங்களின் எழில்களையும், அடியார்களின் பண்புகளையும், பரமன் திருஓலக்கங்களையும் கண்டுகண்டு மகிழ்ந்தது. அதுபோன்று, அருணகிரியாரின் பாடல்களும் இலங்குகின்றன.

திருவருணையில் முருகப் பெருமானின் அருள் பெற்ற அருணகிரியார், வயலூரில் மேலும் பற்பல அருள் நலங்களைப் பெற்றார்; பல தலங்களைத் தரிசித்தார். இன்ன வரிசையில் அவர் பாடிய பல தலங்களைத் தரிசித்தார் என்று துணிவுபடக் கூற வழியில்லை. பின்வருமாறு அவருடைய தலயாத்திரையை முறைப்படுத்தலாம். (தணிகைமணி இராவ்பகதூர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்கள், அரிதின் ஆராய்ந்து முறைப்படுத்தியுள்ளார். அதைத் துணை கொண்டு இங்கு இது எழுதப்படுகின்றது.)

## (1) தென்திசை யாத்திரை :

### (அ) திருவண்ணமலை முதல் சிதம்பரம் வரை :

திருவண்ணமலை, திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருவாமூர், வடுகூர், திருத்துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருமாணிகுழி, சிதம்பரம். (9 தலங்கள்).

### (ஆ) சிதம்பரம் முதல் சீகாழி வரை :

தில்லைத் திருவேட்களம், நெல்வாயில், பழமலை, கூடலையாற்றூர், திருமுட்டம், எருக்கத்தம்புலியூர், கடம்பூர், ஆச்சாபுர நல்லூர், மயேந்திரப்பள்ளி, சீகாழி. (10 தலங்கள்).

### (இ) சீகாழி முதல் திருவாரூர் வரை :

காவிரிப்பூம் பட்டினம், கரியவனகர், திருமண்ணிப்படிக்கரை, வைத்தீசுவரன் கோ

யில், திருஅன்னியூர், மாயூரம், ஆக்கூர், திருக்கடவூர், பாகை, திருவிடைக்கழி, திருப்பறியலூர், வழுவூர், கந்தன்குடி, திலதைப்பதி, அம்பர் மாகாளம், நள்ளாறு, கண்ணபுரம், திருமருகல், திருச்செங்காட்டங்குடி, திருவிற்குடி, விசயபுரம் (22 தலங்கள்).

(ஈ) வேதாரணியம் முதல் கும்பகோணம் :

திருவாரூர், சிக்கல், நாகைப்பட்டினம், தேவூர், எட்டிகுடி, வலிவலம், கைச்சினம், தண்டலைநீணெறி (8 தலங்கள்).

(உ) வேதாரணியம் முதல் கும்பகோணம் :

வேதாரணியம், கோடிகா, எண்கண், குடவாயில், திருவாஞ்சியம், திரியம்பகபுரம், கூந்தலூர், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, பந்தணைநல்லூர், மருத்துவகுடி, திருவிடைமருதூர், திருபுவனம், திருப்பனந்தாள் (14 தலங்கள்).

(ஊ) கும்பகோணம் முதல் சுவாமிமலை வரை :

சுவாமிமலை, சோமீச்சுரம், பெரியமடம், குரங்காடுதுறைகள், சிவபுரம், கொட்டையூர், சத்திமுற்றம், பழையாறை, திருவலஞ்சுழி (9 தலங்கள்),

(எ) சுவாமிமலை முதல் திருச்செங்கோடு வரை :

திருவேரகம் காவளூர், தஞ்சை மாநகர், சப்த தலங்களில் திருவையாறு, கண்டியூர், பெரும்புலியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், திருப்பழுவூர், பூவாளூர், திருமாந்துறை, வாலிகண்டபுரம், திருநெல்வாயில் அரத்துறை, வேப்பஞ்சத்தி, கொல்லிமலை, தீர்த்தகிரி, கனகமலை, கொங்கணகிரி, சேலம் ராசபுரம், திருச்செங்கோடு (19 தலங்கள்)

(ஏ) திருங்செங்கோடு முதல் திருச்சிராப்பள்ளி வரை : (4 தலங்கள்).

(ஐ) திருச்சிராப்பள்ளியும் சுற்றியுள்ள தலங்களும் (12 தலங்கள்).

(ஒ) கடம்பந்துறை முதல் பேரூர் வரை (12 தலங்கள்).

(ஓ) பேரூர் முதல் பழநி வரை (8 தலங்கள்)

(ஔ) பழநி முதல் மதுரை வரை (4 தலங்கள்).

(க) மதுரை முதல் திருச்செந்தூர் வரை (3 தலங்கள்)

(கா) திருச்செந்தூர் முதல் ஈழநாடு வரை (3 தலங்கள்).

(கி) ஈழநாட்டுத் தலங்கள் (4 தலங்கள்—அருக்கொணமலை, கண்டி, திருக்கோணமலை, கதிர்காமம்).

(கு) பொதியமலை (பாசநாசம்) முதல் திருப்பெருந்துறை வரை (12 தலங்கள்).

(கூ) திருப்பெருந்துறை முதல் திருவண்ணமலை வரை மீண்டும் (6 தலங்கள்).

(கெ) திருவண்ணமலை முதல் காஞ்சிபுரம் வரை :

செஞ்சி, திருவாமாத்தூர், திருவக்கரை, மயிலம், பேறைநகர், இந்தம்பலம், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், திருக்கச்சூர் (12 தலங்கள்).

(கே) காஞ்சிபுரம் முதல் வள்ளிமலை வரை :

காஞ்சியிலுள்ள பல கோயில், திருவோத்தூர், வாகை, காமத்தூர், வல்லக்கோட்டை, மாடம்பாக்கம், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருவொற்றியூர், ஆண்டார்குப்பம், சிறுவை (அல்லது சிறுவர்—அம்பேடு), கோடைநகர் (அல்லது கோயம்பேடு), பாடி (அல்லது திருவலிதாயம்), வட திருமுல்லைவாயில், திருவேற்காடு, பாக்கம், பழையனூர்த் திருவாலங்காடு, முள்வாய், வேப்பூர், தேவலூர், ஒடுக்கத்துச் செறிவாய், ராயவேலூர், விரிஞ்சிபுரம், திருவலம் (24 தலங்கள்).

(கை) வள்ளிமலை முதல் திருத்தணி வரை :

வள்ளிமலை, திருத்தணி (சிதம்பரத்துக்கு 65 பாடல்கள் அடுத்தபடியாக அழகு திருத்தணிக்கு 64 பாடல்கள்).

(கொ) வள்ளிமலை முதல் ஸ்ரீசைலம் வரை :

வெள்ளிகரம், திருவேங்கடம், திருக்காளத்தி, ஸ்ரீசைலம்.

(கோ) வட இந்தியா ;

காசி, மாயாபுரி (அரித்துவார்), திருக்கயிலை (தூரத்திலிருந்து), செகந்நாதம், விசுவை (விசாகப்பட்டினம்), புத்தூர் (சோமநாதன் மடம் (ஆகிய 6 தலங்களைத் தரிசித்துக் கொண்டு, பின்தாம் பிறந்த தலமாகிய திருவண்ணமலை சேர்ந்தார். சுமார் 400 தலங்கள் முதலாகவோ வைப்பாகவோ திருப்புகழில் பாடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ அருணகிரியார் இமயம் முதல் கதிர் காமம் வரையுள்ள தலங்களைத் தரிசித்துத் திருப்புகழ் பாடினார். அவர் சமயாசாரியர்களை அடியொற்றியே தலயாத்திரை செய்தது மட்டுமன்றி. மூலை முடுக்குகளிலுள்ள பல முருகன் திருக்கோயில்களையும் கண்டு தரிசித்தார். வைணவத் தலங்களையும் கண்டார். திருப்புகழில், திருமால் புகழ், சக்தி புகழ், விநாயகக் கடவுள் புகழ், அடியார் புகழ், சித்தர் புகழ் நிறைந்துள்ளது. சிறப்பாக மலைக் கோயில்களையும், சித்த புருடர்கள் தொடர்பு கொண்டுள்ள பல அற்புதத் தலங்களையும் கண்டு தரிசித்தார். அவர் பாடல்களில் பலபல வரலாற்றுச் செய்திகள், புராணக் குறிப்புகள், நாயன்மார்கள் சரிதைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சேக்கிழாருக்குப் பின்வந்த இவர், அவர் போலவே சரித்திர உணர்வு கொண்டும் பாடியுள்ளார். எடுத்துக் காட்டாக, சென்னை மாநகருக்கு அருகிலுள்ள பலபதிகளின் இருக்கும் இடங்கூட நம்போன்றவர்கட்கு அறிய முடியாமல் கிடக்கிறது. சமீபத்தில் நிலவிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் தொண்டை நாட்டின் யாத்திரையில் தரிசித்த, பாடிய தலங்களை அறிந்து வழிதெரிந்து, விளக்கம் எழுதத் தகவல் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவ்வாறிருக்க அருணகிரியார் பலப்பல இடங்களின் செய்திகளை அறிந்து விளக்கியுள்ளார்.

எடுத்துக் காட்டாக, சென்னைக்கு சமீபத்திலிருக்கும் (19 மைல்கள்) பொன்னேரி தாலுக்காவிலுள்ள சின்னம்பேடு என்ற ஊரில் எழுந்தருளிய முருகப் பெருமானைத் தரிசித்துப் பாடியுள்ளார். இந்த ஊர் திருப்புகழில் கண்டபடி, சிறுவர் இருவர் அம்பெடுத்த ஊர் (சிறுவரம்பேடு) எனப்பேர் பெற்றதென்னும் செய்தி, அருணகிரியார் திருப்புகழிலிருந்துதான் விளக்கம் அடைகிறது. ஸ்ரீ ராமரின் மைந்தர்களாகிய லவ-குசர்கள் வில்லால் எதிர்த்து சயங்கொண்ட ஊர் என்பதும், அது திருவூரகப் பெருமாள் வீற்றிருக்கும் ஊர் என்பதும், அத்தலத்திலுள்ள பெருமாள் கோயிலினின்றும் அறியப்படுகிறது. இந்தக் கோயில் முருகன் திருவுருவம் மிகவும் அழகு வாய்ந்தது. பாலசுப்பிரமணியர் திருக்கோலம். ஒருகரம் தொடையின்மேலும் மற்றொன்று அபயகரமுமாய் உள்ளது. காதில் குழைகள் காணப்படுகின்றன. பெருமானின் முன்னமர்ந்த மயில் பெரியதும் மிக சித்திர ரூபமும் பொருந்தியுள்ளது. பிள்ளையார் மிக எழில் கொண்டது. முகத்தில் புன்முறுவல், கண்களில் தம்பியார் அமர்ந்திருக்கும் திசை நோக்கிக் கண்ணோட்டம். அருணாசலர், உமையம்மை மூர்த்தங்களும், சூரியன் முதலான பரிவாரங்களும் அழகுபட இருக்கின்றன. இந்தத் தலத்துக்கு நான்கு திருப்புகழ்கள் அமைந்துள்ளன.

இப்போது கோயில்கிலமாகக்கிடக்கின்றது. கருவறைக்கு முன்கூட மேல் தளமில்லை. எந்த நாளில் இந்தச் சிதைவு நேரிட்டதோ அறியக்கிடைக்கவில்லை. இப்போது ஊரார்கள் கூடித் திருப்பணி செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். செல்வாக்குப் பெற்ற கோயில்களின் மிகுதி பணங்களைக் கொண்டு இந்த நிலையிலுள்ள பாடல் பெற்ற கலை மிகுந்த புராதனக் கோயில்களைச் சீரமைப்பது நல்ல பணியாகும். மருத்துவ மனைகள் உடல் பிணியைத் தான் தீர்க்கும். மனநலம் பெறுவதற்குச் சிற்றூர்களிலுள்ள அமைதிபெற்ற திருக்கோயில்கள் அருள் வழங்கும். சிந்தனைக்கும் வந்தனைக்கும் அனுபூதிமான்கள் பாடிய (சுற்றுலாப் பாட்டையில் சிக்கி அமைதி யிழந்த கோயில்களைவிட) உள்ளூர்களிலுள்ள ஆலயங்களே மிகவும் தேவை. ஆலயத்தில் மனம் லயிக்க வேண்டும். க்ஷேத்திரம் என்றாலும் நிலைத்தல் என்பது பொருள்.

## முடிவுரை :

அருணகிரியாருக்குப்பின், ஸ்ரீராமலிங்க அடிகளாரும், ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச அடிகளாரும், தரிசித்த மூர்த்திகளைப் புகழ்ந்து பனுவல் பாடியுள்ளார்கள். ஆனால் அருணகிரியாருக்கு ஒப்பாவார் யாருமில்லை. அவர் கண்ட (சகலமத) தேவாலயங்களிலும் கடவுளெனக் கருதி, வழிபடுகின்ற எந்த மூர்த்தியும் தான் வழிபடும் முருகன் எனவே உணர்ந்து புகழ்ந்து, புகழ் கடந்த சிவபோகம் பெற்றார். அவர் காட்டிய வழி, பொய்யிலா மெய்வழி. திருக்கோயில்களைப் பேணும் நல்லோர் பின்பற்ற வேண்டிய வழி. அருணகிரியார் காட்டிய தேவாலயத்தவம் உலகில் நிலவுக!

# கோனைப் புகழுமின்

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,
தேவகோட்டை)

"வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎன்
கோனைப் புகழுமின் கூடலும் ஆமே"

உயிர்களின் வாழ்க்கை, எந்த நாளிலும் பிறரை எதிர்பார்த்தே நிகழ்ந்து வருவது. செல்வராயினும், வறியவராயினும் தத்தமக்கு வேண்டியவற்றைத் தாந்தாமே நிறைவேற்றிக் கொள்ளுந் தரத்தினராய், ஒருவரேனும் காணப் பெறவில்லை. "பொருட்செல்வம் படைத்தவர்கள், பிறருதவியை நாடாமல் வாழ முடியும்" என்று ஒருசிலர் பேசுவதையும், எண்ணுவதையும் நாமறிவோம். அது, ஒரு சிறிதும் பொருந்துவதன்று.

"வறியவரது வாழ்க்கையைவிடச் செல்வரது வாழ்க்கை, பிறரிடமிருந்து பெறும் உதவியை எளிமையாக்கும் இயல்புடையது" என்று சொல்லுவதானால், அதை வேண்டுமாயின் ஒருவாறு ஏற்றுக் கொள்ளலாம். "ஈட்டி எட்டிய மட்டுமே பாயும், பணம் பாதாளம் வரை பாயும்" என்பது முதலாகிய பழமொழிகளும், காட்சி அளவையும், செல்வர்கள் நினைத்தால், உலகியலில் பெரும்பாலும் தத்தம் கருத்துக்களை முடித்துக் கொள்ள முடியும், என்பதைப் புலப்படுத்துகின்றன.

வறியவர் உதவி பெறுதல் அரியதாகவும், செல்வர் உதவிபெறுதல் எளியதாகவும் இருப்பினும், பிறர்பாற் பெறும் உதவி இருவருக்கும் உண்டென்பது தெளிவு. அங்ஙனம் உதவியை நாடி நிற்கும்போது, உதவி செய்வோரை அது பெறுவோர் பாராட்டிப் புகழுவது இயல்பு. அப்பாராட்டு, உதவி பெறுவதற்கு முன்னரோ; பெற்றதன் பின்னரோ; அன்றி முன்னரும் பின்னருமோ நிகழும். பாராட்டுவோர், பாராட்டுப் பெறுவோரின் தகுதிகளுக்கேற்பச் சிற்சில வேளைகளில் பாராட்டும் புகழில், பொய்ம்மைகள் கூடக் கலந்து விடுவதுண்டு. அதற்குக் காரணம், இகழ்ச்சி உடையாருங்கூடப் புகழ்ச்சி நாட்டமுடையவராயிருப்பதும், அளவுபட்ட சிறு புகழே உடையாரைப் பெரும் புகழ் உடையவராக மதிக்க முற்படுவதும், முதலியனவாம்.

இதுபற்றியே, நமது அறநூல்கள் அனைத்தும் "புகழை நாடிச் செயல் புரிவது கீழ்மையானது" என்று வற்புறுத்தி வருகின்றன. புகழ், நம்மை நாடி வரவேண்டுமேயன்றிப், புகழை நாம் நாடி நிற்பது கூடாது. இதனை உணர்த்த வந்த அருண்மொழித் தேவர் "ஈண்டிய புகழின்பாலார்" என்று அருளிச் செய்து, அவரை நாடிப் புகழ் சேர்ந்ததை அறிவுறுத்தியுள்ளார். அப்பர் அடிகளின் தந்தையாருக்கு அமைந்த "புகழனார்" என்னுந் திருப்பெயரும் இதனை வலியுறுத்துவதாகும்.

பொருத்தமில்லாத மிகப்பெரிய அளவுக்குப் புகழை நாடி அலைவதும், இகழ்வுடையாரைப் புகழ்வது முதல் எல்லையில்லாத அளவுக்குப் புகழ்வது வரை யுள்ளவற்றைச் செய்வதுமே, எந்த நாளிலும் பெரும்பாலாக உலகியலில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. "மக்களைப் புகழும் புகழ்ச்சியெல்லாம் வறட்டுப் புகழ்ச்சியே" என்று உண்மை உணர்ந்த அருளாசிரியர்கள் கண்டு, அவற்றிலேயே தலைப்பட்டு நிற்கும் நமக்குப், பல கோணங்களில், எல்லையில்லாத பெரும் புகழாளனாக விளங்கும் இறைவனையே என்றென்றும் ஏத்திப் புகழுமாறு, ஆணையிட்டருளுகின்றார்கள்.

இறைவனது புகழொன்றே "பொருள் சேர் புகழ்" என்று பொதுமறை புகல்கின்றது. அந்தப் புகழொன்றே அளவுபடாது,

மேலும் மேலும் பெருக்கமுடையதாய் வளர்ந்து கொண்டிருப்பதென்பதை,

"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன் றறியேன்."

என்று மணிவாசகம் தெளிவு படுத்தியருளு கின்றது. எல்லையில்லாத இறைவனது புகழை யார் பேசுகின்றார்களோ, அவர்களது புகழும் எல்லையில்லாது நிறையும். அது, ஏனைய உல கத்தார் எல்லோராலும் பாராட்டிப் பேசவும் பெறும். இவ்வுண்மையைத் திருமூலதேவ நாயனார், தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்து இருபத்தோராம் செய்யுளில், விளக்கி யருளுகின்றார். அது,

"வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி யொழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎம்
கோனைப் புகழுமின் கூடலும் ஆமே"

என்பதாகும்.

இதில், சிவபெருமான் மேகமாக உருவகிக் கப் பெறுகிறார். வானவெளியில் இயங்கு கின்ற பெரிய மேகம், கைம்மாறு கருதாது உதவி புரிவது. இதனைத் திருவள்ளுவதேவர், "கைம்மாறு வேண்டா கடப்பாடு, மாரி மாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு" என்ற குறளில் அறிவுறுத்தினர். மேகத்தைப் போலச் சிவபெருமான், உயிர்களிடத்திலி ருந்து எந்தப் பிரதிப் பயனையும் வேண்டாது, அவற்றின் பெத்தக் காலத்திலும், முத்திக் காலத்திலும் இடையீடின்றி உதவி புரிந்து வருகின்றார்.

மேகத்தின் பயனாகிய மழை, அதனை எதிர் நோக்கி வாழும் பயிருள்ள நிலங்களிலும் எதிர்நோக்காதிருக்கும் கடல், பாலை நிலம் முதலியவற்றிலும் பெய்யும். அதுபோலச் சிவபெருமான் உதவுவதாகிய திருவருள், அதனை எதிர்நோக்கியிருக்கும் மெய்யடிமை யாளர்களிடத்தும், எதிர் நோக்காதிருக்கும் பொய்யடிமை யாளர்களிடத்தும், பொதுமை யில் ஒப்பச் செல்லும். என்றாலும், மழைப் பெயலால் பயிர் நிலங்கள் மட்டுமே பயன் பெறுவதுபோலத், திருவருளால் மெய்யடி யார்கள் மட்டுமே உய்தி பெறுகின்றனர் என்பது உணரத் தக்கதாகும்.

திருமாலும் நான்முகனும் முதலிய தேவர் கள், அசுத்த மாயையால் ஆகிய உடம்புகளைக் கொண்டவர்கள். அதனால் அவர்களது பிறப்பை "ஊனப்பிறவி" என்று ஆசிரியர் குறித்தருளினர். பிறப்பு, துன்பத்திற்கு அடிப் படையானது. அது நீங்கினாலன்றி, நிலையான இன்பம் பெறமுடியாதென்பது தேற்றம். பிற வியை நீக்கிக் கொள்ள வேண்டுமென்று, பிறந்திறக்கின்ற இயல்புடைய தெய்வங்களை நாடிநிற்பது, பேதைமையாகும். பிறப்பும், இறப்பும் இல்லாத பெருமானே, நம்மைப் பிறப் பிறப்பிலிருந்து விடுதலை யடையச் செய் வார். மாலயனும், வானவரும் தங்கள் பிறவித் துன்பம் நீங்கச், சிவபெருமானை வழிபடுவார் களாயின், மனிதப் பிறவி பெற்ற நாம், அவரை வழிபடுவதையே கடமையாகக் கொள்ள வேண்டுமல்லவா?

பிறவி யொழிப்புக்குச் சிவபெருமான் ஒரு வரே யுள்ளார் என்பதைப் "பிறவி ஒழிக்கும் ஒருவனை" என்று தெளிவு செய்தார் ஆசிரியர். "செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று, பத்தி செய்மனப் பறைகட் கேறுமோ" என்ற நாவரசர் திருவாக்கு, இங்கே நினைவு கூர்தற் குரியதாகும். பட்டம் பதவிகளையும் இன்ப நுகர்ச்சிகளையுமே பெரியனவென்று கருதி, அவற்றில் அழுந்தி நிற்கின்ற தேவர்களைக், கருணை மேலிட்டால் ஆட்கொண்டு, பிறவி யொழித்துப் பேரின்பம் வழங்குகின்ற சிவ பெருமானது பேரருளை, எவ்வாறு புகழவல் லேம்?

தாருகா வனத்தில் வாழ்ந்த முனிவர்கள், வேதத்திலுள்ள கன்மகாண்டப் பகுதியை மட்டும் கொண்டு, "செய்யும் செயல்களே பயன்களை வழங்கும்" என்று நம்பிச், செய்த வேள்வியில் சிவபெருமானிடம் ஏவ எழுப்பிய யானையை, அது கதறிப் பிளிறும்படி, அதன்



ஏரிகாத்த இராமபிரான்

மதுராந்தகம்.

தோலை உரித்து, அவர் போர்த்துக் கொண்டார். இயல்பான தன் வலிமையுடன், வேள்விச் சாலையிற் கிடைத்த மந்திர வலிமையையும் பெற்றுவந்த யானை, இறைவனது பெரிய அருள் வலிமையின் முன்னே நிற்க முடியாததாயிற்று. இந்தச் செய்தியை, ஆசிரியர் இங்கே குறிப்பதிலிருந்து, செயல்களே பயன்களைத் தரமாட்டா என்பதும், தேவதேவனுகிய சிவபெருமானுடைய உதவியே பயன் பெறுவதற்கு அடிப்படை, என்பதும் அறிய வேண்டுவன வாகும்.

இங்ஙனம் வானப் பெருங்கொண்டலாகி இணையற்ற வள்ளற் பெருமானுகவும், எல்லோரது ஊனப் பிறவியையும் ஒழிக்கும் ஒருவனுகித் துன்ப நீக்கம் செய்பவனுகவும் விளங்கும் சிவபெருமானைப் புகழ்ந்தால், நமது மலவாதனை யொழிந்து, அவனைக்கூடி மகிழ்ந்து இன்புறலாம் என்பது, ஆசிரியர் இச்செய்யுள் மூலமாக நமக்கு வழங்கும் அருட்குறிப்பாகும்.

## பாவை மாநாடுகள்

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிகோயில், தேனும்பேட்டை.
சங்கரநாராயணசுவாமி கோயில், சங்கரநயினுர் கோவில்.
கன்னிகாபரமேசுவரி அம்மன் மடம், தாராபுரம்.
தண்டாயுதபாணிசுவாமி கோயில், பழநி.
சுப்பிரமணியசுவாமி தேவஸ்தரனம், திருத்தணிகை.
காசிநாதசுவாமி தேவஸ்தானம், அம்பாசமுத்திரம்.
கம்பராயப் பெருமாள், காசிவிசுவநாதசுவாமி தேவஸ்தானம், கம்பம்.
பூமிநாதசுவாமி தேவஸ்தானம், வீரவநல்லூர்.
பூலானந்தீசுவரர் தேவஸ்தானம், சின்னமனூர்.
ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி தேவஸ்தானம், மூவலூர், மாயூரம் வட்டம்.
ஸ்ரீ திருக்காளத்தீசுவரர் தேவஸ்தானம், உத்தமபாளையம்.
ஸ்ரீ கிருஷ்ணசாமி வகையரு தேவஸ்தானம், அம்பாசமுத்திரம்.
ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் தேவஸ்தானம், நாகப்பட்டினம்
சிவகெங்கை தேவஸ்தானங்கள்.

# திருவாதிரை விழாச் சிறப்பு

## முன்னுரை :

சிவநேயச் செல்வர்களுக்குத் திருவாதிரை என்பது மிகவும் சிறப்புடைய ஒரு பெருந் திருநாள் ஆகும். திருமாலுக்குத் திருவோணம் சிறந்த நாள் எனத் திகழ்வது போல, சிவபெருமானுக்குச் சிறந்தநாள் எனத் திகழ்வது திருவாதிரை ஆகும்.

## திருஞானசம்பந்தர் :

சிவநெறித் தலைவர் ஆகிய 'திருஞானசம்பந்தர்' திருவவதாரம் செய்தருளிய நாள், திருவாதிரையே யாம். இதனை,

"அருக்கன்முதற் கோள் அனைத்தும்
அழகியஉச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப்
பேணியநல் ஓரைஎழத்
திருக்கிளரும் ஆதிரைநாள்
திசைவிளங்கிப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல்
வைதிகமும் தழைத்தோங்க..."

—பெரியபுராணம்

என ஆசிரியர் சேக்கிழார் பெருமான், சிறந்தெடுத்துக் கூறுதல் கொண்டு தெளியலாம்.

## சேக்கிழார் :

திருஞானசம்பந்தர் திருவாதிரையில் திருவவதாரம் செய்தது மட்டுமே யன்றி, அவர் சிவஞானப்பால் ஊட்டப்பெற்ற திருநாளும் திருவாதிரையே ஆகும். அன்றியும், ஆசிரியர் சேக்கிழார் தாம் இயற்றியருளிய பெரிய புராணத்தினை அரங்கேற்றம் செய்யத் தொடங்கியதும், பின்னர் அதனை அரங்கேற்றம் செய்து முடித்ததும் கூடத் திருவாதிரைத் திருநாளே என்று உமாபதிசிவம் உணர்த்துகின்றார். வைஷ்ணவ சமயப் பெருஞ் சான்றோர் ஆகிய ஸ்ரீராமாநுஜர் தோன்றியருளிய நாளும் திருவாதிரை நட்சத்திரமே யாகும்.

## ஐந்தொழில் நிகழ்ச்சி :

திருவாதிரை சிவபிரானுக்கு உரிய சிறந்தநாள். அந்நாளில்தான், அப்பெருமான் உயிர்களின் நலங்கருதி ஐந்தொழில்களை இயற்றத் திருவுருவம் கொண்டான். ஒரு தொழிலைச் செவ்விதிற் செய்து முடிக்க விரும்புவோர், வைகறையில் எழுந்து, நல்ல வேளையில் அதனைத் தொடங்குவர். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறையாகத் திகழும் மாட்சிமையின் மிக்கது. எனவே, அம்மாதத்தின் சிறந்த நாள் ஆகிய நல்ல வேளையில், உயிர்களெல்லாம் உய்ந்து நலம் பெறற் பொருட்டு, இறைவன் ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியங்) களையும் இயற்றத் திருவுளங்கொண்டு தலைப்படுகின்றான். இக் கருத்திலேயே, சிவாலயங்களிலெல்லாம் திருவாதிரைத் திருநாளில் "பஞ்ச கிருத்திய உற்சவம்" (ஆருத்ரா தரிசனம்) நடத்தப் பெறுகின்றது.

## திருவெம்பாவை :

திருவாதிரைத் திருநாளில், இறைவன் ஐந்தொழில் இயற்றத் திருவுளம் கொள்ளுகின்றான் என்னும் கருத்துப் பற்றியே, மாணிக்கவாசகர் தாம் இயற்றிய "மார்கழி நீராடற் பாட்டு" ஆகிய திருவெம்பாவையின் இறுதிப் பாடலில் (20), இறைவன் நிகழ்த்தி யருளும் ஐந்தொழில்களையும் குறிப்பிட்டு, அவையிற்றை நிகழ்த்தும் இறைவனின் ஆற்றலாகிய திருவடிகளைப் போற்றி வழுத்தித் தமது பாடலை முடித்தருளியுள்ளார்.

### திருவாரூர் :

இத்தகைய பல பெருஞ் சிறப்புகளெல்லாம் இனிது உடையதாதல் பற்றியே, தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் திருவாதிரைத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினை எல்லாம் கூறித் தெரிவிக்கும் முறையில் அமைந்துள்ள "முத்து விதானம் மணிப்பொற்கவரி" எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத் திருப்பதிகம், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். திருவாரூரில் மட்டுமேயன்றித் தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலுமே திருவாதிரை விழாக் கொண்டாடப்பெற்ற செய்தியினை,

"ஓரூர் ஒழியாது உலகம்
எங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன்றன் ஆதிரை
நாளால் அதுவண்ணம்"

எனத் திருநாவுக்கரசர் குறிப்பிடுதல் கொண்டு, நாம் அனைவரும் நன்கினிது உணரலாம்.

### திருமயிலை :

திருஞானசம்பந்தர் சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரத்தின்கண் மாதந்தோறும் நிகழும் விழாக்களாகக் குறிப்பிடுவனவற்றுள், திருவாதிரை விழாவும் ஒன்றாகத் திகழ்தல் காணலாம்.

"ஊர்திரை வேலை
உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக்
கபாலீச் சுரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே
போதியோ பூம்பாவாய்"

என்பதனால் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்பே திருவாதிரை விழா நாடெங்கணும் நிகழ்ந்து வந்த செய்தி தெளியப்படும்.

### சேந்தனார் வரலாறு:

இனி திருவாதிரை விழாவோடு, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வரலாறும், தொடர்பு பெற்றுள்ளது. 'சேந்தன்' என்னும் பெயரில் பலர் பல்வேறு காலத்து வாழ்ந்துள்ளனர். அவர்களுள் இங்குக் குறிப்பிடப் பெறுபவர் பட்டினத்தடிகள் காலத்தில் வாழ்ந்தவரும், அவருக்கு மிக நெருங்கிய துணைவரும் ஆக இருந்தவர். பட்டினத்தடிகள் துறவு வாழ்க்கையையே மேற்கொண்ட பிறகு, இவரும் உலகியல் வாழ்விற் பற்று அற்றவராய்த் தில்லையை அடைந்து, அங்கு விறகு வெட்டிப் பிழைக்கும் தொழிலைத் தாமே விரும்பி மேற்கொண்டு, அதனாற் கிடைத்த சிறுபொருள் கொண்டு, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துத் தாமும் உண்டு வாழ்ந்து வந்தார்.

இவர்தம் உயர்ந்த மனநிலையினையும், உண்மைப் பக்தியுணர்வினையும், உலக மக்களுக் கெல்லாம் உணர்த்த, இறைவன் திருவுளங்கொண்டான். ஒருநாள் நள்ளிரவிற் காலங்கடந்த நிலையில், இறைவன் ஓர் அடியவரைப்போல வேடங்கொண்டு சென்று, சேந்தனாரை அடைந்து, தமது பசியை நீக்க ஏதேனும் உணவு தருமாறு வேண்டினான். அந்நள்ளிரவிற் சேந்தனார், ஒரு கந்தையில் தாம் முடித்து வைத்திருந்த களியுணவினை அவருக்குப் பரிந்து வழங்கினார். அந்நிகழ்ச்சியினை யாவரும் அறிதற் பொருட்டுத் தில்லைக் கூத்தப் பெருமான், தமது திருமேனியிலும், திருக்கோயிலிற் பல இடங்களிலும், அக் களியுணவு சிதறிக் கிடக்குமாறு செய்தருளினார். அதுபற்றியே, திருவாதிரைத் திருவிழாவிற் கூத்தப் பெருமானுக்குக் களியுணவு படைக்கும் வழக்கம் ஏற்படுவதாயிற்று.

### திருக்களிற்றுப்படியார் :

சேந்தனார் சிவபிரானுக்குக் களியமுது வழங்கிய செய்தியினைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியார் என்னும் நூலில், அதனை இயற்றி யருளிய திருக்கடவூர்

உய்யவந்த தேவநாயனுர் பின்வரும் பாடலிற் குறிப்பிடுகின்ருர்.

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்த்த மனத்தால் அவிழ்க்க—அவிழ்ந்தசடை
வேந்தனுர்க் கின்னமுதம் ஆயிற்றே மெய்யன்பிற்
சேந்தனுர் செய்த செயல்"

**வானநூல் ஆராய்ச்சி:**

பண்டைத் தமிழ் மக்கள் வானநூல் ஆராய்ச்சியில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அதனை விளக்கும் சான்றுகள் பல, தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. திருவாதிரை விழாவும் அவற்றுள் ஒரு சான்று ஆகும் எனலாம்.

இரவு நேரங்களில், வானத்தில் எண்ணில்லாத விண்மீன்கள் ஒளிர்ந்து கொண்டிருத்தலை நாம் காண்கிறேம்.

**திருவாதிரை நட்சத்திரம்:**

இத்தகைய விண்மீன் தொகுதிகள் (constell. tions) பலவற்றையும், பண்டைத் தமிழ் மக்கள் ஓரளவு நன்கு அறிந்து வைத்திருந்தனர். சிறப்பாகத் திருவாதிரை நட்சத்திரம் பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர். அது மஞ்சள் கலந்த செம்மை நிறம் (yellowish-red) உடையது. எனவே சிவபிரானின் பொன் நிறச் செந்நிறம் ஆகியவற்றைத் தமிழ் மக்கள் அதனேடு இயைபுறுத்தினர். திருவாதிரை ஒரு தனி நட்சத்திரம் அன்று, பல நட்சத்திரங்களைத் தன்னகத்தே கொண்டது (Multiple-star). அத்தன்மை, சிவபிரானின் எண்டோள் முதலியவற்றிற்கு ஏற்பப் பொருந்தியுள்ளது. இவையன்றியும், திருவாதிரையானது சில சமயங்களிற் கீழும் மேலும் மாறி மாறி இயங்கிச் செல்லும் தன்மை வாய்ந்தது. அது சிவபிரான் செய்யும் திருநடனத்திற்கு ஒப்புமையுடையதாயிற்று. இம்மட்டோ! திருவாதிரையானது பேரொளி மிக்குத் திகழும் ஒரு சில விண்மீன்களுள் தலை சிறந்தது. அதுவும் "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி" ஆகிய சிவபெருமானின் சிறப்பியல்பை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது.

**ஆதிரையான்:**

எனவேதான், திருவாதிரையைச் சிவபிரானேடு தொடர்புறுத்தி, அதனைச் சிவபிரானுக்கு உரிய திருநட்சத்திரமாகத் தமிழ் மக்கள் போற்றிவரத் தலைப்படுவாராயினர். சிவபெருமானுக்கும் "ஆதிரையான்" "ஆதிரைநாள் உகந்தான்" எனப் பல பெயர்கள் வழங்குவனவாயின.

**முத்தொள்ளாயிரம்:**

கவிதைச் சுவை ததும்பும் செந்தமிழ் நூல் ஆகிய முத்தொள்ளாயிரம் என்னும் நூலில் ஒரு பாடல், "சிவபிரான் ஞாயிறு திங்கள் விண்மீன்கள், எண்ணில்லாத உலகங்கள் ஆகியவற்றைப் படைத்துக் காத்து வருகின்ருன். அவன் படைத்த விண்மீன்கள் எண்ணில்லாதனவாக இருக்க, அவற்றுள் ஒன்றனை மட்டும் உட்கொண்டு, அப்பெருமானை இவ்வுலகம் "ஆதிரையான்" "ஆதிரையான்" என்று புகழ்ந்து கொண்டாடுகின்றதே! இஃது என்ன வியப்பு"? என்னும் கருத்தமைய இயன்றுள்ளது. திருவாதிரையின் சிறப்பினை மிகவும் வியந்து போற்றியே, அப்பாடல் அங்ஙனம் பாராட்டி விம்மிதம் எய்துகின்றது.

மன்னும் கனலி மதிநாண்மீன் என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனை—இன்னமும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

—முத்தொள்ளாயிரம்.

**முடிவுரை:**

அத்தகைய பெருஞ் சிறப்புமிக்க திருவாதிரை நாளில், நாம் அனைவரும் இறைவனை வழிபட்டு உய்ய முயலுவோமாக.

"சிலையாம் மதியின் வைகறையில்
தினமும் பூசை இயற்றுவோர்
தொலையா மலமும் துமிய அருட்
டுறையிற் குளிப்பர்; அம்மதியின்
நிலைஆ திரையின் நெய்யாட்டி
நிகரில் கலவை இனிதணிவோர்
அலையா தருளிற் கலந்தின்ப
ஆழி படிவர் அக்கணமே"

—பேரூர்ப் புராணம்.

(ஆசிரியர்.)

# திருவத்யயன உத்ஸவம்

(ஆழ்வார் திருநகரி)

திரு. டி. சுதர்ஸன ராமாநுஜ அய்யங்கார், M.A.L.T.

தமிழ் வேதமான திருவாய்மொழிக்குத் திருக்கார்த்திகை, திவ்ய மகோத்ஸவத்தில் உத்ஸர்ஜனகாலம். மார்கழி மாசத்தில் அத்யயனோத்ஸவத்திலே உபக்ரமகாலம். திருப்பல்லாண்டு முதலாகத் திருநெடுந் தாண்டகம் அளவாக, அத்யயனோத்ஸவத் துக்கு முன்பு பத்து நாளாகப் பகல் உத்ஸ வத்தில் பெரிய பெருமாள் கேட்டருளும் படிக்கும், பின் இராப்பத்து உத்ஸவம் பத்து நாளாகத் திருவாய்மொழி கேட்டருளும் படிக்கும், பின்னர்த் திருவந்தாதி முதலா கப் பெரிய திருமடல் ஈருக அத்யய னோத்ஸவ அனந்தரம் மற்றை நாள் கேட் டருளும் படிக்கும் திருவத்யயனோத்ஸவம் நடந்து வருகிறது. சில திவ்ய தேசங்களில் இராப்பத்து மட்டிலும் நடக்கிறது. சில இடங்களில் இராப்பத்து உத்ஸவத்திலும் பின் ஐந்து நாள் உத்ஸவம் மட்டும் நடக் கிறது. சில இடங்களில் மூன்றுநாள் உத் ஸவம் மட்டும் நடக்கிறது. சில இடங் களில் திருவாய்மொழி சாற்றுமுறை யன்று ஒருநாள் உத்ஸவமாக நடக்கிறது.

ஆழ்வார் திருநகரியிலும், அதைச்சேர்ந்த நவதிருப்பதிகளில் தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) நீங்கலாக மற்ற திருப்பதிகளிலும், வானமாமலை, திருக் குறுங்குடி முதலான திவ்ய தேசங்களிலும், இராப்பத்து உத்ஸவத்தில் முதல் உத்ஸ வத்தில் முதல் திருவந்தாதி தொடங்கி, கடைசி உத்ஸவத்தில் ராமாநுஜ நூற்றந் தாதியுடன் முடியும். இயற்பா முழுவதும் கடைசியாக ஒரே நாளில் சேவிப்பதில்லை. ஆழ்வார் திருநகரியில் பகல் பத்து உத்ஸ வம் மற்ற இடங்களைப் போலப் பத்து நாளாக நடக்கும். சில வருஷங்களில் 11 நாள் உத்ஸவம் நடக்கும். சில வருஷங் களில் 9 நாள் உத்ஸவம் நடக்கும். திரு வாய்மொழி சாற்றுமுறை உத்ஸவம் ஆன தும் தனியாக வீடுவிடை என்ற ஒரு உத் ஸவம் நடக்கும். தொலைவில்லி மங்கலத்தில் மட்டும் திருவத்யயன உத்ஸவம் ஆழ்வாரு டைய மாசி உத்ஸவத்தில் 11 வது நாள் ஆரம்பித்து மூன்று தினங்களாக நடக்கும். ஆழ்வார் உத்ஸவம் 12 வது நாள் தீர்த்த வாரி ஆனதும், மறுநாள் தொலைவில்லி மங்கலத்துக்குத் திருவாய்மொழி சாற்று முறை ஆழ்வார் அங்கு எழுந்தருளுவர்.

இவ்வருஷம் டிசம்பர் 31 ஆம் தேதி ஆழ் வார் திருநகரியில் திருவத்யயனோத்ஸவம் ஆரம்பித்து 11 நாள் பகல் பத்து உத்ஸ வம் நடக்கிறது. முதல் உத்ஸவத்தன்று ஸ்வாமி எம்பெருமானார், கூரத்தாழ்வார், தேசிகர் முதலானோர் ஆழ்வார் ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்கள். இந்த உத்ஸவத் துக்கு ஸ்வாமி எம்பெருமானார் மஞ்சத்தை விட்டுப் புறப்படுவதற்குத்தான் லக்னம் வைக்கப்படும். அந்த லக்னத்தில் ஆழ் வார் ஸந்நிதியிலிருந்து சகல விருதுகளு டனும் ஸ்ரீகார்யம் எம்பெருமானார் ஸந்நிதிக் குச் சென்று வாத்ய கோஷங்களுடன் எம் பெருமானாரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருவர். கூடவே கூரத்தாழ் வானும், தேசிகரும் எழுந்தருளுவார்கள். உடையவர் திருப்பல்லக்கில் கூட, திருக் கச்சி நம்பியும் எழுந்தருளுவர். ஆழ்வார் ஸந்நிதியில் பொன்னங்குறட்டில் ஸ்வாமி ஆழ்வார் எழுந்தருளியிருக்க, இவர்களும் அங்கு எழுந்தருளி, குருகை காவல் நம் பிக்கு அருளப்பாடிட்டு அவர் "ஸ்வாமி நாயந்தே! திருப்பல்லாண்டு கேட்டருளத் திருமண்டபத்துக்கு எழுந்தருள வேணு மென்று ஸ்வாமி எம்பெருமானார் எழுந்

தருளியிருக்கிறார். கோவில் பரிகரம் அனைத்துக் கொத்தும் விடைகொண்டு நிற்கின்றனர். அருளிப்பாடு சாதித்தருள'' என்றதும், அர்ச்சகர் கோஷ்டியில் பின் வரும் அடைவில், (1) எம்பெருமானார் ஜீயர், (2) ஜீயாள், ஸ்ரீவைஷ்ணவாள், ஸ்ரீகார்யம், ஸ்ரீசடகோபதாஸர், கோவில் பரிகரம் அனைத்துக் கொத்தும், ஸ்ரீபண்டாரக் கணக்கு, தானக் கணக்கு, சமையற் கணக்கு, தேசாந்தரிக் கணக்கு என்று அருளிப் பாடிட, அவர்கள் 'நாயந்தே! நாயந்தே!'என்று சொன்னவுடன், 'திருப்பல்லாண்டு கேட்டருளத் திருமண்டபத்துக்கு எழுந்தருளத் திருவுள்ளமார' என்று சாதிப்பர். உடனே கோஷ்டியார் அனைவரும் ஏகோபித்து 'நாயந்தே! நாயந்தே' என்று சொன்னதும், சகல மங்கள வாத்யங்களுடனும், முதலில் மூன்று ஆசாரியர்களும் திருமண்டபத்துக்கு எழுந்தருளுவார்கள். உடனே பொலிந்து நின்ற பிரான் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியுடன் மங்கள வாத்யத்துடன் மண்டபத்துக்கு எழுந்தருளுவர். பின்னர் ஆதிநாச்சியார், குருகைநாச்சியார்,சேனை முதலியார், நாதமுனி உட்படப் பதினொரு ஆழ்வார்களும் எழுந்தருளுவர்.

கொஞ்ச நேரம் கழித்துப் பகல் பத்து மண்டபத்தில் கோஷ்டி கூடிப் பெரியாழ்வார் கைத்தலத்தில் எழுந்தருளி அரையர் திருப்பல்லாண்டு தொடங்குவர். பெரியாழ்வாருக்கு மாலை, பரிவட்டம், ஸ்ரீசடகோபம் முதலிய மரியாதைகள் நடக்கும். பின் அரையர் திருப்பல்லாண்டு வியாக்கியானம் சேவிப்பர். கோஷ்டியார் "வாழாட்பட்டு" என்ற பாசுரம் முதல் "அல்வழக்கு" என்ற பாசுரம் ஈருகச் சேவிப்பார்கள். "பல்லாண்டென்று"பாசுரம் சேவித்து "வண்ண மாடங்கள்" என்ற பாசுரமும் சேவிப்பர். "ஓடுவார்" என்ற பாசுரத்திலிருந்து அந்தப் பதிகத்தைக் கோஷ்டியார் சேவித்து முடிப்பார்கள். கோஷ்டிக்குத் தீர்த்தம், சடாரி, விநியோகம் ஆனதும் கோஷ்டி கலைந்து விடும்.

சாயுங்காலம் கோஷ்டி கூடி "சீதக் கடலுள்" முதல் பெரியாழ்வார் திருமொழியில் இரண்டு பத்து சேவிப்பார்கள். இராத்திரி சாற்றுமுறை ஆகும். ஆழ்வாருக்கு அன்றைய தினம் "இராஜாங்கம்" திருக்கோலம். அதே திருக்கோலத்தில் பல்லக்கு சாத்தி ஆழ்வார் ஸந்நிதிக்குஎழுந்தருளுவர்.

இரண்டாவது உத்ஸவம் முதல் பதினோராவது உத்ஸவம் முடிய, காலையில் மண்டபத்துக்குப் பெருமாள் எழுந்தருளினதும், ஆழ்வார் எழுந்தருளும் பொழுது அவருக்குத் தாலாட்டுப் பாடுவதுண்டு. மத்தியானம் கோஷ்டி. 2 வது உத்ஸவத்தன்று அரையர் வியாக்கியானம் "சென்னியோங்கு". இராத்திரி சாற்றுமுறையில் பெரியாழ்வார் கைத்தலத்தில் எழுந்தருள அரையர் கடைசிப் பாட்டு சேவிப்பர். பெரியாழ்வாருக்கு மாலை, பரிவட்டம், சடாரி முதலிய மரியாதைகள் நடக்கும். இதே போல ஒவ்வொரு ஆழ்வாருடைய பிரபந்தத் தொடக்கத்திலும், சாற்றுமுறையிலும் அவர்கள் எழுந்தருளி அவர்களுக்கு மரியாதை நடக்கும். ஒவ்வொரு நாளும் இராத்திரி சேர்த்தியில் ஒரு திருக்கோலமும், உள்ளே எழுந்தருளும் பொழுது, பல்லக்கில் ஒரு திருக்கோலமும் சமர்ப்பிப்பார்கள்.

| உத்ஸவம் | சேர்த்தியில் | பல்லக்கில்- |
|---|---|---|
| 2. | வேணுகோபாலன் | கன்று கொண்டு விளவெறிதல் |
| 3. | ஆண்டாள் | வீணை மோகினி |
| 4. | காளீயமர்த்தனம் | மாரீச வதம் |
| 5. | புள்ளின்வாய் கீண்டான் | ஏழுபிலாமரம் எய்தல் |
| 6. | கஜேந்திர மோக்ஷம் | நவநீத கிருஷ்ணன் |
| 7. | குருந்துமேல் கிருஷ்ணன் | தவழ்ந்த கிருஷ்ணன் |
| 8. | மன்னர், ஆண்டாள், கருடன் | யசோதை பூச்சூடல் |
| 9. | குவலேயா பீடம் | சௌரிராஜன் |
| 10. | கோவர்த்தனம் என்னும் கொற்றக்குடை | அமிர்தமோகினி |
| 11. | அழகிய மணவாளன் | ஆழ்வாருக்கு சயனம், அரங்கநாதன் |

திருக்கோலம்: தொட்டிச்சயன் என்றும் சொல்லப்படும். இந்தச் சமயத்திருக் கோலத்தில் உடையவருக்கு நாச்சியார் திருக்கோலம் சமர்ப்பித்து ஆழ்வாருடைய திருவடி வருடிக் கொண்டிருப்பர். ஒவ்வொரு உத்ஸவத்திலும் அரையர் ஒரு பாசுரத்திற்குப் பகலில் வியாக்கியானம் சேவிப்பர். மூன்றுவது உத்ஸவம்-"திருப் பாவை". நான்காவது உத்ஸவம்-"ஊனேறு செல்வத்து". ஐந்தாவது உத்ஸவம்-"திருமாலை" வியாக்கியானம். மேல் திருப்பள்ளி யெழுச்சி, அமலனுதிபிரான் சேவை. சாற்றுமுறை முடிந்ததும் கோஷ்டி கலைந்துவிடும். திரும்பவும் சாயுங்காலம் கோஷ்டிகூடி மதுரகவி ஆழ்வார் கைத் தலத்தில் எழுந்தருளி "கண்ணி நுண் சிறுத்தாம்பு" தொடங்கி அரையர் தம்பிரான் படி வியாக்கியானம் சேவிப்பார். அரையருக்குக் கண்ணிநுண் சிறுத்தாம்பு சேவித்ததற்குக் கணக்காலுள்ளபடி எண்ணெய், நெய் கொடுக்க அருளப்பாடு ஆகும். 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பாசுரங்கள் அனைத்தும் அரையர்தான் சேவிப்பர். மதுரகவி ஆழ்வார் அப்பொழுது நம்மாழ்வாரைத் திருவடி தொழுவர்.

இராத்திரி பல்லக்கில் திருக்கோலத்துடன் ஆழ்வார் உள்ளே எழுந்தருளினதும், கண்ணிநுண் சிறுத்தாம்பு சேவித்த மதுரகவி ஆழ்வாரை அலங்காரத்துடன் எழுந்தருள அருளப்பாடிட்டு மதுரகவி ஆழ்வார் சகல வாத்யங்களுடனும் உள்ளே எழுந்தருளுவர். 6-வது உத்ஸவம் - "வாடினேன் வாடி". 7-ஆவது உத்ஸவம் - "தூவிரிய மலருழக்கி". 8-ஆவது உத்ஸவம் - "பண்டை நான்மறை". 9-ஆவது உத்ஸவம் - "தெள்ளியீர்". 10-ஆவது உத்ஸவம் - "அக்கும்புலி", "முந்துற உரைத்தேன்". 11-ஆவது உத்ஸவம் "திருநெடுந்தாண்டகம்" 2 பாசுரங்கள் முடிந்ததும் 3-ஆவது பாசுரத்தில் "கடலமுதம் கொண்ட காலம்" அரையர் சேவித்து அமிருத மதனம் கொண்டபடி இவ்வண்ணம் என்று நிறுத்திக்கொள்வர். கோஷ்டி கலைந்துவிடும்; திரும்பவும் சாயுங்காலம் கோஷ்டி கூடி அமிருத மதனம் கொண்ட விதம், அபிநயம், வியாக்கியானம் நடந்து மேற்பாசுரங்கள் சேவிப்பர். "பட்டுடுக்கும்" வியாக்கியானம் வந்ததும் "முத்துக்குறி" சேவிப்பர். முத்துக்குறி முடிந்ததும் அரையருக்குத் திருநெடுத்தாண்டகம் சேவித்ததற்குக் கணக்காலுள்ளபடி எண்ணெய், நெய் கொடுக்க அருளிப்பாடு ஆகும். கடைசியில்,

> "அழும் பிரமர் கண்ணநீர்
> ஒட்டி உண்டு புகைநெருக்கி
> விழும் பிரமர் குண்டிகைநீர்
> வெள்ள மிகும் திருவாசல்
> தொழும் பிரமர் அருள் கொடுக்கும்
> தோதவத்தித் தூய் மறையோர்
> செழும் பிரம்பு கொண்டு நிற்கும்
> திருவணுக்கம் திருவாசல்"

என்று தாளம் சேவித்து நிறுத்துவர். கோஷ்டியார் "நெஞ்சுருகி" யிலிருந்து மேற்பாசுரங்கள் சேவிப்பார்கள். திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு, திருநெடுத்தாண்டகம் முதலான பாசுரங்கள் சேவித்தவுடன் அரையர் பெரிய ஸந்நிதியிலும், ஞானப்பிரான் ஸந்நிதியிலும் ஷ பாசுரங்கள் சேவிப்பர். இராத்திரி திருத்தாண்டகம் சாற்றுமுறை கோஷ்டி முடிந்ததும் திருவாய்மொழித் திருநாளைக்கு திருமுளைசாத்த, மதுரகவி ஆழ்வார் புறப்பட்டருள அருளப் பாடிட்டு மிருத்சங்க்ரஹணம் நடக்கும். பகல் பத்து உத்ஸவத்தில் கோயில் திருவாய்மொழி அல்லாத பாசுரங்களிலும் யாராவது சிறப்புப் பண்ணினால் அரையர் தளிகை அமுது செய்து திரை வாங்கியதும் பாட்டுத் தொடங்குவர். இப்போதைக்கு "வென்றிமா மழுவேந்தி" "ஊன்வாட உண்ணது" என்ற பாசுரங்கள் நிறுத்திச் சேவிக்கப் பட்டு வருகின்றன.

ஏகாதசி தினத்தன்று பெருமாளுக்குச் சயனத் திருக்கோலம். மூன்று தாயார் களுக்கும் ஆபரணங்கள் சமர்ப்பித்து திருமுடிப்பக்கம் ஒருவரும் மத்தியில் ஒருவரும்; திருவடிவருட ஒருவரும் ஆகச் சேவை சாதிப்பர். ஆழ்வார்கள் ஆசாரியர் எல்லாரும் பெரிய ஸந்நிதியில் எழுந்தருளி யிருப்பர். இராத்திரி 8 மணிக்கு விஸ்வரூபம் ஆனதும், "கூடாரை வெல்லும்சீர்" ஆகையால் திருப்பள்ளி யெழுச்சி, திருப்பாவை ஸேவை நடந்து

சாற்றுமுறை கோஷ்டியாகும். கூடாரை வெல்லும்சீர் இல்லாத நாட்களில் ஏகாதசி அன்று சாற்றுமுறை மட்டும்தான் நடக்கும். அன்று காலையில் ஆசார்ய புருஷர்கள், வைதிகர்கள் அவரவர்கள் பெருமாளைச் சேவிக்கவரும்பொழுது திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை சேவித்துவிட்டுப் போய்விடுவார்கள். உடனே ஆழ்வார் மாடவீதி புறப்பாடு எழுந்தருளுவர். அப்பொழுது கோஷ்டியில் உடையவர் ஆழ்வாரைச் சேவித்த வண்ணமாகவே இராமானுஜ நூற்றந்தாதி சேவையுடன் எழுந்தருளுவர். உள்ளே எழுந்தருளினதும் திருமஞ்சனம் ஆகும். பின்னர் ஆழ்வார் திருப்பல்லக்கில் பெரிய பெருமாள் சோபானம் வரை எழுந்தருளி அங்கிருந்து நடை பாவாடை விரித்துக் கைத்தலத்தில் அரையர் கொண்டாட்டத்துடன் ஆதிநாதர் கர்ப்பக்ரகம் வரை எழுந்தருளிப் பொலிந்து நின்றபிரான் திருமுன்பாகத் திருவடி வாரத்தில் எழுந்தருளியிருப்பர். திருவாய்மொழி மண்டபத்திற்கு எழுந்தருள நியமனம் கேட்டு அருளிப்பாடு ஆகும். அங்கிருந்து அர்ச்சகர் கொண்டாட்டத்துடன் திரும்பக் கைத்தலத்தில் திருப்பல்லக்கு எழுந்தருளிப் படிக்கட்டிலும் ஏறி நியமனம் பெற்றுத் திருவாய்மொழி மண்டபத்துக்கு எழுந்தருளுவர். அப்புறம் பெருமாள், தாயார், ஆழ்வாராதியர், ஆசார்யர்கள் எல்லாரும் திருமண்டபத்துக்கு எழுந்தருளுவார்கள். பெரிய தாளம் எடுத்து அர்ச்சகர் திருவாய்மொழி தொடங்கி அரையரிடம் தாளத்தைக் கொடுத்து அவர் "உயர்வற உயர் நலம்" வியாக்கியானம் சேவிப்பர். தீர்த்த வினியோகம் ஆகும். பெருமாள் பரமபதவாசல் கதவடியில் எழுந்தருளியிருப்பர், ஆழ்வார், உடையவர், கூரத்தாழ்வார், தேசிகர் முதலானோர்கள் கொட்டகைப்ரதக்ஷணமாக எழுந்தருளிப் பரமபத வாசல் கதவுக்கு வெளியில் எழுந்தருளி யிருக்க, பெருமாள் திருமுன்பு வேத விண்ணப்பம் முதலியவை நடந்து பரம பத வாசல் கதவு திறக்கப்படும். பெருமாள் வெளியில் எழுந்தருளுவர். கொட்டகையில் அமைந்திருக்கும் பந்தலில் ஆழ்வாரும், பெருமாளும் பத்தி உலாவி எல்லா ஆழ்வார்களுக்கும், ஆசார்யர்களுக்கும் மரியாதை நடக்கும். பொய்கையாழ்வார் (பாட்டாழ்வார்) எழுந்தருளி முதல் திருவந்தாதி பாட்டு தொடங்கப்படும். பெருமாள், பொய்கையாழ்வார் தவிர மற்றவர்கள் உள்ளே எழுந்தருளி விடுவார்கள். கோஷ்டியில் பொய்கையாழ்வார் எழுந்தருள, பெருமாள் உள்ளே எழுந்தருளிச் சாற்றுமுறை ஆகும். பின்னர் பெருமாள் கைத்தலத்தில் நடைபாவாடை சமர்ப்பித்து எழுந்தருளி ஆழ்வார் திருமுடி மேல், பெருமாள் திருவடி (பொருந்தப் பண்ணி) மங்களாசாசனம் ஆகும். (இதற்குத் திருமுடி சேவை என்று பெயர்).

2-ஆம் உத்ஸவம் முதல் பிரதி தினமும் காலையில் ஆழ்வாரும், உடையவரும் மாடவீதி எழுந்தருளுவர். முதல் நாள் பெருமாள் இயலில் சேவித்த முதல் திருவந்தாதி இன்று ஆழ்வார் இயலிலும், 2-ஆம் உத்ஸவம் இராத்திரி பெருமாளுக்குச் சேவிக்கும் 2-ஆம் திருவந்தாதி 3-ஆம் உத்ஸவம் காலையில் ஆழ்வாருக்குமாக க்ரமேண நடக்கும். கோஷ்டியார் திருவாய்மொழி முதல் பத்து சேவிப்பார்கள். அதற்கு முன்பாக திரைக்குள் அரையர் "வாயும் திரையுகளிலிருந்து" "எம்மா வீடு" பதிகம் முடிய ஏகாந்தமாகச் சேவிப்பர். சாயுங்காலம் பெருமாள், ஆழ்வார், ஆசார்யர்கள் கொட்டகைக்கு எழுந்தருளிப் பத்தி உலாவி (பாட்டாழ்வார்) பூதத்தாழ்வார், 2-ஆம் திருவந்தாதி தொடங்கி இயலில் எழுந்தருளுவர். உள்ளே எழுந்தருளினதும் திருமுடி சேவையாகும். திருமுடி சேவையின் போது அன்று கோயில் திருவாய்மொழியாகிய "கிளரொளி யிளமை" பாசுரம் சேவித்து அரையர் அபிநயம் காட்டுவர். திருவிசாகம் தளிகை அமுது செய்த பிறகு, அரையர் கிளரொளி யிளமைக்கு வியாக்கியானம் சேவிப்பர். பாக்கிப் பாசுரங்களைக் கோஷ்டியில் தாளத்துடன் சேவிப்பர். மூன்றும் உத்ஸவம் காலையில் ஆழ்வார் இயலில் 2-ஆம் திருவந்தாதி சேவிக்கப்படும். திருமஞ்சனம் ஆனதும் தீர்த்த வினியோகக் கோஷ்டியில் திருவாய்மொழி 2-ஆம் பத்து சேவையும் நடக்கும். அதற்குமுன் திருத்திரைக்குள் மூன்றும் பத்து "முடிச்சோதி"யும், "முன்னர்

ஞாலமும்'' அரையர் ஏகாந்தமாகச் சேவிப்பர். சாயுங்காலம் கொட்டகையில் 3-ஆம் திருவந்தாதியும், இராத்திரி ''ஒழிவில் காலம்'' வியாக்கியானமும், மேல் 80 பாட்டுக்களும் கோஷ்டியில் அரையர் தாளத்துடன் சேவிப்பர். இவ்விதமாக ஒவ்வொரு நாளும் நடக்கும்.

நான்காவது உத்ஸவம் திருவாதிரையாதலால், காலையில் ஆழ்வார் மாட வீதி எழுந்தருளினதும், ஆழ்வாருக்கும், உடையவருக்கும் சேர்த்தித் திருமஞ்சனம் நடக்கும். சாயுங்காலம் பெருமாளும், திருமழிசை யாழ்வாரும் இயலுடன் உள்ளே எழுந்தருளிச் சாற்றுமுறை ஆனதும் ஆழ்வார் தாயார் சன்னிதியில் எழுந்தருளி யிருப்பர். அவருக்கு முன்பாகப் பெருமாள் தோளில் எழுந்தருளி யிருப்பர். ஆழ்வார் பக்கத்தில் அமுதுபடி, காய்கறிகள் எல்லாம் வைத்திருக்கும். மறுநாள் ''எங்ஙனேயோ'' வியாக்கியானத்திற்குக் கோவில் செலவிலிருந்து தளிகை சமர்ப்பிப்பதாக ''நம்பி திருவாய்மொழிச் சிறப்பிற்கு நம் சடகோபன் வழிபாடாக வந்த அமுதுபடி, கறியமுது, பலவ்யஞ்சனம், பச்சைவடம், பன்னீர்ச் சொம்பு இப்பேர்ப்பட்டதும் கணக்காலுள்ளபடி ஒப்புக்கொள்ளத் திருவுள்ளமார'' என்ற அருளிப்பாடுடன் கோஷ்டியார் 'நாயந்தே! நாயந்தே!'' என்றதும், பெருமாள் உள்ளே எழுந்தருளி விடுவர். இராத்திரி வியாக்கியானம் ''ஒன்றுந்தேவும்''. ஐந்தாம் உத்ஸவம் ''வங்கக் கடல்''. காலையில் பெரிய பெருமாள் ஸந்நிதிக்கு ஆழ்வார், ஆழ்வாராதியர், ஆசாரியர்கள் எல்லாரும் எழுந்தருளித் திருப்பாவை சேவை, சாற்றுமுறை நடக்கும். திருமுடிச் சேவைக்கு முன்னதாக பெருமாள், தாயார் ஊஞ்சல் உத்ஸவம் தைமாதப் பிறப்பாகையால் நடைபெறும். வியாக்கியானம் ''எங்ஙனேயோ''.

(தொடரும்)



நமது அறநிலைய ஆணையர் அவர்கள், தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில், பிடியரிசித்திட்டம் துவக்கி வைத்தல்.

(28—11—67)

# திருக்குறள் விளக்கும் மெய்ப்பொருளியல்

(திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.;எல்.டி., காஞ்சிபுரம்.)

செந்தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறள் பண்டைத் தமிழ்மரபு, பண்பாடு, ஒழுக்கநெறி; மெய்ந்நெறி என்பவற்றின் உரையாணியாகச் செய்யப் பெற்று நிலவும் முழுமுதல் நூல். அது தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள உயர்வற உயர்ந்த வாழ்வியல் அமைப்பு என விவரிக்கத் தக்கது. அஃது உலக வாழ்வின் இயல்பையும் குறிக்கோளையும் பற்றிக் கூறும் கருத்துக்களையும், ஒழுக்கநெறிபற்றிக் கூறும் அடிப்படை உண்மைகளையும், மெய்ந்நெறி பற்றிக் கூறும் கொள்கைகளையும் தொகுத்துக் கோவை செய்துணர்தல் பயன் உடையதாகும். இந்நோக்குடன் இக் கட்டுரை எழுதப் படுகிறது.

## (1) உயிர் வாழ்நிலையின் வகையும், இயல்பும் குறிக்கோளும்:

(அ) திருக்குறள் உயிர்வாழ்க்கையை இம்மை மறுமை வீடு என மூன்று வகைப் படக் கொண்டு, மூன்றன் உண்மையினையும் உடன் படுகின்றது. அவற்றுள் இம்மை வாழ்க்கையை மறுமைக்கும், வீட்டிற்கும், வாயிலாகக் கொள்கின்றது (குறள் 50, 247, 346).

(ஆ) இவற்றுள் யாதொன்றனையும் பொய் என்றோ, கற்பனை என்றோ, வெறும் பொய்த் தோற்றம் என்றோ கூறுவது திருக்குறளின் நோக்கன்று. இது பின் வரும் பாட்டாலும் (குறள் 50, 850) பிற வற்றாலும் விளங்கும்.

(இ) அறம் பொருள் இன்பம் என்பவை மக்களுயிர்க்கு உறுதி அல்லது உயர்நலம் பயப்பவை எனக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் அறமாவது, இறைவன் நூலாலும், அவ்வப்போது அறிவு வளர்ச்சி நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப, பழையன கழித்துப் புதியன ஏற்று நடக்கும் உயர்ந்தோர் ஒழுக்கத்தாலும், விளங்கும் ஒழுக்க நெறியைக் கடைப் பிடித்து ஒழுகுதல் ஆகும். இஃது இம்மை மறுமைகளைப் பயப்பதோடு மனத்தின் மாசு நீக்கி வீட்டையும் பயக்க வல்லது. ஆதலால் அறமே பொருளின்பங்களுக்குச் சார்பாகவும், முதன்மையுடையதாகவும் கருதப்படல் வேண்டும் (குறள் 6, 140, 31, 39, 34, 36).

பொருளாவது, கல்வி செல்வம் என இரு வகைப்படும். அஃது அரசியல் பொருளியல் இன இயல் குடியியல் என்பவற்றைச் சார்ந்து, இம்மை மறுமைகளைப் பயப்பது: இம்மை ஒன்றனையே பயக்கும் இன்பம், ஒருவனும் ஒருத்தியும் காதற் கிழமைபூண்டு. உணர்வு ஒன்றி வாழ்வதனால் உளதாகும்.

இவை இரண்டும் அறத்தின் வழிப்பட்டவாய் அமைதல் வேண்டும். இவை திருக்குறளின் இரண்டாம் மூன்றும் பெரும் பிரிவுகளாகிய பொருட்பால் காமத்துப் பால் நோக்கி உணரத் தக்கவை.

(ஈ) உறுதிப் பொருள் மூன்றனுள் இறுதியில் உள்ள இன்பம், விரிந்த கருத்தில் நோக்குமிடத்து, சிற்றின்பம் பேரின்பம் என இரு வகைப்பட வைத்து உணரத் தக்கது. இது முயற்சியின் குறிக்கோளாய், எல்லாச் செயல்களுக்கும் தூண்டுகோலாய் உள்ளது.

(உ) நீடுதல் இல்லதாய், துன்பக் கலப்புள்ளதாய் வரும் இன்பம், சிற்றின்பம்

எனத்தகும்; தூயதாய், துன்பக் கலப்பில்லதாய், துன்ப விளைவிற்குக் காரணமாகாததாய், நீடவல்ல இன்பத்தைப் பேரின்பம் எனல் ஆகும். இவற்றுள் பின்னர்ச் சுட்டப்பட்ட பேரின்ப நிலையே மக்கள் வாழ்க்கைக்குரிய முடிநிலைக் குறிக்கோளும் உயர்வற உயர்ந்த பெருநலமும் ஆகும்.

அஃது உடற்பற்றும் உலகப்பற்றும் அற்று, முதற் பொருளாகிய மெய்ப்பொருளை உணர்ந்து, அவாவை அறுத்தார்க்கே உளதாகும்; அதுவே பிறப்பற்ற நிலை; அந்நிலை உயிர்க்கு இயல்பாக உள்ள மாருத நிலை ஆதலால், புக்கில் எனவும், பேரா இயற்கை எனவும் சுட்டப்படும். அந்நிலையில், உயிர்க்கு உள்ள இருள், மருள், வினை என்னும் மூவகை மாசும் முற்றும் கழிதலின், அது தூய்மை எனவும் குறிக்கப்படும். இருள் – அறியாமை; மருள் - மயக்க உணர்வு; மாசு - அழுக்கு.

(2) ஒழுக்க நெறி பற்றிய உண்மைகள்:

(அ) பொருளும் இன்பமும், அறமாகிய ஒழுக்க நெறியை அடிப்படையாகக் கொள்ளுதல் போல, அறமும் இறை உண்மைக் கொள்கையினையும், இறை வழிபாட்டினையும் சார்பாகக் கொண்டு நடத்தற்கு உரியது. பொய்தீர் ஒழுக்க நெறி இறைவனது ஆணையாகக் கொள்ளத் தக்கது என்பது மேலே எடுத்துக் காட்டிய 6-ஆம் குறட்பாவால் விளங்கும். மேலும், அதனை இறைவன்றன் உருவமாகக் கருதி ஒழுக வேண்டும் என்றும், அது ஞாயிற்றின் வெம்மையும் ஒளியும் உயிருள்ள உடம்புகளுக்குச் சூழ்நிலையாயும் சார்பாயும் நின்று இன்பத்தையும் துன்பத்தையும் ஆக்குதல் போல, உயிர்களுக்குச் சூழ்நிலையாகவும் சார்பாகவும் அமைந்து, இன்பத்தையும் துன்பத்தையும் கொடுப்பதாக உள்ளது என்றும் திருக்குறள் கூறுகின்றது. (8,77)

(அற ஆழி - அறக்கடல், பிற ஆழி - மற்றைய பொருள் இன்பங்களாகிய கடல்கள். நீந்தல் என்பதன் பொருள் ஆற்றலால், 'ஆழி' என்னும் சொல் கடல் எனவே பொருள்படுதல் அறியத் தக்கது; அற ஆழி - தரும சக்கரம் என்னும் பொருளை இங்குத் தராது.)

(ஆ) அன்பும் அதன் வளர்நிலையாகிய அருளும் உயிர்ப் பண்புகள் ஆகும். உயிர் உடம்பைப் பெற்றதன் பயன், அது தன் குணமாகிய அன்பு விளங்கப்பெற்று, அதன் முழு வளர்ச்சி நிலையை எய்தப் பெறுவதே ஆகும். அன்பே அறத்திற்குச் சார்பாய் உள்ளது. ஆதலால் அன்பின் நிறை நிலையே அறத்தின் நிறை நிலை ஆகும். அன்பே இன்பத்திற்குக் காரணமாய் உள்ளது. அன்பு தன்னலத்தை மாற்றி, தனக்குரிய பொருள்களைப் பிறர் நன்மைக்கு உரிமையாக்கும் தியாக உணர்வைத் தரும்; அஃது அருளாக வளரும் நிலையில் தத்துவத்தைத் தரும். உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாமையே தவத்தின் இயல்பு. (குறள் 80, 757, 242, 76, 73, 75, 72).

(இ) இவற்ருல் அன்பு வாழ்க்கையின் பண்பாகவும், அறம் அதன் பயனாகவும் கொள்ளற்பாலன என்பது விளங்கும். அவ்விரண்டாலும் அழியா இன்பம் பெறல் ஆகும். அன்பு முதற்கண் தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய இடங்களைத் தொடர்பு பற்றிச் சார்ந்து வளரும். இவ்விடங்களில் செய்தக்க செய்து வருவதே இல்லறமாகும். அன்பு வளர்ந்து முதிரும் நிலையில், தொடர்பு பற்ருது எல்லா உயிர்கள் மேலும் சென்று அருளாக விளங்கி, உற்றநோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாமையாகிய தவ நெறிக் கண் நிற்பிக்கும். துறவறம் என்பது தவ நெறியே ஆகும்.

இவ்வாறு அருளும், அறமும், தவமும் நிறைந்த உள்ளமே அழுக்காறு, அவா, வெகுளி, பொய்ம்மை என்னும் மாசுகளை முற்றத் துடைத்து மெய்ப்பொருள் விளங்குதற்கு உரிய தூய்மையும் பக்குவமும் உடையது ஆகும். இந்நிலையில் ஒருவன் உணர்வு உடம்பையும் மனத்தையும் பற்ருது முதற்பொருளைத் தலைப்பட்டு உணர்ந்து நிற்கும் நிலையே மெய்யுணர்வு நிலையாம். இம் மெய்யுணர்வால் பிறப்பிற்கு வித்தாகிய அவாவறுத்து, யான் எனது எனப்படும், தானும், தன் அறிவும், அவ்வறிவாற் பற்றப்படு பொருளும் ஆகிய

மூன்றும் பிரிந்து தோன்றக் காணுதலாகிய செருக்கு அற்ற நிலையே பேரின்ப வீடு எனப்படும். இஃது அறத்துப் பாலின் தொகைப் பொருளாம்.

(3) மெய்ந்நெறிக் கொள்கைகள்:

இறுதியாக, ஒழுக்க நெறியின் அடி நிலையாகத் திருக்குறள் கொண்டுள்ள கருத்தொழுங்கினை ஒரு சிறிது ஆராய்ந்து காண்போம்.

உயிர்கள் நிலைபேறு உடையன என்ப தும், அவை பருவுடம்பிற்கும், அருவுடம்பா கிய மனத்திற்கும் வேருய், அறிவையும் அதனுல் நிகழும் அன்பையும் தம் இயற் கைக் குணமாய் உடையவை என்பதும் 457, 338, 422, 315-ஆம் குறட்பாக்களால் இனிது விளங்கும்.

உயிர்களின் அறிவு வினையும், இனமும் கல்வியும் காரணமாக, நிலத்தியல்பால் நீர் திரிந்து அவ்வத்தன்மை பெற்று விளங் கினுற்போலத் திரிபுபடுவது எனவும், ஐய மும் மருட்கையும் உடையது எனவும் கூறப்படுகின்றது. ஆதலால், வாலறிவை (தூய மெய்யுணர்வை) இயற்கையில் உடைய முதற் பொருளுக்கு அது வேறு என்பது உணரத் தக்கது,

ஆதியாக உள்ள அகரம் தன் இயல் பால் விகாரமின்றி விளங்கிப் பிற எழுத்துக் களின் இயக்கத்திற்குக் காரணமாய் உட னிற்பது. அதுபோல, அருவாய், அறி வாய், உயிர்களின் அறிவு செயல்களுக்குக் காரணமாய் எங்குஞ் செறிந்து நிற்பது முதற்பொருள். அஃது எல்லாவற்றிற்கும் ஆதியாயும் தொழத் தக்கதாயும் இருத் தலின் ஆதி பகவன் எனப்பட்டது. அஃது உருவம் உடையது அன்று; ஆயினும் அதன் இறைமைக் குணங்கள் நம் அறி வில் புலப்பட்டுத் தோன்றுதற்பொருட்டு உருவமும் பெயரும் கொடுக்கப் பெற்று வழங்கப்படும்.

முதற் பொருளின் திருவருட்குறிப்பை உணர்ந்து, அதன் வழி நிற்றலே தொழு தலாம். அஃது இரு வகைப்படும். ஒன்று இறைவன் ஆணைவழி நிற்றல். மற்றையது இறைவனுடைய இறைமைக் குணங்கள் நம் உணர்வில் மேம்பட்டு நிகழ்ந்து, உயிர்மாசு கழித்துத் தூய்மை விளக்கும் படி, அவன்றன் பொருள் சேர்ந்த புகழைக் கூறியும் எண்ணியும் வருதல்' இவற்றுள் பின்னையது,

> இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

என்றதனுல் வலியுறுத்தப் படுகின்றது.

கடவுள் என்ற சொல் திருக்குறளில் ஆளப்படவில்லை; இறைவன், இறை என்ற சொற்கள் பயின்று வருகின்றன. ஆத லால் முதற்பொருளை நம்முணர்வுக்கு அப் பாற்பட்டதாகக் கருதுவதைவிட, அதன் எங்கும் தங்கி உள்ள தன்மையைக் கருத் திற் கொண்டு அதனைத் தலைப்படுதலைப் பயனுகக் கொண்டவர் திருவள்ளுவர் என் பது இனிது விளங்கும்.

> "தலைப்பட்டார் தீரத் துறந்தார்" (848)
> "கோள்இல் பொறியில் குணமிலவே
> எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை" (9)
> "சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்
> மற்றழித்துச்
> சார்தார சார்தரு நோய்" (359)

என்னும் பாக்கள் மிக ஆழ்ந்த கருத்துடை யவை.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
> மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும்" (377)

என்றதும்.

> "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (377)

என்றதும்,

> "உறங்குவதுபோலும் சாக்காடு; உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு." (339)

என்றதும், மறுபிறப்பும், வினையும், வினைப் பயனும், வினைப்பயனை வரைந்து வினை

செய்த உயிருக்கே உண்பிக்கும் முதல் வனது ஆணையும் உள்ளன என்பதை நன்கு விளக்கும்.

இறுதியாகத் திருக்குறள் புக்கில் என வும், பேரா இயற்கை எனவும் சுட்டும் வீடாவது யாது என்பது ஆராயத்தக்கது. அது இந்திரன் முதலிய இறையவர் பதவி கள் எனப் புராணங்கள் விவரிக்கும் உல கம் போன்றது அன்று என்பது தெளிவு.

அதனைத் திருக்குறள் "வானோர்க்கு உயர்ந்த உலகம்" (346) என உடன் பாட்டாலும்,

> தாம் வீழ்வார் மென்றோள் துயிலின்
> இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு" (1103)

என ஒப்பற்ற அகத்துறைத் தலைவன் வாய்மொழியாகத் தாமரைக் கண்ணான் உலகிற் பெறும் இன்பத்தை இம்மை இன் பத்திற்கு ஒப்பாகாது எனப் பொருட்படுத் தாது இகழும் எதிர்மறைக் குறிப்பாலும் தெரிவிக்கின்றது.

அது மெய்யுணர்ந்தார்க்கு இம்மையி லேயே அனுபவப்படும் முதற்பொருளின் நிறை நிலையாகிய பேரின்ப வெளியே ஆம் என்பது.

> 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு
> வையத்தின்
> வானம் நணியது உடைத்து' (353)

என்றதனால் குறிப்பிடப்படுகின்றது. அங்கு இடையருப் பேரின்பம் உண்டென்பது,

> "இன்பம் இடையருது ஈண்டும் அவாஎன்னும்
> துன்பத்துள் துன்பம் கெடின்" (369)

எனத் துறவயவியல் முடிவிற் கூறியதனால் அறியத் தக்கது.

திருக்குறளில் மேலே காட்டிய 353-ஆம் பாட்டில் குறிக்கப்பட்ட வானத்தை ஔவை யார் "மெய்விண் உறுவார்க்கு இல்லை விதி" என்னும் நல்வழியில் வரும் தொடரில் மெய்விண் என்னும் பெயரால் குறித்தல் கருதத் தக்கது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படுகின்ற அடிசேர்முத்தி நிலையோடு பெரிதும் ஒற்றுமை உடையதாகக் காணப் படுகின்றது, இங்குக் குறிக்கப்படும் வீட்டு நிலை! இன்னும் திருக்குறளில் உயிர்க்கு மாசு எனக் கூறப்படும் இருள்-மருள்-இரு வினை என்பவை, சித்தாந்த சைவத்துள் கூறப்படும் மலம், மாயை, வினை என்னும் உயிர்க் குற்றங்களே ஆதல் கருதத் தக்கது.

1. Constitution of Tamil way of life.
2. Higher Values.
3. The purpose of all efforts and the motive force for all actions.
4. The ultimate end and the highest value in life.
5. Philosophical basis for ethical structure.
6. Divine will.
7. To be in tune with the Infinite.
8. Obedience to God.

## கோயில் நிகழ்ச்சிகள்

பாவை மாநாடு :

1. ஸ்ரீ சங்கர ராமேசுவரர் மற்றும் ஸ்ரீ வைகுண்டபதி தேவஸ்தானங்கள், தூத்துக்குடி.
2. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர்.
3. ஸ்ரீ அகஸ்தீசுவர சுவாமி வகையரு தேவஸ்தானம், தாராபுரம்.
4. ஸ்ரீ கைச்சினேசுவர சுவாமி கோயில், கைச்சினம்.
5. ஸ்ரீ தாயுமானவர் திருக்கோவில், மலைக்கோட்டை, திருச்சி.
6. ஸ்ரீ அகிலாண்டநாயகி திருக்கோயில், திருவானைக்கா, திருச்சி-5,

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.)

கண்களில் படலம் (Cataract) தொடங்கி விட்ட காலத்தில் நாம் செய்து கொள்ள வேண்டிய மருத்துவத்தைப் பற்றி இங்கு ஆராய்ந்து வெகு எளிமையானதும், மிக்க குணத்தைத் தருவதுமான சில மருந்து களையும் ஆராய்வோம்.

கண்ணொளிக்கு முருங்கைக் கீரை, அகத்திக் கீரை ஆகியவைகளை ஆகாரத் துடன் உண்ணுவது சாலச் சிறந்தது. முருங்கைக் கீரை அடிக்கடியும், அகத்திக் கீரை வாரத்திற் கொரு முறையும் உப யோகித்து வந்தால் கண் படலம் வரா தொழிவதல்லாமல் ஒளியும் மங்காதிருக் கும். மற்றும், முருங்கைக் கீரை வாயு உபத்திரவங்களை நீக்குவதுடன் விந்து வைக் கட்டும் ஓர் மூலிகையுமாகும்.

**கண் தசைப் படலத்திற்கு (Cataract)**

நேத்திர மூலியென்று தரையில் படரும் ஒரு மூலிகை யுண்டு. இதை நாலிலைக் குருத்து என்றும் சொல்வர். இதன் பூ நல்ல பாம்பின் படத்தைப் போலிருக்கும். நிறம் வெண்மை. கொஞ்சம் சிவப்பு நிறைந்த பூக்களுடையதும் உண்டு. இந்த மூலிகையை உபயோகித்துப் பலர் கண் ணொளி பெற்றதுண்டு. இதை வேண்டு வோர் என் தோட்டத்திலுள்ளதைக் கொண்டுபோய் வளர்த்துத் தனக்குத்தான் மருத்துவம் செய்து கொள்வதன்றிப் பிற ருக்கும் இம் மூலிகையைக் கொடுத்துத் தோட்டங்களில் பயிர் செய்யச் செய் தால் மக்களுக்குப் பெருந் தொண்டு செய் பவராவர்.

**நேத்திர மூலி உபயோகிக்கும் முறை:**

இதனுடைய இலைகளைப் பறித்து சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு அகல பீங்கான் அல்லது கண்ணாடிப் பாத்திரத்திலிட்டு அந்த இலை முங்கும் அளவுக்கு சுத்தமான நல்லெண்ணெய் விடவும். எடுத்து சூரிய வெளிச் சத்தில் ஏழு நாட்கள் வைக்கவும். ஒரு சுத்தமான குச்சியால் அவ்வப்போது புரட்டிக் கொடுக்கவும். இப்படிச் செய்ய இந்த இலையிலுள்ள சத்து எண்ணெயில் கலந்துவிடும். பிறகு எண்ணெய்யை சுத்தமான வெள்ளைத் துணியில் வடித்துப் புட்டியில் அடைக்கவும். பிரதி தினமும் ஒன்று அல்லது இரு வேளைகள் இரு கண் களிலும் இரண்டு மூன்று சொட்டுகள் விடவும். லேசாக நமைச்சலிருக்கும். கண் களைத் திறந்து திறந்து மூடவும். கண்களி லிருந்து விஷநீர், மூக்கிலிருந்து பீனசநீர் முதலியன வெளிப்படும். இப்படி பல நாட் கள், பல மாதங்கள், பல வருடங்களும் செய்யலாம். செலவில்லாத மருந்து. இதை அனுபவித்துப் பாருங்கள்.

**மற்றொரு முறை:**

இம்முறை பிரதி தினமும் செய்வது சில ருக்குச் சங்கடமாயிருக்கலாம். வசதியுள் ளவர்கள் செய்ல கொள்ளலாம். ஒரு சந் தனக் கல், சுத்தமான வெள்ளியினால் செய்த ஓர் குச்சி, ஒரு சூரத் கடுக்காய், நந்தியா வட்டப் பூக்கள் இவ்வளவும் வேண்டும். நந்தியா வட்டப்பூவைக் கசக்கி 5, 6 சொட்டுகள் சந்தனக் கல்லில் விட வும். கடுக்காயை 5, 6 இழைப்புகள் இழைக்கவும். பிறகு வெள்ளிக் குச்சியைச் சந்தனக் கல்லிலுள்ள சாற்றில் 5, 6 முறை இழைக்கவும். அதை எடுத்து இன்னும் 10 சொட்டுகள் ஷை பூவின் சாற்றை விட்டுக் கலந்து கண்களிலிடவும். இளம் 'கண் தசைப்படலம்' சிலநாட்களில் குணமாகும்.

**மற்ெருரு எளிய முறை :**

எலுமிச்சம்பழம் சாற்றைப் பிரதிதினமும் கண்களில் 2, 3 சொட்டுகள் விட்டு வரக் கண்படலம் தீரும்.

கடையில் விற்கும் படிகாரத்தை இரண்டு பலம் வாங்கி ஒரு மண் பாத்திரத்திலிட்டு மேல் மூடியிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயால் எரிக்கவும். படிகாரம் நன்ருய்ப் பொரிந்து வெண்மையான பற்பம் ஆனபிறகு இறக்கி நுணுக்கி வைத்துக் கொள்ளவும். இந்த பற்பத்தை இரண்டு அவுன்ஸ் பன்னீரிலோ அல்லது சுத்தமான தண்ணீரிலோ ஒன்றிரண்டு சிடிகைகளிட்டுக் கலக்கிக் கண்ணில் விடவும்.

**மற்ருென்று :**

சுத்தமான தேனில் கோரோசனையை உறைத்துக் கண்ணில் பிரதி தினமும் தீட்டிவர மிக்க பலனை தரும். இதுவும் ஓர் நல்ல முறை.

**வைத்தியர்கள் செய்யக் கூடிய முறை :**

படிகாரம் கிராம் 70

சுத்தமான சரிகை கிராம் 2

படிகாரத்தைப் பொடித்து ஒரு மண் குடுவையில் பாதியிட்டு அதன்மேல் சரிகையைப் பரப்பி, அதன் மேல் மற்றபாதி படிகாரத்தூளையிட்டு மேல் மூடியிட்டு மண் சீலை 3 செய்து 50 வறட்டியில் புடமிட்டெடுத்துக் கல்வத்தில் நன்ருய் அரைத்துப் புட்டியில் அடைக்கவும்.

இந்த பற்பத்தில் ஒரு சிடிகை யெடுத்து 4 அவுன்ஸ் வடித்த நீரில் (Distilled Water) கலக்கிப் புட்டியிலடைத்துப் பிரதி தினமும் இருவேளைகள் கண்களில் விட்டுவரக் கண்களில் சதை வளர்ச்சி முதலியன நிச்சயமாய்க் குணமாகும். இம்முறையை மருத்துவம் தெரியாதவர்கள்கூட, செய்து கொள்ளலாம்.

கிராமங்களிலுள்ளவர்களுக்குப் பாம்புக் களா வென்னும் செடி தெரிந்திருக்கும். இம் மூலிகையும் கண்ணுக்கு ஒரு சஞ்சீவி. இதனுடைய பூவைக் கசக்கிக் கண்களில் விட கண்ணோய், கண்ணெரிவு, கண்களில் சதை வளர்ச்சி முதலிய வியாதிகள் குணமாகும்.

**மாலைக் கண்ணுக்கு :**

இது ஒரு கடினமான வியாதி. பகலில் கண் தெரியும். பொழுது போனல் கண்ணொளி மங்கிக் குருடர்களைப் போலாவர். இதற்கு மேனுட்டு மருத்துவத்தில் ஒரு மருந்தும் கண்டு பிடிக்கப்படவில்லை. கண்டு பிடிக்கவும் முடியாது. இவ்வியாதி விஷ சம்பந்தத்தினுல் ஏற்படக் கூடியது. நீலியென்றும், அவுரி யென்றும் சொல்லும் மூலிகை பலருக்குத் தெரிந்தது. வயலுக்கு உரத்திற்காகச் சில இடங்களில் இதைப் பயிர் செய்கின்றனர். இந்தச் செடியின் இலைகளைப் பறித்து அரைத்து ஒரு கோலியளவு பசும்பாலில் காலை மாலை மூன்று நாட்களுக்குச் சாப்பிடச் செய்து, அந்த மூன்று நாட்களும் உப்பில்லாப் பத்தியம் இருக்கச் செய்தால், நாலாவது நாளே மாலைக் கண் போய் ஒளிக் கண்ணுகிவிடும்.

சிலருக்குக் கண் புருவங்களிலுள்ள முடி உதிர்ந்து சொட்டைகள் விழும். இதற்கு வெங்காயத்தை அறுத்துச் சொட்டைகளிருக்கும் இடத்தில் பிரதி தினமும் தேய்த்துவர முடி வளரும்.

—தொடரும்.

# தல வரலாற்றுக் குறிப்புகள்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின்! பாடிப் பணிமின்! பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

—திருமந்திரம்.

1. திருமயிலாப்பூர் :

இது தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாய், மிகவும் புகழ் பெற்றுச் சென்னை நகர்க்கண் திகழ்ந்து வருவது. ஞானசம்பந்தர் அங்கம் பூம்பாவை ஆக்கி அற்புதம் நிகழ்த்திய தலம். புகழ்மிக்க தாலமி (Ptolemy) என்னும் பண்டைக் கிரேக்க அறிஞர் (கி. பி. 140). இதனை மயிலார்பா (Mylarpha) எனக் குறித்துள்ளார். இயேசுநாதரின் சீடர்களுள் ஒருவராகிய தூய தாமசு (St. Thomas) என்பவர், இவ்வூர்க்கு வந்து வாழ்ந்திருந்து தம் சமயத்தைப் பரப்பினர் எனவும், சிலர் கூறுவர்.

உலகமே உவந்து போற்றும் திருவள்ளுவர், முதலாழ்வார்களுள் ஒருவராகிய பேயாழ்வார், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான வாயிலார் நாயனார் முதலிய சான்றோர்களின் திருவவதாரத் தலமும் இதுவே. இங்கு ஜைன சமயத்தைச் சார்ந்த நேமிநாதர் என்னும் தீர்த்தங்கரரின் கோயிலும் இருந்ததாகத் தெரிகின்றது. 'நன்னூல்' என்னும் சிறந்த தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் என்பவர் இங்குத் தோன்றியவர் எனக் கூறப்படுகின்றனர். 1300 ஆண்டுகட்கு முன்பு கி. பி. 7ஆம் நூற்றாண்டில், திருஞானசம்பந்தர் காலத்திலேயே, இத்தலம் மிகவும் சிறப்புற்று, மாடமாளிகைகள் நிறைந்ததாகவும், மலி விழா வீதிகளைக் கொண்டதாகவும் விளங்கியிருந்தது. "பல் பெருங்குடி நீடு பரம்பரைச் செல்வம் மல்கிய திருமயிலாபுரி" என்பது பெரியபுராணம். சிவபெருமானை அம்பிகை இங்கு மயில் வடிவம் கொண்டு பூசித்தார். ஆதலின் மயிலை, மயிலாப்பில், மயிலார்ப்பு, மயிலாபுரி எனப் பலவகைகளில் நூல்கள் இதனைக் குறிக்கும். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இது 'நானாதேசிகள்' கூடும் ஒரு பெருந்துறைமுகமாக (International Port) விளங்கியிருந்தது. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் (கி. பி. 825-850) மீது பாடப் பெற்ற நந்திக் கலம்பகம் என்னும் நூலில், "மல்லை வேந்தன் மயிலை காவலன் பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி" எனவரும் பகுதியில் இவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளது. தல விருட்சம் புன்னை மரம். இறைவன் கபாலீசுவரர். இறைவி கற்பகாம்பாள். மேற்கு நோக்கிய சந்நிதி. இவ்வூரில் உள்ள மாதவப் பெருமாள் கோயிலும், ஆதிகேசவப் பெருமாள் கோயிலும், திருவள்ளுவர் கோயிலும், வெள்ளீசுவரர், வாலீசுவரர் முதலிய கோயில்களும் தரிசித்து மகிழத் தக்கவை. கடற்கரைக்கு அருகில் இருந்த பழைய கோயில் போர்ச்சுகீசியராலும், கடற் பெருக்காலும் சிதைந்து போயிற்று. இப்போதுள்ள கபாலீச்சுரம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றதாகும்.

---

*[சென்னை திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற "இந்து சமயப் பரப்புநர் விளக்குநர் பயிற்சிப் பள்ளி" மாணவர்களின் சுற்றுலாவிற் பயன்படுதற் பொருட்டு எழுதப் பெற்றது.*

*—ஆசிரியர்.]*

2. திருவான்மியூர் :

இது சென்னையில் திருமயிலைக்குத் தெற்கே 3 கல் தொலைவில் உள்ளது. அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது. வான்மீகி முனிவர் பூசித்ததனால் வான்மியூர் என்னும் பெயர் பெற்றது. அகத்திய முனிவர் இத் தலத்தில் சிவபிரானை வழிபட்டு எல்லாப் பொருள்களின் குணங்களையும் அறியவும், இன்னநோய்க்கு இன்ன பொருள் மருந்தாகும் என்றுணரவும் உபதேசிக்கப் பெற்றார். மருந்துகளைக் குறித்து உபதேசித்தமையால், இறைவன் மருந்தீசர் எனப் பெயர் பெற்றார். இப்பெயர் பெரிய புராணத்தில் சேக்கிழாரால் குறிக்கப் பெற்றுள்ளது. வசிட்ட முனிவரின் சாபம் பெற்ற காமதேனு, இங்கு இறைவனைத் தன் மடியினின்று பால் சுரந்து வழிபட்டது. அதனால் சுவாமிக்குப் பால்வண்ணநாதர் என்றும் பெயர் வழங்கும். திருவான்மியூர்க் கோயில் பழமையும் பெருமையும் வாய்ந்தது. இராஜராஜ சோழன் (கி. பி. 985-1014); இராஜேந்திர சோழன் (கி. பி. 1012-1046); முதலாம் இராசாதிராசன் (கி. பி. 1018-1054) முதலிய சோழ அரசர்களின் காலத்துக் கல்வெட்டுக்கள் கோயிலில் காணப்படுகின்றன. அவற்றில் ''ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக், கோட்டூர் நாட்டுத் திருவான்மியூர்'' என்று இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் காமநாசனி, பாபநாசனி, ஜென்மநாசனி, ஞான தாயினி, மோட்ச தாயினி என ஐந்து தீர்த்தங்கள் உண்டு. தல விருட்சம் வன்னி மரம். அம்பிகையின் பெயர் திரிபுர சுந்தரி, சொக்கநாயகி. இங்குள்ள உற்சவ மூர்த்தி தியாகராஜர் ஆவர். இங்குக் கோயிலுக்கு வடக்கே சிறிது தொலைவில் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சமாதிக் கோயில் அமைந்துள்ளது. அருணகிரிநாதர் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

3. திருப்போரூர் :

சென்னைக்குத் தெற்கே 36 கல் தொலைவிலும், செங்கற்பட்டுக்கு வடகிழக்கே 16 கல் தொலைவிலும் உள்ள, ஒரு சிறந்த முருகன் தலம். கோயிற் கருவறையில் புற்று வடிவில் முருகன் காட்சி தருகின்றார். அவருக்குப் புனுகுசட்டம், கவசம் முதலிய ஆபரணங்கள் சாத்தப்படுகின்றன. இக் கோயிலுக்குப் பெருந் திருப்பணி செய்து, இதனைப் புகழ் ஓங்கச் செய்தவர், 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்னும் சிறந்த துதி நூலைப் பாடிய சிதம்பர சுவாமிகள் ஆவர். வீர சைவ சமயத்தைச் சேர்ந்த இச் சிதம்பர சுவாமிகள் (கி. பி. 17ஆம் நூற்றாண்டு), விருத்தாசலம் குமாரதேவர் என்பவரின் மாணக்கர் ஆவர். பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள், காழிக்கண்ணுடைய வள்ளலார் என்னும் இருவர் அருளிய நூல்களுக்கும், இவர் சிறந்த உரை வகுத்திருக்கின்றார். கோயிலில் புற்று வடிவிலுள்ள மூர்த்திக்கு அருகே, வள்ளி தெய்வயானை சமேதராக உள்ள முருகனின் திருவுருவம், சிதம்பர சுவாமிகளால் அபிஷேகம் முதலியன செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இம் முருகனின் திருவுருவம் பிரமனைக் குட்டிச் சிறையில் அடைத்துப் படைப்புத் தொழிலை மேற்கொண்ட நிலையில், ஜபமாலை, கமண்டலம் ஆகியவற்றுடன் காணப்படுகின்றது. காஞ்சிக் குமர கோட்டத்திலுள்ள திருவுருவமும் இத்தகையதொன்றே என்பது அறிதற்குரியது. முருகன் சூரபதுமனுடன் இத்தலத்திற்கு நேராக வான வெளியில் ஒரு நாழிகை நேரம் போர் நிகழ்த்தியருளினார். அதனாலேயே இதற்குப் போரூர் எனப் பெயர் அமைந்தது என்பர். சமரபுரி, செருவூர், போரி நகர் என வேறு பல பெயர்களும் இதற்கு உண்டு. அருணகிரி நாதர் (15ஆம் நூற்றாண்டு) இதனைத் தம் திருப்புகழில் பாடியுள்ளார். இக்கோயிலில் இரண்டாம் நரசிம்மவர்மன் (கி. பி. 686-705) காலத்துக் கல்வெட்டுக்களும் பிறவும் காணப்படுவதனால், இத்தலத்தின் பழமையும் பெருமையும் விளங்கும். இத்தலத்தில் சரவணப் பொய்கை, வள்ளையார் ஓடை, பிரணவாமிர்தம், வேலாயுத தீர்த்தம் என்னும் தீர்த்தங்கள் உள்ளன. இங்குள்ள மலை பிரணவ மலை எனப்படும். அதன்மீது கைலாச நாதர், பாலாம்பிகையுடன் எழுந்தருளியுள்ளார். இம்மலையின் சாரலில் தான் வேம்படி விநாயகர் வீற்றிருக்கின்றார். இங்குதான் சிதம்பர சுவாமிகள், முதன் முதல் வந்து தங்கினர் என்பது வரலாறு. இவ்வூரின் பகுதியான கண்ணுவப் பேட்டையில், சிதம்பர சுவாமிகளின் திருமடம், சமாதி முதலியன உள்ளன.

4. மாமல்லபுரம் :

இது சிற்பக்கலைக்கு மிகவும் புகழ்பெற்ற ஒரு சிறந்த இடமாகும். சங்க காலத்திலேயே, இவ்விடம் புகழ்பெற்ற ஒரு பெருந் துறைமுகமாக விளங்கியது. தொண்டை

மான் இளந்திரையன் மீது, கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடிய பெரும் பாணாற்றுப்படை என்னும் நூலில் (வரிகள் 311-319), 'நீர்ப்பாயல்' எனக் குறிப்பிடப் படுவது இவ்வூரே எனக் கருதப்படு கின்றது. கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் மகேந்திர வர்ம பல்லவன் (கி. பி. 600-630) மகனுகிய முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் (கி. பி. 630-668) என்னும் மாமல்லன், இவ் விடத்தைச் சிற்பக்கலைத் துறையில் மிகவும் புகழ் ஓங்கச் செய்தான். அவனது பெய ரால் அமைந்த மாமல்லபுரம் என்பதே, மகாபலிபுரம் என இந்நாளில் மருவி வழங்குகிறது. இது பண்டைக் காலத்தில் ஒரு பெருந் துறைமுகமாக விளங்கியது. இஃது ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்களுள் ஒன்று. ஊர்க்கோயிலைத் தலசயனம் என் றும், கடற்கரைக் கோயிலைச் சலசயனம் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். நாச்சி யாரின் பெயர் நிலமங்கைத் தாயார் என் பது. தலசயனப் பெருமாள் கோயிலி லிருந்து அரைகல் தொலைவில் ஞானப் பிரான் (ஆதிவராக மூர்த்தி) கோயில் உள் ளது. இங்குள்ள அழகிய பல குகைக் கோயில்களும், பஞ்சபாண்டவர்களின் தேர் கள் என வழங்கும் கோயில்களும், அருச் சுனன் தவம் அல்லது பகீரதன் தவம் எனப் படும் புகழ்பெற்ற பெரும் சிற்பங்களும், இராஜசிம்மன் (கி. பி. 686-705) கட்டிய கடற்கரைக் கோயிலும் மிகவும் வியந்து போற்றிக் கண்டு மகிழ்தற்குரியனவாகும். சிற்பக்கலை ஆராய்ச்சித் துறையில் மிகவும் ஈடுபாடுடைய 'பெர்குசன்' (Fergusson)' 'பர்ஜஸ்' (Burgess), 'வோகல்' (Vogel) 'டௌவீன்' (Touvean), 'துப்ரீல்' (Dubriel), 'லாங்கர்ஸ்ட்' (Langhurst), 'ஹீன்ரிச் ஃசிம்மர்' (Heinrich Zimmer) 'ஆனந்த குமார சுவாமி' முதலிய பல பேரறிஞர்கள், இங்குள்ள சிற்பத் திறன் களை ஆராய்ந்து வியந்து புகழ்ந்துள்ளனர். இது பூதத்தாழ்வார் அவதாரத் தலம். 'கடல்மல்லைச் சலசயனம்' எனத் திரு மங்கை யாழ்வார் பாடல்களில் இங்குள்ள பெருமாள் கோயில் புகழ்ந்து துதிக்கப் பெற்றுள்ளது.

திருக்கழுக்குன்றம் :

இது தொண்டை நாட்டுச் சிவதலங் களுள் ஒன்று. செங்கற்பட்டுக்குத் தென் கிழக்கே ஒன்பது கல் தொலைவில் உள்ளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் என்னும் நால்வர் பாடலும் பெற்றது. நான்கு வேதங்களே இங்கு மலை வடிவில் அமைந்திருப்பதாக ஐதிகம். அதனுல் வேதகிரி, வேதமலை, வேதாசலம், வேத வெற்பு, மறை மலை முதலிய பெயர் கள் வழங்கும். பூஷா, விதாதா என்னும் இரு முனிவர்கள் ஆகிய கழுகுகள் பூசித்து, இங்கு உணவு கொள்ள வருவதனுல், கழுக்குன்றம் எனவும், பட்சி தீர்த்தம் எனவும் பெயர் பெற்றது. இத்தலத்தில் கழுகுகள் வந்து உணவு கொள்ளுதல் பல நூற்ருண்டுகளாகத் தொடர்ந்து நடை பெற்று வருவதாகத் தெரிகின்றது. "ஹாவர்ட்" (Hovert) என்ற டச்சுக்காரர் தாம் எழுதிய நூலொன்றில், கி. பி. 1681-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி, இங்குக் கழுகுகள் வந்து உணவருந்திய காட்சியைத் தாமே நேரில் கண்டதாகக் குறிப்பிடுகின்ருர். கி. பி. 15-ஆம் நூற் ருண்டில் விளங்கிய அருணகிரி நாதரும், 'கழுகு தொழு வேதகிரி' என்று குறிப் பிட்டிருத்தல் அறிந்து மகிழத்தக்கது. கோடி உருத்திரர்கள் வழிபட்டதனுல், இதற்கு 'உருத்திர கோடி' என்றும் ஒரு பெயர் உண்டு. உருத்திரர்கள் வணங்கிய 'உருத்திரன் கோயில்' என்பது இவ்வூரின் தென்கிழக்கே உள்ளது. மலைமேல் உள்ள கோயில் மகேந்திரவர்மன் காலத் தது. மலையில் உள்ள ஒரு கற்குடைவரை மண்டபம், அவன் காலத்ததேயாகும். கீழே உள்ள தாழக் கோயில், பக்தவத்சல ஈசுவரர் ஆலயம் என்னும் பெயருடையது. மலையில் உள்ள அம்பிகை சொக்கநாயகி; தாழக் கோயிலிலுள்ள அம்பிகை திரிபுர சுந்தரி. விநாயகர் வண்டுவனப் பிள்ளை யார். இங்குள்ள சங்கு தீர்த்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறக்கின்றது. அவ்வாறே தேவேந் திரன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு இறைவனைப் பூசிப்பதாகவும், அப்பொழுது மலை உச்சிக் கோயிலின் மீது இடி அபிஷேகம் நிகழ்வதாகவும் கூறுகின் றனர். கி. பி. 1889-ஆம் ஆண்டிலும், 1901-ஆம் ஆண்டிலும் இடியபிஷேகம் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது. இக் கோயி லில் பல்லவர், சோழர், பாண்டியர், இராஷ்டிர கூடர், விஜயநகர மன்னர் ஆகி யோர்களின் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. கல்வெட்டுக்களில் இவ்வூர் உலகளந்த சோழபுரம் என வழங்கப்படு கின்றது. அந்தகக் கவி வீரராகவ முதலி

யார் என்னும் பெருங் கவிஞர், இதற்குத் தலபுராணம் பாடியுள்ளார். தலவிருட்சம் வாழை மரம்.

6. மதுராந்தகம் :

இது சென்னைக்குத் தெற்கே 50 கல் தொலைவில், செங்கற்பட்டுக்கு அருகே உள்ளது. மதுராந்தக சோழன் பெயரால் அமைந்ததாகலின், இஃது இப்பெயர் பெற்றது. இஃது ஒரு சிறந்த வைஷ்ணவத் தலம் எனலாம். இராமாநுஜருக்குப் பெரிய நம்பிகள் தாபம், புண்டரம், நாமம், மந்திரம், வாகம் என்னும் பஞ்ச சமஸ்காரங்கள் செய்தருளிய தலம் இதுவே. இதற்கு வகுளாரண்யம் என்பது பழைய பெயர். 1937-ஆம் ஆண்டில் திருப்பணி நிகழ்ந்த பொழுது இங்குள்ள கோயிலின் சுரங்க அறையிலிருந்து, சங்கு சக்கரம் நவநீதகிருஷ்ணர், மற்றும் பூசைப் பாத்திரங்கள் முதலியன கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. பெரிய நம்பிகள் பூசித்தனவாக, அவைகள் இருத்தல் கூடுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குள்ள ஏரிகாத்த பெருமாள் ஆகிய கோதண்டராமசுவாமி கோயில் மிகவும் புகழ் வாய்ந்ததாகும். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் 'லியானர்டு பிளேசு' (Leonard Place) என்னும் ஆங்கிலேய அலுவலர்க்கு (Collector), இராம இலக்குவர்கள் காட்சி தந்தனர் என்றும், அவர்தம் பிரார்த்தனையின்படி பெருமழையில் நேர்ந்த வெள்ளத்தால் முன்னர்ப் பன்முறை ஏரிக்கரை உடைந்து சேதம் விளைத்தவாறு நிகழாதபடி ஏரிக்கரையைக் காத்து அருளினர் என்றும், அதனுல் அத்தெய்வத் திருவருளைக் கண்டுணர்ந்து வியந்த அவ்வாங்கில அலுவலர் அக்கோயிலுக்குத் திருப்பணி செய்தனர் என்றும் வரலாறு கூறுகின்றது (கி. பி. 1798). இங்கு வெண்காட்டீசுவரர் என்னும் சிவன் கோயிலும் சிறப்புற அமைந்துள்ளது. கோதண்டராம சுவாமி ஆலயம் ஸ்ரீ அகோபில மடத்தின் அருளாட்சியில் உள்ளது. இராமபிரான் இலங்கையில் இராவண வதம் செய்து புஷ்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்பும்போது, இங்கிருந்த விபாண்டக முனிவரின் ஆசிரமத்திற்கு எழுந்தருளினர். விமானத்தினின்று இறங்கும் சீதைக்குக் கைகொடுத்து அணைத்து உதவி செய்யும் நிலையில் இங்கு இராமபிரானின் திருவுருவம் அமைந்துள்ளது. இதனை ஹஸ்த வாலம்பன தரிசனம் என்பர். இது வேறு எங்கும் காண முடியாத சிறப்புக் காட்சியாகும்.

7. திருவெண்ணெய் நல்லூர் :

இது நடுநாடு அல்லது திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த பாடல் பெற்ற சிவத் தலங்களுள் ஒன்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்று, அவர் அடியெடுத்துத் தர, 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கும் தேவாரம் பாடிய திருத்தலமாகும். 'சிவஞானபோதம்' என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலை அருளிய மெய்கண்ட தேவர் வாழ்ந்ததும், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றுத் தங்கித் தமது இராமாயணத்தில் பெரும் பகுதியைப் பாடியதும், இத்தலமேயாகும். உமா தேவியார் இங்குப் பசு வெண்ணெயினுல் கோட்டை கட்டி, அதன் நடுவே பஞ்சாக்கினியை வளர்த்துத் தவம் புரிந்து, சிவபிரான் திருவருள் பெற்றமையினுல், இதற்குத் திருவெண்ணெய் நல்லூர் எனப் பெயர் வந்தது. இங்குள்ள கோயிலுக்கு அருட்டுறை (அருள்+துறை) என்பது பெயர். சுந்தரர் இதனைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவருக்கும் முன்னரேயே இப்பெயர் வழங்கி வந்தமை, 'பெண்ணை அருட்டுறை தண் பெண்ணுகடம்' என க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில், திருநாவுக்கரசர் பாடியிருத்தல் கொண்டு உணரப்படும். சுவாமி அருட்டுறை நாதர், தடுத்தாட்கொண்ட தேவர், கிருபாபுரீசுவரர் என வழங்கப் பெறுவர். அம்பிகைக்கு வேற்கண் மங்கை என்பது பெயர். இத்தலத்து விநாயகர் 'பொல்லாப் பிள்ளையார்'. உளியால் செய்யப்படாத சுயம்பு மூர்த்தி என்பது இதன் பொருள். கோயில் கல் வெட்டுக்களில், தடுத்தாட்கொண்ட நாயனுர், பிச்சன் என்று பாடச் சொன்னுன், ஆலாலசுத்தரப் பெருமான், ஆளுடைய நம்பி, பித்தன், விருத்த வேதியன், ஆவணங்காட்டி ஆட்கொண்டான் முதலிய தொடர்கள் வருதல், பெரிய புராண வரலாற்றுக்குச் சான்ருகப் பெருந் துணை பயக்கின்றது. அருணகிரிநாதர் திருப்புகழும் இத்தலத்திற்கு உள்ளது. சுந்தரரின் தாய் தந்தையர் ஆகிய சடையனுர், இசைஞானியார் ஆகியவர்கள் வாழ்ந்த பதி.

8. திருநாவலூர் :

இஃது இந்நாளில் திருநாம நல்லூர் என மருவி வழங்குகின்றது. விழுப்புரம்-திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில் இருந்தை என்னும் நிலையத்துக்குக் கிழக்கே, 3 கல் தொலைவில் உள்ளது. சுந்தரர் அவதாரம் செய்த தலம். சுந்தரரை அன்பினால் மகன்மை கொண்டு வளர்த்த நரசிங்கமுனையரையர் என்னும் அரசர் வாழ்ந்து வந்த தலம். 'நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட் செய்யும் ஊர் அணி நாவலூர்' என்பது சுந்தரர் தேவாரம். தலவிருட்சம் நாவல் மரம். இறைவன் நாவலீசுவரர். இறைவி சுந்தர நாயகி, மனோன்மணியம்மை. கோமுகி தீர்த்தம், கெடிலநதி. இங்குள்ள கோயிலின் பழைய பெயர் திருத்தொண்டீச்சரம். முதற்பராந்தக சோழனது (கி.பி. 907-953) முதல் மகனாகிய இராசாதித்தன் இக்கோயிலைக் கருங்கற்றளி ஆக்கினான். ஆதலின் இராசாதித்த ஈசுவரம் என்றும் கல்வெட்டுக்கள் இக்கோயிலைக் குறிக்கும். இவ்வூரில் அகத்தீசுவரம் என்னும் ஒரு சிவன் கோயிலும், திருமேற்றளி மகாவிஷ்ணு எனக் கல்வெட்டுக்கள் குறிக்கும் ஒரு பெருமாள் கோயிலும் உண்டு.

9. திருவாமூர் :

இது பண்ணுருட்டிக்கு அருகில் உள்ள திருவதிகை என்னும் தலத்திற்கு மேற்கே 5 கல் தொலைவில் உள்ளது. இது திருநாவுக்கரசர் அவதாரத் தலம். அவர் அவதரித்த திருமனையின் சூழலில், அண்மையில் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பெரு முயற்சியினால், கோயில் அமைக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்தில், "சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தகைமையினால் சிவம் பெருக்கும் திரு ஆம் ஊர் திருவாமூர்" என அழகுறக் குறிப்பிட்டுள்ள அருமைப்பாடு போற்றி மகிழ்தற்குரியது. அருணகிரிநாதர், திலகவதியாரின் சிறப்பை நினைந்து வியந்து போற்றும் முறையில் "மாது புகழை வளர்க்கும் திருவாமூர்" என அருளிச் செய்திருப்பதும் நாம் சிந்தித்து மகிழ்தற்கு உரியது. திலகவதியாருக்கும், திருநாவுக்கரசர்க்கும் தாய் தந்தையர்கள் ஆகிய புகழனாரும், மாதினியாரும் இல்லறம் நடத்தி வாழ்ந்த தலமும் இதுவேயாகும். இங்குள்ள சிவாலயத்தில் விளங்குபவர் பசுபதி ஈசுவரர். அம்பிகை திரிபுரசுந்தரி. தல விருட்சம் கொன்றை மரம்.

10. திருவதிகை :

இது பண்ணுருட்டி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து தென் மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. திருநாவுக்கரசர் சூலை நோய் தீர்ந்து 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிய தலம். சிவபிரான் தமது அட்ட வீரட்டங்களுள், திரிபுர தகனம் நிகழ்த்திய சிறந்த தலம். இங்குக் கருடன் பிரமன், திருமால், பஞ்ச பாண்டவர் ஆகியோர் வழிபட்டு அருள் பெற்றனர். திருஞான சம்பந்தருக்கு இறைவன் திருநடனக் காட்சி வழங்கிய தலம். இறைவன், சித்தவட மடத்தில் தங்கித் துயில் கொண்டிருந்த சுந்தரருக்குத் திருவடி தீட்சை செய்தருளியதும், சுந்தரர் 'தம்மானை அறியாத சாதியார் உளரே'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியதும், இத்தலத்திலேயே ஆகும். இங்குப் பல்லவ அரசர், சோழ மன்னர், பாண்டிய வேந்தர், விஜயநகர அரசர் முதலிய பலரின் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. அதியரைய மங்கலம், அதிராச மங்கலம், அதிராச மங்கலியபுரம் எனவும், அதிகை எனவும் இத்தலம், கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றது. இத்தலத்து இறைவனின் கோயிலை நிருபதுங்க தேவரின் 13-ஆம் ஆண்டில் முனையர்கோன் இளவரையர் என்பவர் புதுப்பித்தார். இறைவியின் கோயில் ஆகிய திருக்காமக் கோட்டம் என்பதனை, முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1122), விக்கிரம சோழன் (கி. பி. 1122-1135) ஆகியவர்களின் படைத் தலைவராயிருந்த மணவிற் கூத்தன் காலிங்கராயன் என்றவர் கட்டுவித்தார். அவர் இக்கோயிலுக்குப் பொன் வேய்ந்ததாகவும் ஒரு கல்வெட்டுப் பாடல் கூறுகின்றது. அப்படைத் தலைவரே இங்கு நூற்றுக்கால், மண்டபம் திருமடைப்பள்ளி, பெரிய திருச்சுற்று, யாக மண்டபம், ஆடலமர்ந்த பிரான் கோயில் அரங்கு ஆகியவற்றையும் அமைத்தார். இக்கோயிலில் திரிபுர சங்கார தேவர் திருமுன்புள்ள அலங்கார மண்டபத்தின் இரண்டு தூண்களில், கல்வெட்டுப் பாடல்கள் பல காலிங்கராயரைக் குறிப்பனவாக அமைந்துள்ளமை அறிந்து மகிழத்தக்கது. இறைவன் வீரட்டானேசுவரர். இறைவி திரிபுர சுந்தரி. தீர்த்தம் கெடில நதி, ஆலகங்கை, சக்கர தீர்த்தம். தல விருட்சம் சரக் கொன்றை.

(தொடரும்)